பதிவு எண் 2041

கதர் வாழ்க!

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா
வெளி நாடு 1½ அணா



வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா " ...	ரூ 1-12
வெளி நாட்டிற்கு " ...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ.	8.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ.	2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்	

மாலை 3 | ஈரோடு, பிரபவ ௵ கார்த்திகை மீ 26௳ (11—12—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 33

கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்த பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மிகவு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916௵ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும் தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர்ஜவுளிதினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இரு முறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

“குடி நூல்”

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

மின்சார ரசம்.

சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியமில்லை! மின்சார ரசம். அநுபானமில்லை! மின்சார ரசம்.

இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம். மனிதன் தலைமுதல் கால் வரையில் வரும் எல்லா ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்றதென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

REGISTERED TRADE MARK MINSARA RASA

எச்சரிக்கை:- ரிஜிஸ்டிரான டிரேட்மார்க்

துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களை தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சிரமத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! உங்களை ஆச்சரியமுறச் செய்யும்! கேட்லாக் இனம். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

விலாசம்:- **மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.**

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மெசர்ஸ். T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.

மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd.

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

நார்பட்டு புடவைகள்.

தினப்படி உபயோகப்படுத்தலாம்.

சாயத்திற்கு காரண்டி சரிகை சுருங்காது.

2½ அகலம் 16 முழம் நீளம் உடல் மஞ்சள் கருபபுக்கோடு, வாழைப்பூ, ஊசிவர்ணம், தண்டவாளம் முதலிய பல ரகங்கள் உண்டு. இருகரை சிகப்பும் ஒரு கரை மஞ்சளும் உண்டு. சேலை 1-க்கு 11—12—0.

சரிகையினால் இருகரைகளிலும் ரோஜா, கொடி, கிளாவர், இஸ்பேட், முதலிய பேட்களும், முந்தியில் சரிகையும், புளூ, ரோஸ், ஊதா, சாக்லெட் முதலிய பலவித கலர்கள் உண்டு. 2½ அகலம் 16 முழம் சேலை 1-க்கு ரூ. 16-8-0.

N. B. மேல்கண்ட சேலைகள் தினப்படி துவைக்கலாம்.

வி பி. தபால் பாக்கிங் சிலவு வேறு.

முன்பணம் அல்லது அட்வான்சு அனுப்பவேண்டும். ஏஜண்டுகள் தேவை. வியாபாரிகளுக்கும் கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர், ஸ்ரீ சௌடாம்பிகா ஜவுளி வர்த்தகசாலை,
உறையூர் P. O, திருச்சி.

சிங்கப்பூரில்

'குடி அரசு"

கிடைக்கும் இடம்:—

பிரிட்டிஷ் & அமெரிக்கன்
நியூஸ் ஏஜென்ஸி,
நெ. 6 பேட்டரி ரோட்டு,
சிங்கப்பூர்.

அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

20 சாம்பிள் பாக்கெட்	ரூ. 2—0—0
10 ,, ,,	ரூ. 1—4—0
நாட்டுக் காய்கறி 20	ரூ. 2—8—0

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்நர்சரி தோட்டம், சேலம்.

"குடி அரசு" நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், இடது ஓரத்தில் ஒரு அங்குல இடம்(மார்ஜின்)விட்டு, வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனிப்பட்ட நபர்களைக்குறித்து அனுப்பப்படும் கண்டனங்களும் ஊர்வம்பு விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

சந்தாதாரர்கள் எழுதும் கடிதங்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் ரிஜிஸ்டர் நம்பரைச் சந்தா நெம்பராக நினைத்து அந்நெம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். சந்தா நம்பர் என்பது ஒவ்வொரு விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந் நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கவனிக்கப்படமாட்டாது.

நிற்க, சந்தாதாரர்களில் சிலர் தங்களது சந்தா காலம் தீர்ந்தும் பணம் அனுப்பாமலிருப்பதால் அவர்களுக்கு வி. பி. அனுப்பியிருக்கிறோம். நண்பர்கள் அவைகளை கௌரவித்து 'குடி அரசை' ஆதரிக்கவேண்டுகிறோம்.

மானேஜர்.

வாலிபர்களுக்கு.

(கைவல்லிய சாமியார் எழுதுவது)

பழையகாலத்தில் ஜாதிக்கட்டினால் நாம் சர்வ ஜனங்களுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளில் தவறாமலிருந்தோம் என்பதைப் பெருமையாகச் சொல்வதானாலும் அது குறுகின களம் என்பதை எல்லா அறிவாளிகளும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் பிறந்த கிராமமே ஸ்வதேசமென்று நினைத்துக்கொண்டிருந்தோம். இருந்தாலும் அதன் வரம்புக்குள் செல்வர் தமது செல்வப் பொறுப்பையும் புலவர் தமது புலமைக் கடைமையையும் உணர்ந்திருந்தனர். முயற்சியும் பொறுப்புமுள்ள அவ்வித வாழ்க்கையில் மனிதர் மகிழ்ச்சியுறவும் பெருமை கொள்ளவும் இடமிருந்தது. ஆனால் நம் பொறுப்புகள் ஜாதிக்கட்டிலிருந்து விலகி விட்டன. இப்பொழுது நமக்கு நியாயம்செலுத்துவதும்சர்க்கார்,காப்பாற்றுவதும் சர்க்கார், வைத்தியம் செய்வதும் சர்க்கார். இந்து சாஸ்திரத்திற்கு அடுத்தது அடுக்காதது எது என்பதையும் சர்க்காரே தீர்மானம் பண்ணுகிறது; நமக்கு லாகிரி வஸ்துக்கள் தயார் செய்து கொடுப்பதும் சர்க்கார். எல்லாவித கர்மத்திற்கும் தக்ஷிணை கொடுக்கவேண்டுமென்று தந்திரமாக எப்படி எட்டில் எழுதி வைத்திருக்கிறதோ அது போலவே ஒரு கிராமத்தானை புலி தின்று விட்டால் மாஜஸ்டிரேட்டுக்கும் அவருடைய சிநேகிதர்களுக்கும் வேட்டைக்குப் போக சௌகரிய மேற்படுத்திக்கொடுப்பதும் சர்க்கார். நமது ஜாதிக்கட்டின் விதிகள் நம்மால் பொறுக்க முடியாதபடி பாரமாய் விட்டன வென்பது மெய்யென்பதில் சந்தேகமில்லை. பாப்பான்கள் தம் ஆசார அனுஷ்டானங்களை வீசி எறிந்து விட்டு, படிப்பும் நல்ல உபதேசங்களும் சொல்லிக்கொடுப்பதையும் நிறுத்தி விட்டுத் தக்ஷிணைக்கும் பணத்திற்கும் மித்திரபேதம் செய்து விவகாரத்தை வளர்த்துகிறார்கள். அதைச் சொன்னால், அப்பார்ப்பான்கள் சர்க்காரில் பெரும் பதவி வகிப்பதாலும், சர்க்காரைச் சுற்றி அவரேவலில் நிற்றலாலும், அதை மறைத்துத் தங்கள் காரியங்களை நிலைநிறுத்திக்கொள்ளுகிறார்கள். ஜமீன்தார்கள் குடித்தனக்காரரைக் கசக்கி இலவச வேலையும் வாங்கிக்கொள்ளுகிறார்கள். பிரதி உபகாரம் கிடையாதென்று குடித்தனக்காரர்கள் கூக்குரல் போட்டால், பணத்தாலும் பக்கத்து சகாக்களாலும், பெரிய உத்தியோகஸ்தர் கூட்டுறவாலும் அக்குடித்தனக்கார ஏழைகளை ஜமீன்தார்கள் அடக்கிவிடுகிறார்கள். மேற்குலத்தார் தாங்கள் எப்படி நடந்தாலும் தங்களைப் பொது ஜனங்கள் மேற்குலத்தாரென்றே நினைத்து அடிமை பூண்டிருக்க வேண்டுமென்கிறார்கள். மேற் குலத்திற்கு வேண்டிய எந்த யோக்தையையும் காப்பாற்றுவது மில்லை. எந்த குணம் இழிகுலத்தின் குணமென்கிறார்களோ அந்த இழிகுணத்தை அனுசரிப்பதற்கு சிறிதும் பயப்படுவதுமில்லை. "இழிவான செய்கை எல்லாம் செய்து விட்டு மேற்குலமென்கிறாயே!" என்று கேட்டால் தங்களுக்குள்ள ஆதிக்கத்தினால் விவகரித்து, அக்குணங்கள் சட்டத்திற்குள் வராதென்றும், சட்டம் பிரவேசிக்க அதிகாரமில்லை என்றும், வழமை சட்டத்திற்கு மேற்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். எல்லாமதங்களிலும் மனிதன் இறந்தபின் விசாரணைக் கோர்ட்டு உண்டு. இந்து மதத்தில் அவனவன் செய்யும் பாவபுண்ணியம் அவ்வப்பொழுதே அவனவன் ஆத்மாவை பற்றிக்கொள்ளுமென்பதை பார்ப்பான்கள் அலட்சியப்படுத்தி விடுகிறார்கள்.

நமது சடங்குகள் வீண் செலவு மிகுந்தும், சிநேகவழி குறைந்தும், வேஷமாத்திர மாயின. இதிலுள்ள நன்மை தீமைகளை நிச்சயிப்பதில் நம்மிடமுள்ள தைரியமும் நிச்சயமும் நீடித்து நிற்பதில்லை. நாமும் பிறவி முதல் கட்டுப்படக் கற்று, அவிழ்க்கக் கற்காமல் நமக்கு நேரிடும் சகல விபரீதங்களுக்கும் குருக்களையும் புரோகிதர்களையும் கும்பிடுகிறோமே! அப்பொழுதாவது நம் கஷ்டங்கள் தீர்ந்து பிராயச்சித்தமடைகிறோமா? நாம் பற்று வைத்திருக்கும் பெண்ஜாதி பிள்ளைகளுக்கோ காசு பணத்திற்கோ கஷ்டம் வருவதென்று நினைத்தாலே புரோகிதனும் தெய்வ ஆராதனையும் வந்துவிடுகிறது. அருமைக் குழந்தைக்குச் சுரம் நாலுநாள் விடாமல் அடித்தால் எத்தினை டாக்டர்கள் தைரியம் சொன்னாலும், நவக்கிரக ஜெபம், ஆயுசு ஓமம், பிராமண சமாராதனை, கோவில் அபிஷேக உண்டியல் யாதிரை இத்தனையும் வேண்டியிருக்கிறது. மருந்து கொடுப்பது நிற்பதுமில்லை. டாக்டர் பணம் மிச்சமாவதுமில்லை. இந்தக் கர்மங்களெல்லாம் நடத்தமுடியாமலா பணக்காரப் பிள்ளைகள் வியாதியினால் சாகின்றன? காய்ச்சல் வியாதியினால் ஆஸ்பத்திரியில் பிழைப்பவர்கள் தொகை அதிகம். அதிலுமதிகம் அலட்ட ஆளில்லாமல் காட்டுத்தழைக் கஷாயத்தால் பிழைப்பவர்கள். கிரியைகளும் அபிஷேகங்களும் நடத்தியும் கபவாத சுரம் (நிமோனியா) அநேகரைக் கொன்றுவிட்டது. அந்த சுரமுள்ளவர்கள் அடிக்கடி உட்காரவும் பேசவும் கூடாது. சாமி பிரசாதத்தினாலும், தீபாராதனையாலும் ஓமப்புகைப் படத்தினாலும் இன்னும் இவைபோன்றவற்றில் ஈடுபடுவதனாலும் மாரெல்லாம் சளி வியாபித்து வியாதி அதிகப்பட்டு தொந்தரவுக்கு கொண்டுவிடுகிறது. பூசாரிக்கோ குருக்களுக்கோ புரோகிதனுக்கோ நவக்கிரகங்களுக்கோ சுரத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவனவன் தக்ஷிணைக்கு அவனவன் எஜமானை திருப்தி செய்கிறான். அதனால் வரும் கெடுதல் இவனுக்கும் தெரிவதில்லை எஜமானுக்கும் தெரிவதில்லை. பின் எல்லாம் கடவுள் செயலென்று கடவுள் தலையில் விடிகிறது. எல்லாம் அவர் தலையிலேயே போட்டுப் போட்டு அவரும் கோவிலை விட்டுப் போய்விட்டார். பிராயச்சித்தங்களைத் தள்ள முடியாமல் ஒத்துக்கொள்ளும் சமயம் பாப்பானுக்குத் தெரியும். நாம் செய்யும் கிரியை நமக்குச் சம்மந்தமில்லாவிட்டாலும், பெண்களின் ஏற்பாடு, சம்மந்தி திருப்தி, உலுத்தனென்று பாப்பான் திட்டாதிருக்க வேண்டும் என்கின்ற ஆசையாகிய இவைகளில் ஏதாவதொன்று நம்மைப் பிடித்துக் கொள்ளுகிறது. பணத்தையும் செலவு செய்து, பண்ணாத தந்திரமெல்லாம் பண்ணி, படாத பாடெல்லாம் பட்டு, பக்கத்து வீட்டாருக்கும் சொல்லாததெல்லாம் சொல்லி, எலக்ஷனில் வெற்றியடைந்தாலும் அவர்களும் கோவிலுக்குக் குருக்களுக்குமே பூரி தக்ஷிணை கொடுத்து நன்றி செலுத்துகிறார்கள்.

நம்முள்ளே சில்லரைச் சண்டை, அற்பப்பகை, அற்பப்பொறாமைகளுக்கெல்லாம் இதுவன்று காலம் என்று எல்லாரும் புத்தி சொல்லுகிறார்கள். வித்தியாசத்திற்கு ஒரு காரணம் வேண்டும். அந்த காரணமென்ன? அதைத்தெரிந்தவர்களே அதைப்போக்கப்பிரயத்தினமும் செய்யாமல் தாங்களும் நடக்காமல், ஒற்றுமையாக இருங்களென்று சொல்லுகிறார்கள். பழைய நாடகங்களில் சூத்திரதாரியென்று ஒரு வேஷதாரி முதல் முதல் வந்து சொல்லும் சில பந்திச் சொற்களுண்டு. அது முன் எல்லா நாடகமேடைகளிலும் ஒரே பாடமாக நடக்கும். அதுபோலவே மேடை ஏறிப் பேசும் ஒவ்வொரு ராஜீயக் கட்சியும் "ஒற்றுமை வேண்டும், எல்லாரும் சகோதரர்கள் போல் நடக்கவேண்டும்" என்று சொல்லும் சிலவார்த்தைப் பந்திகளிருக்கின்றன. அதை யெல்லாரும் தன்னை விட்டு விட்டுப் பேசுகிறார். கேட்பவர்களும் மற்றவர்களுக்குச் சொன்னதாக நினைத்துக் கொண்டு தம்காரியத்திலேயே கண்ணாயிருக்கிறார்கள். பொட்டுக் கட்டுவது சமூகத்திலிருந்து நீங்கவேண்டுமென்று எல்லாரும் நினைக்கிறார்கள். அதில் சுயாராஜ்யக்கட்சி பிரமுகர்களுக்குக் கிருத்திரிமம் தோன்றுமானால் நம் தேசத்தின் பொறுப்புக்கு இவர்கள் எத்தனைத் தகுதி யுடையவர்கள் என்பதை யாலோசித்துப் பாருங்கள். கோவிலுக்குப் பொட்டுக் கட்டுகிறவர்களில்லாவிட்டால் மதத்தின் யோக்கியதை போய்விடுமென்று சுயராஜ்யக்கட்சி சொல்லுவதானால் சிதம்பரம் பிள்ளையவர்கள் சொன்ன நாலுவித சுயராஜ்யத்திற்கும் நாம் லாயக்குடையவர்களல்லவென்பதை இன்னொரு "மேயோ" வந்து சொல்லவேண்டியதில்லை.

இரத்தினங்களுக்கெல்லாம் இமிடேஷன் வந்துவிட்டது. பட்டுக்கும் இன்னும் சில வற்றிற்கும் அப்படியே. இவைபிரகாசத்திற்கும் பார்வைக்கும் நோட்டம் தெரியாதவர்களுக்கு ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லை. ஆனால் குணமில்லை, நீரோட்டமில்லை, மதிப்பில்லை, ஊட்டமில்லை, நீண்ட பழக்கத்திற்கு நிற்பதில்லை. அதுபோலவே, நமது நாட்டு ராஜீயகட்சிகள் பேசுவது இலக்கிய இலக்கணப் பிழையில்லாமல் அடுக்கடுக்காக ஒரே நீளமாக ஆடம்பரமாக இருந்தாலும், அதில் ஜீவசத்தில்லை. இப்பேச்சின் அடக்கமும். ஆழமும் உயிரின் நுட்பமான போட்டிக்கு வரும்போது காணாது மறைந்துபோகவேண்டியிருக்கிறது. அதனால் தான் நம் சபைகளை மேனாட்டார் மதிப்பதில்லை. இதை விட பெருங்கேடு யாதெனில் இந்த தன்னலக்கோணல் நீதியானது தேசபக்தி யென்ற பகட்டான பேர் புனைந்து கொண்டு தன்னை ஒரு மேலான தர்மமாக காண்பித்துக்கொண்டு திரிகிறது. அலறுகிற தனது தொத்துநோயை நாடுமுழுதிலும் பரப்பித்தன் ஜ்வரத்தை ஆரோக்கியத்தின் சிறந்த குறி என்று முழக்குகிறது. இயற்கையில் தீங்கில்லாத ஜனங்களின் மனதில் பொறாமையையுண்டாக்குகிறது.

நாளுக்கு நாள் கீழேயே போய்க்கொண்டிருக்கின்ற நமது ஜன சமூகம் மதத்தின கொடுமையால் தாழ்த்தப் பட்டு மிதியுண்டு எலும்பொடிந்து நிமிரச் சக்தியற்றுக் கஷ்டப்படுகிறவர்களுக்காகபாடுபட வந்திருக்கும் வாலிபர்களே! உங்களுடைய இரக்க குணத்தை எளியோர், அறிவீனர், கஷ்டப்படுவோர் இவர்களிடம் எப்பொழுதும் செலுத்துங்கள். குகனை தாழ்ந்தஜாதியானை அணைத்துக்கட்டிக்கொண்ட ராமரும், எல்லோரும் சமமென்று உபதேசித்த கிருஷ்ணனும், சாஸ்திரம் வீண் சடங்குக் குப்பைகளெல்லாம் தள்ளப்படவேண்டுமென்று சொன்ன புத்தரும், புழுதியோடுகிடந்த பிள்ளை வணங்கா வல்லியான மல்லக ஜிட்டியை எடுத்து மார்புறத்தழுவி, எல்லோருக்கும் சொர்க்கவாசல் ஒன்றே அது எல்லோருக்கும் எப்பொழுதும் திறந்தேயிருக்கிறது என்ற ஆசான் உபதேசத்தை கோபுரத்தின்மேலிருந்து எல்லோரும் எடுத்துக்கொள்ள வீசி எறிந்த ராமாநுஜாச்சாரியாரும், நம் தெய்வத்தின் அவதாரங்களல்லவா? தற்கால உலக சாஸ்திரத்தின் பயங்கரமான எதிர்ப்பினால் தீங்கடையும் சாஸ்திரக்குப்பைகளெல்லாம் நம்மைவிட்டு நீங்கினாலொழிய நாம் முன்னேறக்க முடியாது என்பதை நீங்கள் முதலில் சரியாய்த்தெரிந்துகொள்ளுங்கள். பெரிய கொடுங்கோன்மையாளனாகிய ஒரு கடவுள் உட்கார்ந்திருக்கிறார், அவசியமானதையும் கடமையானதையும் விட்டு விட்டு வீண் சடங்குகளைச் செய்து பாப்பானுக்கு கொடுப்பதை மட்டும் கணக்கு வைப்பதற்கு அவருக்கு அயோக்கிய குமாஸ்தாக்களில்லை என்பதையும், சத்தியம், அன்பு, கருணை, உபகாரம், ஒழுக்கம் இதுவே ஒவ்வொரு மதத்திலும் கடவுள் சன்னிதானத்திலும் சட்டமாக்கப்பட்டிருக்கிற தென்பதையும் நீங்களும் தெரிந்து உயர்ந்த ஜாதி என்பவர்களுக்

இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

திருவள்ளுவரும் துறவிகளும்.

கட்டுரை 4.

சிதம்பரனார் எழுதுவது.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணம் அறிவுடைய தலைவர்களே யாவார்கள். அத்தலைவர்களும் தனக்கென வாழாப்பிறர்க்குரியாளராயிருத்தல் வேண்டும். தந்நலம் கருதாத உயரிய குணத்தைப் பெறுதல் எளிதான காரியமன்று. எத்தகைய பேரறிஞர்களும் சில சமயங்களில் தந்நலத்தில் ஈடுபட்டு நிற்பதை இஞ்ஞான்றும் கண்கூடாகக் காணலாம். பொதுவாக இல்லறத்திலிருப்போர் தந்நலத்தை யொழித்து உலகவாழ்க்கையை நடத்துவ தென்பதும் அருமையானதாகும். எப்பற்றும் அற்ற ஒப்பற்ற துறவிகள்மட்டுந் தன்னலங்கருதா தன்மையைக் காணலாம். இந்நாளில் அத்தகைய துறவிகள் முயற் கொம்பும், குதிரைக் கொம்பும், ஆகாயப்பூவும், கானல் நீரும் நிறைந்திருப்பது போலவே நிறைந்திருக்கின்றார்கள். பண்டைக்காலத்தில் நம் நாட்டில் உண்மைத் துறவிகள் பலர் நிறைந்திருந்தனர். அவர்கள் நாட்டிற்குத் தொண்டு செய்ததன் பலனே நம் நாடு உயரிய நாகரிகத்திலிருந்ததாக வரலாற்று வாயிலாலறிகின்றோம். துறவிகளின் வேலை சமூக ஊழியமாகும். அறத்தின் பெருமையைப் பற்றியும், அறவழியில் நடக்கவேண்டிய முறையைப் பற்றியும், பொருளீட்டும் முறைகளைப் பற்றியும், அதனைக் காப்பாற்றிச் செலவிடும் முறைகளைப் பற்றியும், வாழ்க்கையை இன்பமாக நடத்துவதற்கு வேண்டிய வகைகளையும் மக்கட் சமூகத்திற்கு உணர்த்த வேண்டியது துறவிகளின் கடமையாக விருந்தது. இத்தகைய துறவிகளைப்பற்றியே திருவள்ளுவர் மிகவும் பாராட்டிக் கூறுகின்றார். "ஒழுக்கத்தோடு கூடிய துறவிகளின் பெருமை பெருமையுடைய பலவற்றுள்ளும் பெருமையாகக் கொள்ளப்படும். இதுவே நூல்களின் முடிபாகும்" என்றும், "துறந்தவர்களின் பெருமையை அளவிட்டுக் கூறத்தொடங்கினால், அது, இவ்வுலகத்தில் இதுவரையிலும் பிறந்து இறந்தவர்கள் எவ்வளவு பேர் என்று எண்ணத் தொடங்கும் தன்மையை ஒக்கும்" என்றும், "நன்மைகளையும் தீமைகளையும் ஆராய்ந்தறிந்து, உலகிற்கு நன்மை செய்யும் பொருட்டே துறவறத்தை மேற்கொண்டவர்களின் பெருமையே உலகில் சிறந்து விளங்கும்" என்றும் உண்மைத் துறவிகளின் பெருமையைக் கூறுகின்றார்.

தான் மேற்கொண்ட செயலை எவ்வகையிலும் முடிக்கின்றவனே உண்மை வீரனாவான். தனது மனச்சாட்சியின்படி நடக்கின்றவனே உண்மை வீரன். தனது அறிவுக்கும், மானத்திற்கும் இழுக்கு வராமல் நடந்து கொள்ளுகின்றவனே உண்மை வீரன். உடல் வலிமையைவிட மனோ வலிமையே பெரிது. மனோவலிமையில்லாவிடத்து உடல் வலிமையிற் பயனில்லை. யானைக்கு உடல் வலிமை மிகுதியென்றாலும், மனோதைரியம் போதாமையால் சிங்கத்தைக் கண்டால் அஞ்சி நடுநடுங்குகின்றது. ஐம்புலன்களை அடக்கி யாளுதல் யாவருக்கும் அருமையாகும். ஐம்புலன்களை யடக்கியவர்களே உண்மை வீரர்கள். உண்மை ஞானம்கை வரப்பெற்றவர்களும், "பேசாமலிருக்கின்ற ஆனந்த நிட்டைக்கும் அறிவிலாப் பேதைக்கும் வெகுதூரமே" என்று கதறுவார்களாயின் ஐம்புலன்களை அடக்கியாளும் அருமையை என்னென்று கூறுவது? ஒவ்வொரு புலனையும், ஒவ்வொரு யானைக்கு ஒப்பென்று கூறலாம். ஆகவே ஐந்து யானைகளை அடக்கியாளுகின்றவன் வீரனன்றோ? யானையைப் பாகன், பரிபாஷையினாலும், அங்குசத்தினாலும் அடக்கியாளுவான். அதுபோல வீரனொருவன் நல்ல அறிவுரைகளாகிய பரிபாஷையினாலும், அறிவாகிய அங்குசத்தினாலும் ஐம்புலன்களாகிய யானைகளை அடக்கியாளுவான். இத்தகைய வீரனுக்கு ஒப்பானவன் வேறு யாவன்? இத்தகைய வீரன் இவ்வுலகிற்கு நன்மை செய்வதாகிய பிறர் நலம் பேணுவதோடு உயர்ந்த உலகையடைவதற்கும் ஒரு விதையாக இருப்பான் என்று வள்ளுவர் மொழிகின்றார். இதனை "வலிமை யென்று சொல்லக்கூடிய அறிவாகிய அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளை அவைகளின் விருப்பப்படி நடக்க வொட்டாமல் தன் விருப்படி அடக்கியாளுகின்றவன் உயர்ந்த இடத்திற்கு ஒரு விதையாவன்" என்று கூறுகின்றார்.

"துறவிக்கு வேந்தன் துரும்பு" என்னும் பழமொழியைப் பலர் அறிவார்கள். ஏனெனில் துறவிகள் நல்ல வழியில் யாருக்கும் அஞ்சாமல் உண்மையாக நடக்கின்ற வீரர்களாதலின் அவர்கள் யாருக்கும் அஞ்சவேண்டியதில்லை. "நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்றிருக்கும் உயரிய வீரராவர். அத்தகைய உண்மைத் துறவிகள் இவ்வுலகில் இருப்பாராயின், அவர்களுக்கு தேவனுக்குதேவனும் கட்டுப்படுவான். இதனைத் திருவள்ளுவர் உதாரணமாக காட்டி ஐம்பொறிகளை அடக்கியவர்களைச் சிறப்பிக்கின்றார். இதனை 'ஐம்பொறிகளையும் தத்தம் வழியில் செல்லவிடாமல் அடக்கியவனுடைய ஆற்றலுக்கு அகன்ற விண்ணுலகில் உள்ளவற்கு அரசனாகிய இந்திரனே சாட்சியாவான்" என்று கூறுகின்றார்.

உண்மையான பெரியோரா அல்லரா என்பதை உருவத்தினாலும் வேடத்தினாலும் அறியவியலாது. பாமரமக்கள் சிலருடைய சாதுவான வேடத்தைக் கண்டவுடனேயே அவர்களைச்சாதுவென எண்ணிவிடுவார்கள். ஆனால் அறிஞர்கள் ஒருவரைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டுமானால் அவர்களின் குணத்தையே ஆராய்வார்கள். குணத்தைக் கொண்டுதான் ஒருவனை நல்லவனென்றோ, கெட்டவனென்றோ, உயர்ந்தவனென்றோ, தாழ்ந்தவனென்றோ தீர்மானிக்கவேண்டும். ஆகவே உண்மைத் துறவிகளாகிய பெரியோர்கள் செய்வதற்கருமையான நல்ல காரியங்களையே செய்வார்கள். உலக மக்களின் முன்னேற்றத்தின் பொருட்டு உழைப்பார்கள். உண்மையற்ற வஞ்சக ஒழுக்கமுள்ள போலித் துறவிகளே சோம்பேறிகளாகத் தெருக்கள் தோறுஞ் சென்று வீடுகள் தோறும் நுழைந்து ஐயம்புகுந்து மானம் வெட்கமின்றி வயிறுவளர்த்து நாட்டிற்குத் தீமை புரிந்து திரிவார்கள். இத்தகைய அற்பர்களே இக்காலத்தில் துறவிகளென்ற பெயர் வைத்துக்கொண்டு திரிவது நமது நாட்டிற்கோரவமானமன்றோ. இதனை செய்வதற்கு அருமையான செயல்களையே பெரியோர்கள் செய்வார்கள், சிறியோர்கள் செய்வதற்கு அருமையான காரியங்களைச் செய்யமாட்டார்கள் என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

துறவியாகிய ஒருவன் உண்மை நூல்களின் ஆராய்ச்சியுடையவனாக விருக்கவேண்டும். உடல் நூற்பயிற்சி உள நூற்பயிற்சி இரண்டும் துறவிக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். ஐம்பொறிகளின் புலன்களின் நன்மை தீமைகளை ஆராய்ந்து அறிந்தவராக வேண்டும். துறவிகள் அவற்றை நன்றாயறிந்தால் தான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், பிறரை எவ்வாறு நடக்கச்செய்யவேண்டும் என்பதைத் தெளிவாயறிந்தவர்களாவார்கள். அப்படிப்பட்டவர்களே உலகத்திற்குத்தொண்டு செய்வதற்கும் தமது கொள்கையின்படி உலகத்தை நடக்கச்செய்வதற்கும் ஆற்றலுடையவர்களாயிருப்பார்கள். இதனைத் திருவள்ளுவர் கூறிய "நாக்கின் புலனாகிய சுவை, கண்ணின் புலனாகிய ஒளி, மெய்யின் புலனாகிய தொடுதலுணர்ச்சி, செவியின் புலனாகிய ஓசை, மூக்கின் புலனாகிய நாற்றம், ஆகிய இவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்தவர்களிடத்திலேயே உலகம் கட்டுப்பட்டு நடக்கும்" என்ற அரிய மொழிகளால் அறியலாம். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பனவற்றை முறையே வட மொழியில் ரசம் ரூபம் ஸ்பரிசம் சப்தம் ஸ்கந்தம் என்று கூறுவர்.

உண்மையான துறவிகள் நாட்டிற்கு உழைக்கவோ, சமூகத்திற்கு உழைக்கவோ முன் வரும் காலத்தில் அவர்களின் பணியை ஏற்று அவர்களையும் கொண்டாட வேண்டுவதும், அவர்களைப் பின்பற்றவேண்டியதும் மக்களின் கடமையாகும். சமூகமென்பதில் மதமும் அடங்கும். சமூகங்களுக்கு நன்மைசெய்யவே மதங்களும் உண்டானவையாதலின் அவைகளையும் சமூகத்திற் சேர்ப்பதே முறையாகும். ஆகவே "சமூக ஊழியம்" என்பதில் மதச்சீர்திருத்தமும் அடங்கியிருக்கின்றதென்பது எமது கொள்கையாகும். துறவிகளிடம் எப்பொழுதும் நல்ல குணங்களே நிறைந்திருக்கும். அவர்களைக் குணக்குன்றென்றே கூறலாம். அத்தகையவர்களுக்குச் சினமென்பது வாராது. ஒருக்கால் பிறர் இழைக்கும் இன்னல்களாற் சினந்தோன்றுமாயின் அச்சினம் வீணாகாது. அச்சினம் ஒரு நொடிப்பொழுதானிருக்கும். அந்நொடி நேரத்திலேயே அது சினத்தை உண்டாக்கியவர்க்குத் தீங்கை விளைக்காமற் போகாது. இதனை "நற்குணமென்னும் குன்றின்மேல் வீற்றிருக்கும் துறவிகளின் கோபம் கணநேரம் தங்கியிருக்குமாயினும் அந்நேரத்துக்குள் அது செய்யும் தீங்கைத்தடுப்பது அருமையாகும்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார் ஆகையால் பெரியோர்களுக்குக் கோபம் உண்டாகாமல் நடந்துகொள்ளவேண்டும்.

உலகில் வாழும் உயிர்கள் மீது இரக்கங்கொண்டு அவைகளுக்கு உதவி செய்யும் பயமற்ற பெரியார்களையே பண்டைத் தமிழர்கள் அந்தணர் என அழைத்து வந்தனர். அந்தணரென்றால் அழகிய தண்ணளியை யுடையவர் என்னும் பொருளில் அத்தன்மையோர்க்குக் காரணப்பெயராக வழங்கிற்று. பிற்காலத்தில் இப்பெயரை ஒரு சாதியினர் தமக்குரியதாக்கிக் கொண்டனர். அதனால் இக்காரணம் பற்றிப்பின் இடுகுறிப் பெயராகி வஞ்சகமும், பொறாமையும், சுயநலமும், மற்றவர்களை அடக்கியாளும் எண்ணமும், தாமே கடவுள் என்னும் நாத்திகக் கொள்கையும், எல்லோரையும் கொடுமையாக நடத்துங்குணமும், எல்லோரையும் விடத் தாம் உயர்ந்த சாதியாரென்னும் இறுமாப்பும் உடைய மக்களையுங் குறித்து வழங்குவதாயிற்று. இவ்வாறு திருவள்ளுவர் காலத்திலேயே காரணமின்றி ஒரு கூட்டத்தாரை அந்தணர் என்று அழைக்கும் வழக்கம் ஏற்பட்டு விட்டதாக எண்ண இடமுண்டு. அவ்வழக்கத்தை யுணர்ந்து தான் திருவள்ளுவர் அந்தணர் என்னும் வார்த்தையின் பொருளைத் தெளிவாக விளக்கியிருக்கின்றார் இதனை "அந்தணர் என்று சொல்லப்படுவோர் அறவழியில் நடக்கின்ற துறந்தோராவர். அவர்கள் எல்லாவுயிர்களிடத்திலும் இரக்கங்கொண்டு அவைகளுக்கு நன்மை செய்து வாழ்

(இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க).

'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை.'

'சித்திர புத்திரன்' எழுதுவது.

நான் கொஞ்ச காலமாகமறைந்திருந்தேன் இனி அடிக்கடி தோன்றுவேன் அன்பர்கள் வரவேற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றான்.

ஏதாவது விஷயத்தைப்பற்றிப் பேசுகிறபோது முழுதும் உண்மையாயிருக்காது என்று சந்தேகப்படுகிற காலத்தில் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்கிற பழமொழி சொல்வதுண்டு. அது எப்பொழுது ஏற்பட்டது, எதற்காக ஏற்பட்டது என்கிற விபரம் அநேகமாய் நமது தமிழ் மக்களுக்குத் தெரியாதென்றே நினைக்கிறேன்: தெரியாதென்று நினைப்பதால் அதைப்பற்றி நான் கண்டுபிடித்த முடிவை சொல்லுகிறேன்.

'ஐந்துக்கிரண்டு பழுதில்லை' யென்பதானது ஐந்து விஷயம்சொன்னால் அதில் இரண்டாவது பொருத்தமாயிருக்கும், அப்படியிருந்தாலே போதும் என்கிற கருத்துக் கொண்டே இப்பழமொழி வழங்கப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது என்று பார்போமானால் ஆரியர்கள் நமது நாட்டில் வந்து பொய்யும் புரட்டும் புகுத்த ஆரம்பித்த காலத்தில் அப்புரட்டுகளை யாராவது கண்டு பிடித்து கேழ்க்க ஆரம்பித்தால் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல்' அதாவது முன் சொன்னது போல் ஐந்தில் இரண்டு விஷயங்கள் நிஜமாயிருந்தாலே போதுமென்று அதை நம்பவேண்டியது தான் என்று சொல்லி ஏமாற்றுவதற்கு உபயோகப்படுத்தினார்கள். அந்தப் பழமொழியின் ஆதாரத்தைக் கொண்டுதான் ஜனங்கள் இப்பொழுதும் சாஸ்திரம், புராணம், ஜாதகம், ஆரூடம், சகுனம், சாந்தி, ஓமம், யாகம், சாமியாடி வேண்டுதலை அல்லது பிரார்த்தனை அருள் வாக்கு என்பவைபோன்ற மூடக்கொள்கைகளெல்லாம் நாட்டில் பரவலாயின. ஏனெனில் இவைகளில் எவ்வளவு பொய்யாய்ப் போய்விட்டாலும் அதைநம்பிக்கெட்டமூடர்கள் பார்ப்பனர்களை சமாதானம் கேழ்க்க ஆரம்பித்தால், அதனால் பிழைக்கும் அயோக்கியக் கூட்டத்தார் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல் இருக்கிறதா இல்லையா என்று பார்க்கவேண்டுமே யொழிய ஒவ்வொன்றையும் பரிசோதிப்பது நாஸ்திகத் தன்மையாகிவிடும், கடவுளிடத்தில் நம்பிக்கையற்ற தன்மையாகி விடும்' என்று சொல்லி ஏமாற்றி விடுவார்கள்.

ஆனால் அவற்றுள் ஐந்து என்ற எண்ணிக்கையும் இரண்டு என்கிற எண்ணிக்கையும் எப்படி குறிப்பாய் வந்தது, வேறு எண்களைச் சொல்லக்கூடாதா என்று சிலர் கேட்கக் கூடும். இம்மாதிரி கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்வது அனாவஸ்யமாகும். ஏனெனில் ஏதாவது இரண்டு எண்களைச் சொல்லித்தானாக வேண்டும். அப்படி சொல்லும்போது இந்த இரண்டு எண்களை மட்டும் சொல்லக்கூடாது என்பதற்கு யாதொரு நிபந்தனையும் இல்லை. ஆனாலும் இந்த இரண்டு எண்களுக்கு குறிப்பான சமாதானம் இல்லாமல் போகவுமில்லை. அதைச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேளுங்கள். ஆனால் அதை நம்பியே தீரவேண்டுமென்று நான் உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை. உங்களுக்குச் சரியென்று தோன்றினால் ஒப்புக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் வேறு சமாதானம் கிடைக்கும் வரை இதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

அதாவது, பார்ப்பன பாஷையில் ஒரு தோத்திர ஸ்லோகமுண்டு. என்னவென்றால், "அகல்யா, துரோபதி, சீதா, தாரா, மண்டோதரி, ஸ்மிருதா. பஞ்சகன்யாஸ்மயே நித்தயம் மாஹபாதக நாசனம்" இதன் கருத்து அகலியை துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி ஆகிய ஐந்து கன்னிகைகளை தினம் நினைத்தால் மஹாபாதகமெல்லாம் நாசமாய் விடும் என்பதே. இதில் ஏற்பட்ட விவகாரத்திற்காகத்தான் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்கிற பழமொழி உண்டாக்கப்பட்டது. விவகாரத்தின் தன்மையாவது:—

கோபமில்லாமல் பகுத்தறிவோடு கேட்க வேண்டும். ஏனென்றால், கோபம் வந்தால் பார்ப்பான் ஏமாற்றி விடுவான். கோபமில்லாவிட்டால்தான் அறிவிருக்கும் ரகசியம் விளங்கும் நான் விளப்பப்போகும் விவாதம் இந்த ஸ்லோகத்தை எந்தப்பார்ப்பான் எழுதினானோ அந்தப்பார்ப்பான் எழுதிவைத்த சங்கதியைத் தான் சொல்லப்போகிறேன். ஆதலால் நான் என் உத்தேசப்படி சொல்லப்போவதாக நினைத்து ஏமாந்து போகாதீர்கள். இதில் கண்டிருப்பது வாஸ்தவமா இல்லையா என்று ஒவ்வொரு பார்ப்பானையும் கேளுங்கள். வாஸ்தவமல்ல வென்று சொன்னால் என்னைக்கேளுங்கள். முதலாவது அந்த ஸ்லோகத்தில் மேல்கண்ட ஐந்து பெண்களையும் கன்னிகைகள் என்று குறிப்பிட்டிருக்கிறது. கன்னிகை என்றால் கலவி அறியாதவள். அதாவது புருஷர்கள் சகவாசம் தொடங்காதவள், கல்யாணமில்லாதவள் என்பது பொருள். ஆகையால் அந்த ஸ்லோகம் முன்னுக்குப்பின் முரணானது என்று சொல்லுவேன்.

ஒரு சமயம் பார்ப்பனர்கள் இதற்கு இந்த சுலோகத்தில் ஷடி பெண்களைக் குறிப்பிட்டு நினைக்கும்படி சொன்னதின் கருத்து கன்னித் தன்மையை உத்தேசித்தல்ல அவர்களுடைய கற்புத்தன்மையைப் பற்றிஎன்று சமாதானமாக சொல்ல வருவார்களானால் அதையும் பற்றி சற்று யோசிப்போம்.

இந்த ஐந்து பெண்களையும் நான் 1 தாரை, 2 அகலியை, 3 துரௌபதை, 4 சீதை, 5 மண்டோதரி என்கிற வரிசையில் எடுத்துக்கொள்ளுகிறேன்,

முதலாவது தாரை. தாரை என்பவள் தேவ குருவாகிய பிரகஸ்பதியினுடைய பெண்சாதி. இந்தம்மாளைப்பற்றியவிஷயம் அறிவதற்கு கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு காதம் காதமாய் ஊர்பயணம் போகவேண்டியதில்லை. இன்றைக்கும் தெருத்தெருவாய் தாரையும் சந்திரனும் படுத்து உருளுவதும் நிர்வாணமாய் நின்றுகொண்டு சந்திரனுக்கு எண்ணை தேய்ப்பதுமான சத்காலட்சேபத்தை தினம் தினம் பார்த்து வருகிறோம். தாரையம்மன் புருஷனே சங்கதி தெரிந்து இரண்டுபேருக்கும் சாபமிட்டதும், இவர்கள் இரண்டு பேருக்குமாக பிறந்த குழந்தை புதன் என்பவன் இருப்பதுவும் மேல்படி பார்ப்பனர்கள் சாஸ்திரங்களிலேயே இருக்கிறது.

ஆகவே குருவின் யோக்யதை குருபத்தினியின் யோக்யதை சிஷ்யனின் யோக்கியதை ஆஸ்ரமத்தின் யோக்கியதை ஆரியநாகரீகத்தின் யோக்கியதை ஆகிய இவ்வளவுக்கும் தாரையம்மாள் உதாரணமாக விளங்குகிறாள். இதையெல்லாம்விட கற்பின் லக்ஷணத்திற்கும் இது ஓர் ஆரிய இலக்கியமாய் விளங்குகின்றது.

இரண்டாவதான அகலியை அம்மாள் விஷயம். அகலியை அம்மாள் என்பவள் கௌதம முனிவர் என்கின்ற ஒரு இருஷியின் பெண்டாட்டி. தெய்வ ராஜனான இந்திரன் இந்த அம்மாள் மேல் ஆசைப்பட்டு மாறு வேஷம் பூண்டு வீட்டிற்குள் நுழைந்ததாகவும் பிறகு ஒருவருக்கொருவர் இன்னார் என்று தெரிந்துகொண்டு இரண்டு பேரும் சுகித்ததாகவும் ரிஷி இந்த விஷயம் தெரிந்து இருவரையும் தண்டித்ததாகவும் அத்தண்டனையால் இந்திரனுக்கு சரீரமெல்லாம் பெண் குறியாகவும் அகலிகையை கல்லாகவும் ஆய்விட்டதாகவும் பார்ப்பன சாஸ்திரங்கள் என்பவைகளே சொல்லுகின்றன. அதுவும் தெருவில் போகின்ற சாஸ்திரங்கள் சொல்லவில்லை. ஐந்தாம் வேதம் என்று சொல்லப்படுவதாகிய இராமாயணம், பாரதம் முதலியவைகளிலதான் இந்த உண்மைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனால் தேவர்களின் அரசனின் யோக்கியதையும், ரிஷி பத்தினிகளின்யோக்கியதையும் விளங்குகின்றது.

மூன்றாவது, துரௌபதையம்மன் சங்கதி இந்தம்மாள் முதலில் ஒரு புருஷனை மாத்திரம் கட்டிக்கொண்டு பிறகு மாமியார் இஷ்டப்படி மற்றும் நால்வருக்கும் பெண்டாட்டியாக இருந்து வந்திருக்கிறாள். ஐந்துபேரிருந்தும் ஆசை தீராமல் இன்னொரு புருஷனையும் மனதில் நினைத்து நினைத்து வருந்தியிருக்கின்றாள் என்பதை தானே ஒப்புக்கொண்டதல்லாமல் உலகத்தில் பெண்கள் பதிவிரதைகளாக இருக்க வேண்டுமானால் ஆண்மக்களே இருக்கக்கூடாது என்று தீர்ப்புங் கூறிவிட்டாள். இதனால் அக்காலக் கற்புக்கு இலக்ஷணம்புருஷனும், மாமியாரும் யாரிடம போகும்படி சொன்னாலும் போய்த்தான் ஆக வேண்டு மென்பதும்,

அதுவும் கற்பில் சேர்ந்ததுதான் என்பதும் பிறகு தன்னிஷ்டப்படி யாரை ஆசைப்பட்டாலும் அதுவும் கற்புடன் சேர்ந்ததுதான் என்பதும் அக்கால வழக்கத்தில் இருந்ததாய் விளங்குகின்றது. ஆகவே ஐந்து கன்னிகைகளில் மூன்றுபேர் சங்கதி இப்படியிருக்கின்றதே என்று கேட்கப்படும் கேள்விகளுக்குத்தான் பார்ப்பனர்கள் ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்று சொல்ல அதிலிருந்து இந்தப் பழமொழி ஏற்பட்டது.

இந்த இரண்டில் ஒன்றும் குற்றமில்லையா என்று பார்த்தால் அதிலும் ஒன்றை கழிக்கவேண்டியதாகத்தான் இருக்கின்றது. அடியோடு கழிக்கா விட்டாலும் சந்தேகத்திலாவது வைத்துத் தீரவேண்டியதாகத்தானிருக்கின்றது.

நாலாவதான சீதையம்மாள் சங்கதி பார்த்தால் முன் சொன்ன கதைகளின்படிக்கு அவ்வளவு இல்லாவிட்டாலும் உத்தம ஸ்திரீ என்றோ முழுதும் பரிசுத்தமானவளென்றோ கற்புக்கரசியென்றோ சொல்வதற்கில்லை குணவிசேஷத்தைபற்றியோவென்றால், மாய மானைத் துரத்திக் கொண்டு ராமன் போன காலத்தில் வெகு நேரம்வரை திரும்பிவராதது கண்டு புருஷனைப் போய்ப் பார்த்து வரும்படி சீதை லக்ஷ்மணனுக்குச் சொல்ல லக்ஷ்மணன் போகவேண்டிய அவசியமில்லை ராமர் எப்படியும் திரும்பிவருவார் என்று சொன்னதற்கு அண்ணன் செத்தால் என்னைக்கைப்பற்றலாம் என்று பார்க்கின்றாயா என்று சொன்னதிலிருந்தே லட்சுமணனிடம் பழகிய சீதைக்குபோதிய அறிவும் உயர் குணமும் விஷயத்தை அறியும் சக்தியும் இல்லையென்கின்ற தத்துவமும் நன்றாய் விளங்குகின்றது. தவிர சீதையிடம் வெகுகாலம் நன்றாய்ப் பழகிய அவன் புருஷனாகிய ராமனும் பலதடவை சீதையின் கற்பில் சந்தேகப்பட்டிருக்கிறான் அதாவது ராவணனைக்கொன்றபின் முதல் முதல் சீதையை ஒரு தடவை சந்தேகப்பட்டபோது சீதையிடம் என்ன சொல்லுகின்றான் என்றால் “ஏ சிதை! நான் உன்மேல் ஆசைப்பட்டு உன்னை மீட்டுக்கொண்டுபோவதற்காக ராவணனிடம் யுத்தம் செய்யவில்லை. பின் என்னவென்று கேட்பாயானால் ஒருவன் பெண்சாதியை மற்றொருவன் அடித்துக்கொண்டுபோய் விட்டால் அவனைச் சும்மாவிட்டுவிடுவது வீரனுக்கு அழகாகுமா என்கின்ற ரோசத்தின்மேல் தான் சண்டைபோட்டு அவனைக்கொன்றேன். மற்றபடி ஒரு துஷ்டன் வீட்டில் அதுவும் அவனுடைய அதிகாரத்திற்கும் பெலத்திற்கும் கட்டுப்பட்டு 10 மாதம் வசித்ததன் பெண்சாதியை சுயமரியாதையுள்ள எவனாவது மறுபடியும் சேர்த்துக் கொள்வானா?' ‘என்று சொன்னதோடல்லாமல் சகல வசத்திலும் அவனுடைய சுவாதீனத்திலிருந்த நீ அவனுக்கு வசப்படாமலிருந்திருக்க முடியுமா? ஆதலால் நீ எங்கே வேண்டுமானாலும் உன்னிஷ்டப்படி போகலாம். உன்னை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். கோபத்தால் சொல்லவில்லை நெடுநேரம் ஆலோசித்து செய்த முடிவு இது” என்று சொன்னான்

(இந்த இடத்தில் ராமன் உலக அபவாதத்திற்குக் கட்டுப்பட்டு இப்படி சொல்லவில்லை தானே சந்தேகப்பட்டு ஒருவித முடிவுசெய்து கொண்டு சொல்லுகிறான் என்று தான் அர்த்தம்.) ‘அதோடு 10 மாதம் எதிரிவீட்டில் வசித்த நீ’ என்பதால் இதுவரை உயிர்வைத்திருந்தாயே’ என்கின்ற கருத்தும் தொக்கியிருக்கின்றது.

இதற்கு சீதை சொல்லும் பதில் என்னவென்றால்:—

“ஏ ராமா நீ சொல்லுவது உண்மை! அதற்கு நான் என்ன செய்யப்படும் நானோ ஒரு பெண். ஒண்டியாயும் அனாதையாயும் இருந்தவள். ராவணனோ ராக்ஷசன் அளவற்ற பலசாலி. என்னால் கூடியவரை தடுத்துப்பார்த்தேன். எனக்குள்ளளவாவது அவனுடன்போக வேண்டும் என்கின்ற ஆசை இருந்ததா? விதியை நோக வேண்டியதே தவிர என்னைக் குற்றஞ் சொல்லக்கூடாது. என் தேகம் தான் பிறருக்கு வயப்பட்டதே ஒழிய என் ஹிருதயம் அப்பொழுதும் இப்பொழுதும் எப்பொழுதும் உன்னிடத்திலேயே இருக்கின்றது. சுதந்திர மற்ற நான் என்ன செய்ய முடியும். அனுமானை அனுப்பி நான் இருக்குமிடத்தையும் ஸ்திதியையும் அறிந்து வரச்சொன்னதின் மூலம், நான் லங்கையில் ராவணனுடைய வீட்டில் இருப்பதாக தெரிந்த உடனே என்னை ஏன் தள்ளிவிடவில்லை” என்று தான் சொன்னாள். (இது வால்மீக ராமாயணம் யுத்தகாண்டம 117, 118-வது சர்க்கத்தில் காணப்படுவது) ‘இந்த இடத்தில் ராமன் சீதையைப் பார்த்து நீ கற்பழிந்து விட்டாய் என்று நான் தீர்மானித்து விட்டேன்’ என்று வெளிப்படையாய் சொல்லி காட்டியதற்கு சீதை ஏன் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று தைரியமாய் சொல்லியிருக்கக்கூடாது என்கின்ற கேள்விக்கு பதில் இல்லை. அதோடு என் சரீரம் அவன் வயப்பட்டுவிட்டது. ஆனால் அப்போதும் மனம் உன்னிடம் தான் இருந்தது. விதியை நோக வேண்டுமேயொழிய என்னை நோகக்கூடாது. ராவணன் வீட்டில் இருந்ததையும் என் ஸ்திதியையும் அனுமான் பார்த்து விட்டு வந்து சொல்லி இருப்பானே அப்போதே ஏன் என்னை தள்ளிவிட்டதாக சொல்லி அனுப்பவில்லை’ என்பதாக வெல்லாம் சொல்லுவதினால் விஷயம் சந்தேகத்திற்காவது இடமுண்டாகின்றதா இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள். ஒரு சமயம் இராவணன் மீது அதிகமான பழியை சுமத்த வால்மீகி வேண்டுமென்றே இப்படி எழுதி இருக்கக்கூடும் என்று சொல்வதானால் அது வேறு விஷயம். என்னவென்றால் அது ராவணன் சங்கதியைப்பற்றி பேசும் போது கவனிக்கவேண்டிய விஷயம்.

இந்த இடத்தில் கற்பைப்பற்றி பரீக்ஷிப்பதால் வால்மீகி வார்த்தையில் இருந்தும் சாத்தியத்தில் இருந்தும் தான் பேசவேண்டும்.

தவிர மற்றொரு தடவை வண்ணான் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு கொஞ்சமும் கூட முன் பின் யோசிக்காமல் திடீரென்று லக்ஷ்மணனை விட்டு சீதையை நடுக்காட்டில் கொண்டுபோய் விட்டு வந்ததும், அங்கு சீதை தன் கற்பைப்பற்றி யார் என்ன சொல்லிவிடப் போகிறார்களோ எனப் பயந்து “லக்ஷ்மணா இதோ பார் நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கின்றேன்” என்று சொன்னதும், காட்டில் இரட்டைப் பிள்ளை பெற்றதாக ஒரு ராமாயணத்திலும், தர்ப்பை கிள்ளிப் போட்டு வால்மீகி ஒரு பிள்ளையை உண்டாக்கினார் என்று மற்றொரு ராமாயணத்திலும் சொல்லப் பட்டாலும் இந்த பிள்ளைகளை ராமன் ஒப்புக் கொள்ளாமல் வால்மீகி முதலிய எவ்வளவோ பெரிய தவ சிரேஷ்டர்கள் என்போர்கள் பிரமாணம் செய்தும் ஒப்புக் கொள்ளாமல் மறுபடியும் நெருப்பில் இறங்கும்படி சொன்னதும் அதற்கு சீதை கட்டுப் படாமல் உலக அபவாதத்தையோ அல்லது ராமனுடைய சந்தேகத்தையோ நிவர்த்தி செய்ய வேண்டாமா என்கின்ற கவலையில்லாமல் பூமியைப் பிளக்கச் செய்து பூமியில் இறங்கி மறைந்து விட்டாள் என்றும் எழுதப் பட்டிருக்கிறது. இன்னமும் என்னென்னமோ இருந்தாலும் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு இதுவே போதும்.

எனவே சீதையின் விஷயமானது சந்தேகப் படுவதற்கில்லாமல் போகவில்லை என்பதோடு சீதையின் லக்ஷ்மித் தன்மையும், ராமனின் விஷ்ணுத் தன்மையும் எப்படிப் பட்டதென்று விளக்கவும், ஆரியர் பழக்க வழக்கங்களும் அக்காலத்திய ஆண் பெண்கள் வாழ்க்கை நிலையையும் வெளியாககவும் உதவுகின்றது.

கடைசியாக மீதி இருப்பது ஐந்தாவதான மண்டோதரி அம்மாள், இந்தம்மாள் விஷயத்தில் ஒரு தகராறையும் காணோம். கம்ப ராமாயணத்தில், புருஷன் பிரிந்த உடன் செத்துவிட்டான் என்கின்ற சங்கதி தெரிந்து அழுது உயிர் விட்டுவிட்டதாகக் காணப்படுகின்றது. தவிரவும் செத்துப்போன ராவணனைப் பார்த்து அழும்போது சீதை குலத்திலாவது ரூபத்திலாவது குணத்திலாவது சாமர்த்தியத்திலாவது என்னைவிட சிறந்தவளா என்று மாத்திரம் கேட்டிருக்கின்றாள். இது சீதையின் குணத்தை 10 மாதம் நேரிலிருந்து பார்த்தவள் கேட்டிருப்பதால் இதில் மண்டோதரி பேரில் குற்றம் சொல்வதற்கில்லை ஆனால் சீதையின் குணம் தான் வெளியாக்கப் பட்டதாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆதலால் மண்டோதரியின்பால் மாத்திரம் குற்றம் சொல்ல இடமில்லை. கற்புள்ள பெண் என்றே சொல்லலாம். ஆனால் இது திராவிட நாகரீகத்துக்கும் திராவிடச்சிறப்புக்கும் இலக்கியமாக வைத்துக் கொள்ளலாம.

பொதுவாக பஞ்ச கன்னிகைகளின் யோக்கியதையைப் பார்க்கின்றபோதும், கற்பு இலக்கணங்களைப் பார்க்கின்ற போதும், குரு, அரசன், ரிஷி, கடவுள் என்கின்றதைப் பார்க்கின்றபோதும் நன்றாய் கவனித்தால் இதன் ஆபாசங்கள் விளங்குவதோடு ஐந்துக்கு இரண்டாவது சுத்தமாய் தேர்கின்றதா என்பது வெளியாகும்,

முதலாவது விஷயம், குருபத்தினியின் சங்கதியையும்சிஷ்யனின்யோக்யதையையும்

; இதன் தொடர்ச்சி 15 ம் பக்கம் பார்க்க

குடியாத்தத்தில் சுயமரியாதைக்கூட்டம்.

திரு. கண்ணப்பரின் சொற்பெருக்கு.

மநு அதர்ம நூல் கொளுத்தப்பட்டது.

நாளது டிசம்பர் 4௳ 'திராவிடன்' ஆசிரியர் திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களும் வேலூரிலிருந்து ஸ்ரீமான்கள் சந்தோஷம் சாரங்கபாணி நாயுடு அவர்களும் குடியாத்தம் வந்து சேர்ந்தார்கள். திரளான ஜனங்கள் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள். தெருக்கள் தோரணங்களாலும் கொடிகளாலும் வெகு அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தன.

பின்னர் மாலையில் மீட்டிங்கு மைதானத்தில் கூடியது. அவ்வமையம் ஜனாப் அப்துல் கரீம் சாகிப் அவர்கள் தலைமை வகித்தார்கள். சுமார் மூவாயிரம் ஜனங்கள் வரையில் அக்கூட்டத்தில் விஜயம் செய்திருந்தார்கள்.

திரு. கண்ணப்பரின் சொற்பெருக்கு.

கனவான்களே!

இவ்வூர் திராவிட சங்கத்தார் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றிப் பேசும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள். இச்சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி மிகவும் அழகாகவும் உருக்கமாகவும் பேசக்கூடிய தலைவர் ஈரோட்டில் இருக்க நான் அதைப்பற்றி பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்காக எனது வந்தனத்தை செலுத்துகின்றேன்.

இன்று அச்சுமரியாதையைப் பற்றி ஸ்ரீமான்கள் சந்தோஷமும் நானும் பேசப்போகின்றோம். நாங்கள் சொல்லுகின்றவைகளை நீங்கள் வேத வாக்கியமாகக் கொண்டு நடக்கவேண்டு மென்பது எங்கள் கருத்தல்ல. நாங்கள் கூறும் விஷயங்களை சரிதானா அல்லது அல்லவா என்பதை நீங்கள் சாவதானமாக இருந்து சிந்திக்க வேண்டும்.

இந்நாட்டில் மட்டும் சுயமரியாதைப்போர் தோன்றவில்லை. பிறநாட்டுச் சரித்திரங்களைப் படித்துப் பார்ப்பீர்களானால், இங்கிலாந்து, துருக்கி, ஜாப்பான் முதலிய நாடுகளெல்லாம் இவ்வியக்கத்தைத் தங்கள் நாடுகளில் தோற்றுவித்திருக்கின்றன. அதன் மூலம் அவர்கள் சுயேச்சையும் சமத்துவமும் அடைந்திருக்கிறார்கள் என்பது தெரிய வரும். ஒரு காலத்தில் அந்நாடுகளெல்லாம் தற்கால இந்தியாவைப் போல பல துறைகளிலும் அடிமைப்பட்டே கிடந்தன. அவைகளெல்லாம் இச்சுயமரியாதைப் போரின் மூலமாகத்தான் தங்கள் அடிமைத்தனத்தை ஒழித்திருக்கின்றன என்பதை சரித்திர வாயிலாகக் காணலாம். கேவலம் மிருகஜாதிகள் கூட சுயேச்சையாகத் திரியவேண்டுமென்றெண்ணும் பொழுது நாமும் சுயேச்சைக்காக போராட வேண்டுமென்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் ஜப்பான்கூட ஜாதி வகுப்பு முதலிய பேதங்களில் பலகால் அடிமைப்பட்டுக் கிடந்தது. சாமுரே என்னும் ஓர் ஜாதியார் தங்களை உயர்ந்தவர்களெனக்கருதி மற்றவர்களை இழிவுபடுத்தி அந்நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கின்றனர். ஈட்டர்கள் என்னும் ஓர் ஜாதியார் நம் நாட்டுப் பஞ்சமர்களைப் போல் கொடுந்துன்பம் அனுபவித்திருக்கின்றனர். அந்த ஈட்டர்களுக்கு அத்தேசத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. மற்ற ஜாதியார்கள், ஒரு ஜாதியார் மட்டும் தங்களை உயர்ந்தவர்களென்று சொல்வதையும் அவர்களால் ஏற்படும் துன்பங்களையும் சகியாது சுயமரியாதைப் போரைத் துவக்கினார்கள். அவ்வியக்கம் வலுக்கவே சாமுரே என்னும் ஜாதியார் தங்களுடைய ஆதிக்கமும் ஏமாற்றுதலும் இனிப்பலியாது எனக் கண்டு அவர்கள் வலியவே தங்களுடைய விசேஷ உரிமையை விட்டுக் கொடுத்துவிட்டனர். இப்போது அங்கு எல்லோரும் சமமாக பாவிக்கப் படுகின்றனர். அதனால் இன்றைக்கு அந்நாடு உலகத்தில் ஓர் நாகரீகம் படைத்த கன்றாக விளங்குகின்றது. இனி ஐரோப்பாவிலுள்ள துருக்கி சமீப காலம்வரை மதத்தாலும், மூடக்கொள்கையாலும் பல ஆயிரம் வருஷங்களாக அடிமைப்பட்டுக் கிடந்திருக்கின்றது. துருக்கியர்களின் அதிர்ஷ்டவசமாக அங்கு கமால் பாஷாவென்னும் ஓர் வீரர் உத்தித்து உறங்கிக்கிடந்த வாலிபர்களையெல்லாம் தட்டி எழுப்பி துருக்கியர்களின் மானத்தைக் காப்பாற்றும் பொருட்டு இச்சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார். ஜனங்களுக்கு அவரிடம் நம்பிக்கை ஏற்பட்டது. அதன் பிறகு அவர் நொடிப் பொழுதில் துருக்கியர்களின் மூட வழக்கங்களையும் புரோகித மதத்தையும் சட்டங்கள் மூலமாக ஒழித்துவிட்டார். அதனால் இன்று துருக்கி ஐரோப்பாவில் ஓர் நூதன நாடாக விளங்குகின்றது. துருக்கியர்களின் தைரியத்தையும் தற்கால மனப்போக்கையும் கண்டு ஆங்கிலேயர்களும் கூட இன்று சற்று அஞ்ச வேண்டியிருக்கின்றது.

சீனாவை எடுத்துக் கொள்ளுங்கள். இப்போது சீனர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் யுத்தம் நடக்கிறது. அங்குள்ள வாலிபர்களும் தேசாபிமானிகளும் ஆரம்பித்திருப்பது இச்சுமரியாதைப் போரா தவிர வேறல்ல. சீனா இச்சுயமரியாதைப் போரின் மூலமாகத்தான் சுதந்தரம்பெற எண்ணுகிறது. இனி நம் நாட்டின் நிலைமையைக் கவனிப்போம். சுதந்திரமடைவதற்கு பிரிட்டானியம் தான் தடையாய் இருக்கிறது என்று ஒரு ஜாதியார் கூறுகின்றனர். அதுவும் ஒரு தடை என்பதில் நமக்கும் சந்தேகமில்லை. ஆனால் நம்முடைய முன்னேற்றத்திற்கும், சுதந்திரத்திற்கும் முதல் தடையாக இருப்பது எதுஎன்று சற்று கவனிப்போம். இப்போது ராயல் கமிஷனைப் பகிஷ்கரிப்பதுஎன ஓர் இயக்கம் தோன்றியிருக்கிறது. இதைச் சற்று கவனியுங்கள். இந்தியர்களை அக்கமிஷனில் நியமிக்காதது பற்றியே ஓர் ஜாதியார் அதை பகிஷ்கரிக்கவேண்டுமென்கின்றனர். நம் நாடு தற்காலமிருக்கும் நிலைமையில் எந்த இந்தியரை அதில் நியமித்தால் மக்களுக்குச் சம்மதம். ஒருவரை ஒருவர் நம்ப இடமில்லை. உதாரணமாக மாளவியாஜியை நியமித்தால் முஸ்லிம்கள் திருப்தி அடைவார்களா? ஸர். முகம்மத் ஷாபியை நியமித்து விட்டால் இந்துக்கள் திருப்தியடைந்து விடுவார்களா?

தற்காலம் நம்நாட்டில் ஜாதி மத வித்தியாசங்கள் மிகுந்திருக்கின்றன. இதற்கு பிராமணர்கள் தான் காரணம். நம்முடைய பிற்போக்குக்கும் அவர்கள் தான் ஜவாப்தாரிகள். அவர்களில் 100-க்கு 95 பேர்கள் படித்தவர்கள். ஆனால் பிராமணர்களல்லாத சமூகத்தில் 100-க்கு 5 பேர்களுக்குக்கூட கையெழுத்துப்போடத் தெரியாது. பார்ப்பனர் தங்களை உயர்ந்த ஜாதியார்களாகக் கருதி மற்றவர்கள் படிப்பதையும் ஆக்ஷேபித்து வந்திருக்கிறார்கள். லார்டு கர்ஸான் கோகலே முதலியோர்கள் எல்லோருக்கும் கல்வியளிக்கவேண்டுமென்று சொன்னபோது இந்த பிராமணர்கள் தான் ஆக்ஷேபித்தார்கள். பண்டைக்காலத்தில் பிராமணர்களின் செய்கையைசகியாது அக்காலத்தில் அவதரித்த புத்தர்பெருமான் புதிதாக ஒருமதத்தை ஸ்தாபித்து மக்களுக்குள் உயர்வு தாழ்வு கிடையாது, எல்லோருக்கும் படிக்க உரிமை உண்டு என்று போதித்தார். பிராமணர்கள் மனுதர்ம சாஸ்திரம் ஒன்றை எழுதிவைத்துக்கொண்டு அதுதான் வேதமென்றும் அதன்படி எல்லோரும் நடக்க வேண்டுமென்றும் இன்றைக்கும கூறி வருகிறார்கள். இன்னும் இப்பிராமணர்கள் யாகம் முதலியவைகளை இந்நாட்டில் புதிதாகத் தோற்றுவித்து பல ஆடு மாடுகளை பலிகொடுத்து புசித்து வந்ததல்லாமல், பல நரபலிகளையும் கொடுத்து வந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் புத்தர் பொறுக்கமாட்டாதவராகி தன்னுடைய மதத்தை தீவிரமாகப் பிரசாரம் செய்து பிராமணர்களின் சூழ்ச்சியை எடுத்துக்காட்டினார். பின் மக்கள் எல்லோருக்கும் கல்வி கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், அசோகமகாராஜா போன்றவர்களின் உதவியைப் பெற்று நாலந்தாவென்னுமிடத்தில் ஒரு சர்வ கலாசாலை ஏற்படுத்தி அதில் எல்லோரும் சமமாக கல்விகற்கும்படி செய்தார். இக்கலாசாலையை பார்ப்பனர்கள் நெருப்பு வைத்து கொளுத்தி விட்டார்கள். இப்பார்ப்பனர்களின் நோக்கம் நம்மை எல்லாம் மூடர்களாக்கி அவர்களுக்கு அடிமையாக வைத்துக்கொள்ளவேண்டுமென்பதே. ஆகையாற்றான் அப்பள்ளிக்கூடத்தை நெருப்பிட்டு அழித்தா

ர்கள். இவர்கள் இந்நாட்டுக்கு வந்த பிறகு தான் ஜாதி வித்தியாசம் இங்கு ஏற்பட்டது. ஜாதி என்பதே சமஸ்கிருத வார்த்தை. மக்களுக்குள் சமத்துவத்தையும் சகோதரத்வத்தையும் உண்டுபண்ண புத்தர் பெருமான் தோற்றுவித்த புத்தமதத்தை இந்நாட்டை விட்டு ஓட்டியதும் இப்பிராமணர்களே. புத்த மதம் இப்போது சைனா பர்மா ஜப்பான் முதலிய நாடுகளிலிருந்து வருகின்றன. புத்தமதம் பரவியிருக்கும் நாடுகளெல்லாம் தற்காலம் சுயேச்சையுடன் வாழ்ந்து வருகின்றன.

அதல்லாமல் இப்பார்ப்பனர் தங்களை ஜீயர்களென்றும், சாஸ்திரிகளென்றும் அழைத்துக்கொள்ளுகிறார்கள். நம்மை சூத்திரர்கள் என்று அழைக்கிறார்கள். நாமெல்லாம் அக்காலத்தில் மூடர்களாயிருந்ததால் இவ்வார்த்தையை சகித்துக்கொண்டோம். இப்போது நம்மவர்கள் விழித்துக்கொண்டு விட்டனர். சூத்திரர்கள் என்ற பதத்திற்கு வேசி மகன் பணிவிடைக்காரன் என்று பொருள். இன்னும் பிராமணர்களுக்குத் தனியிடமென்றும், மற்றவர்களுக்கு வேறு இடமென்றும் காப்பி ஹோட்டல் முதலிய இடங்களில் வித்தியாசம் பாராட்டப் படுகிறது. இது நாம் தாழ்ந்த ஜாதி என்பதைக் குறிக்கின்றது. பிராமணர்கள் என்பதற்கு பிரம்மத்தை அறிந்தவன் என்று பொருள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். காப்பி ஹோட்டல் பார்ப்பனனும், ஜட்காவண்டி பார்ப்பானும், உத்தியோகப் பார்ப்பானும் பிரம்மத்தை அறிந்தவர்களா? இல்லையே. இன்னும் நம்மை இந்நாட்டிலுள்ள முகம்மதியர்கள், கிருஸ்தவர்கள் முதலியவர்களையும் ஒன்றாகச் சேர்த்து எல்லாரையும் ஒருங்கே கேவலமாகக் கருதுகிறார்கள். இந்து மதத்தைத் தவிர வேறு எந்த மதத்திலாவது ஜாதி வித்தியாசமாவது உயர்வு தாழ்வாவது கற்பிக்கப்படுகிறதா? இதையெல்லாம் கண்டித்துத்தான் நமது திராவிட சிங்கமாகிய ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஜாதி வித்தியாசம் கற்பிக்கும் இந்த மனுதர்ம சாஸ்திரத்தை மதுரையில் ஒரு கூட்டத்தில் நெருப்பிட்டுக் கொளுத்த வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தார். திருநெல்வேலி மகாநாட்டில் மனு தர்மசாஸ்திரப்பிரதியொன்று கூட்டத்தில் நெருப்பிட்டுக் கொளுத்தப்பட்டது. இந்த மனு சாஸ்திரம், ஜாதி வித்தியாச உயர்வு தாழ்வு மட்டுமா கற்பிக்கிறது. அதில் பிராமணனுக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு ஒரு நீதி யென்றும் அதில் காணப்படுகிறது. பிராமணர் வேறொரு ஜாதிமனிதனைக் கொலை செய்து விட்டால் அவனுக்கு தூக்குத்தண்டனை கிடையாதாம். அவனுக்கு தலையை மொட்டையடித்தல் போதுமாம் மற்றவர்களுக்குத் தூக்குத்தண்டனையாம்! இது நீதியாகுமா? இம்மட்டோ, பிராமணன் மற்ற ஜாதிப் பெண்களுடன் சேர்ந்து அவர்களுக்குப் பிறக்கும பிள்ளைகளுக்கு அப்பிராமணன் சொத்து கட்டுப்படாதென்றும், பிராமணரல்லாத சமூகத்தில் ஒரு ஜாதியாருக்கு மற்றொரு ஜாதிப் பெண்ணிடமாகப் பிறக்கும் பிள்ளைகளுக்கு அவனுடைய சொத்தில் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்றும் ஹிந்து சட்டம் இருந்து வருகிறது இதுவும் நீதியாகுமா?

வேண்டுகோள்.

வாலிபர்களே! வாலிபர்களே!!

முந்துங்கள்.

உங்கள் ஊரில் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைச்சங்கமும், வாலிப சங்கமும் ஏற்படுத்தி இருக்கின்றீர்களா? இல்லையானால் உடனே ஏற்பாடு செய்து விட்டு வேறுவேலை பார்க்க முந்துங்கள். ஏனெனில் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே இவை இரண்டுந்தான் "உயிரும் உடலும்" போன்றவை. யாரையும் எதிர் பாராதீர்கள். தாமதம் வேண்டாம். சமீபத்தில் மாகாண சுயமரியாதை மகாநாடு கூட்டப்படும்.

இன்னும் நம்மவர்கள் பிராமணர்களை சாமிகளென்றும், குருக்களென்றும், சொல்லிக்கொண்டு அவர்கள் காலில் போய் விழுகின்றார்கள். சுமார்த்தப் பிராமணன் ஹிந்து கோவிலுக்குள் வந்தாலே கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென்று அவர்கள் சாஸ்திரத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது இவர்கள் எப்படி உயர்ந்தவர்களாவார்கள். இவர்கள் மதத்தின் பேரால் சுவாமிகளென்றும் குருக்களென்றும் சொல்லிக்கொண்டு நம்மிடம் பணம்பறித்துச் செல்கின்றனர். இனி நம்முடைய சுப அசுபகாரியங்களுக்கும் பிராமணப்புரோகிதர்களை அழைக்கிறோம். அவர்கள் வேத மந்திரங்கள் கூறுவது போல் பாசாங்கு செய்து கொண்டு, செத்தைகளையும் குப்பைகளையும் போட்டு அக்கினியை வளர்த்து தவளைகளைப்போல் எதையோ சொல்லிக் கத்துகிறார்கள். கலியாண காலத்தில் கருமாதி மந்திரத்தைச் சொன்னாலும், கருமாதி காலத்தில் கலியாணமந்திரத்தைச் சொன்னாலும் நாம் கவனிக்கப்போவதில்லை. ஏனென்றால் நமக்கு விளங்காத சமஸ்கிருத பாஷையில் அவர்கள் மந்திரங்களை ஒப்புவிக்கின்றனர். ஆகையால் இதையெல்லாம் நாம் நம் மக்களுக்கு எடுத்துச் சொன்னால் நாம் நாஸ்திகர்களென்று கற்பிக்கப்படுகின்றோம். இனி சடங்குகளின் பேரால் நாம் அவர்களுக்குக் கொடுக்கும் வரிக்குக்கணக்கேயில்லை. குழந்தை பிறந்தது முதல் இறக்கும் வரை சடங்குகள். சடங்குகள் என்று வரி வாங்குவதல்லாமல், பிதுர்க்கள் என்றும், மோக்ஷமென்றும் சொல்லிக்கொண்டு அவன் இறந்த பிறகு அவனுடைய சுற்றத்தாரிடம் வந்து சிராத்தம், திதி என்று சொல்லிப் பணம் பிடுங்கிக்கொள்கின்றார்கள். அவர்கள் எழுதிவைத்த வேதங்களுக்கும் மதக்கோட்பாடுகளுக்கும் நம் மக்கள் அடிமைப்பட்டிருப்பதனால் தான் நாம் எளிதில் பிராமணர்களால் ஏமாற்றப் படுகின்றோம். இன்னும் சங்கராச்சாரி போன்ற குருக்கள் கொள்ளைக்காரர்கள் போல ஊர் ஊராக வந்து நம்மிடம் பணம் பறித்துக்கொண்டு போவதல்லாமல் நம்மைக் கேவலமாகவும் மதிக்கிறார்கள். நம்மைக்கண்டால் ஒரு பிராயச்சித்தமென்றும், நம்முடன் பேசினால் ஒரு பிராயச்சித்தமென்றும், இன்றைக்கும் செய்து வருகிறார்கள். பணத்தையும் கொடுத்து அவர்களால் நாம் ஏன் கேவலமாக மதிக்கப்படவேண்டும்.

என் இந்நாட்டில் அரசியல் சம்பந்தமாகவும், பிராமணர்களிடத்தில் தான் எல்லா உத்தியோகங்களும் இருக்கின்றன. அதனால் நம்மவர்கள் அவர்களைக் கண்டால் சற்று அஞ்சி நடக்கிறார்கள், ஒரு பிராமண மாஜிஸ்டிரேட்டாயிருந்தால் அவரைக் கண்டால் நமக்கு பயம் ஏற்படுகிறது. அன்றியும் கோர்ட்டுகளில் பிராமண ஜட்ஜோ, மாஜிஸ்ட்ரேட்டோ இருந்தால் பிராமண வக்கீல்களை கொஞ்சம் கௌரவமாகவும், நம்மவர்களை அகௌரவமாகவும் நடத்துகிறார்கள். நம் நாட்டிலுள்ள உத்யோகங்கள் எல்லாம் பிராமணர்களிடமிருப்பதால் தான் அவர்கள் இன்னும் அதிகமான உத்யோகம் பெற வெண்ணி சுயராஜ்யம் என்று கத்துகிறார்கள். சுயராஜ்யம் என்றால் உயர்ந்த உத்தியோகங்களெல்லாம் அவர்களுக்குத்தான் என்பது கருத்து. பிராமணர்களுக்கு தடையாயிருப்பது ஒரு விலங்குதான். அதாவது பிரிட்டானியம். ஆனால் நமக்கு பிரிட்டானியம், பிராமணீயம், என்னும் இரண்டு விலங்குகள் இருக்கின்றன. ஆகையால் நமது முன்னேற்றத்திற்கு முதல் தடையாயிருக்கும் பிராமணீயத்தைத்தான முதலில் ஒழிக்கவேண்டும். நான் அதை ஒழிக்க வேண்டுமென்று சொல்லும்போது நான் என்ன கூறுகின்றேன் என்றால், இந்நாட்டிலுள்ள அதிகாரத்தில் நம்மவர்களுக்குள்ள பங்கைக்கொடுத்து விடுங்கள். நம்மைச்சமமாக நடத்துங்கள் என்பதுதான். உத்தியோகங்களையெல்லாம் கைப்பற்றுவது தான் ஒரு நாட்டாருக்கு சுயராஜ்யமாயிருக்கும்போது அது எல்லோருக்கும் சமமாயிருக்கவேண்டாமா? அன்றியும் உண்மையான சுயமரியாதை வேண்டுமானால் நாம் நம் சுயமரியாதை இயக்கத்தைத் தீவிரமாக நடத்தி நம் மக்கள் பார்ப்பனீயம், புரோகித மதம், மூடக்கொள்கை

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ வரதராஜுலு ஐயங்கார்

ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடுவுக்கு மறுபடியும் மைலாப்பூர் பார்ப்பனர்கள் உபநயனம் என்னும் பூணூல் கல்யாணம் செய்து தங்கள் ஜாதியில் சேர்த்துக்கொண்டார்கள். ஆதலால் அவரை இனி வரதராஜுலு அய்யங்கார் என்றுதான் அழைக்கவேண்டும். இந்த கோஷ்டியார் சுவீகரிக்கத்தக்க ஒரு சந்தர்ப்பம் வருவதற்கு ஸ்ரீமான் வரதராஜுலு பட்டபாடு இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. முன்பு ஸ்ரீ காந்தியையும் ஒத்துழையாமையையும் கூடத்தாக்கி, சுயராஜ்யக் கக்ஷியுடன் கூடிக்குலாவி எவ்வளவோ கூத்தாடியும், அதைப்பற்றி தனது பத்திரிகையில் எவ்வளவோ பிரசாரம் செய்து பார்த்தும் அதற்கு செல்வாக்கு இருக்கின்றவரை கூடவே இருந்தும் பார்ப்பனர்களின் புகழ் விளம்பர சாகரத்தில் ஆழ்ந்திருந்து விட்டு அக்கக்ஷிக்குச் சாவுமணியடிக்கப் போகின்றதென்று தெரிந்தவுடன் தனக்கும் அதற்கும் சம்மந்தமில்லை என்று சொல்லி அதை விட்டு ஓரே தாவாகத்தாவி வெளியில் வந்து விட்டதும். பிறகு அது அடியோடு செத்து குழியில் போட்டு புதைக்கப்படும்போது தானும் ஒரு கை மண்ணை அள்ளிப் போட்டுவிட்டு நல்ல பிள்ளைபோல் இரவும் பகலும் அதை வைவதன் மூலம் அதற்கு கருமாதி செய்வதிலேயே தனது கிரியை ஆற்றி வந்தார். பிறகு இவர்களால் காங்கிரசுக்கும் ஆபத்து வந்து விட்டதாக தெரிந்தவுடன் தனக்கு ஏதாவது ஒரு இடம் வேண்டுமே என்கின்ற எண்ணத்தின் பேரில் பார்ப்பனரல்லாதார் கக்ஷியாகிய ஜஸ்டிஸ் கக்ஷி என்கின்ற மரத்தின் கிளையையும் ஒரு கையில் பிடித்துக்கொண்டிருந்தார். இது தெரிந்த பார்ப்பனர்கள் இவரை, அடியோடு காங்கிரசை விட்டு வெளியாக்க தீர்மானித்து விட்டார்கள்.

ஆனாலும் பார்ப்பனரல்லாதார் கக்ஷியில் இவர் பேரில் உள்ள சந்தேகத்தினால் தனக்குள்ள ஆதரவற்ற தன்மையை அறிந்தும் சென்ற தேர்தலின் பொழுது எக்கக்ஷி வலுக்கின்றதோ அக்கக்ஷியில் சேர்ந்து கொள்ளலாம் என்கின்ற எண்ணத்தின்பேரில், ஜஸ்டிஸ் கக்ஷிக்கும் ஓட்டு கொடுக்காதீர்கள் காங்கிரஸ் கக்ஷிக்கும் ஓட்டு கொடுக்காதீர்கள் என்று சொல்லி பிரசாரமும் செய்து பார்த்து, கடைசியில் காங்கிரஸ்கக்ஷிக்கு ஜெயம் என்று தெரிந்த உடனே ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை தலைவராய் ஏற்று மந்திரி வேலை ஒப்புக்கொள்ளும்படி தந்திகொடுத்து கேட்டுக்கொண்டும், அக்கூட்டத்தார் இவரை லக்ஷியம் செய்யாமல் போகவே, மறுபடியும் அவர்களை வைத்துக்கொண்டு கோவை மகாநாடு மூலமாய் ஜஸ்டிஸ் கக்ஷியுடன் உறவாட முயற்சித்து மறுபடியும் அதை விட்டு காங்கிரஸ் சத்தம் போட்டு ஒன்றும் முடியாமல் போகவே கடைசியாக பார்ப்பனர்கள் தங்களை எவ்வளவு அவமானப்படுத்தினபோதிலும் அதிலிருந்தால் தான் ரதம் ஓட்ட முடியும் என்று நினைத்து தக்க சமயம் எதிர்ப்பார்த்துக் கொண்டே இருக்கும்போது திடீரென்று கடவுள் அனுப்பியது என்பதுபோல் ராயல் கமிஷன் சாக்கு ஒன்று வந்தது. அதற்கேற்றுப் போல் அய்யங்காரின் ஒற்றுமை அறிக்கை ஒன்றும் வந்தது மற்றெல்லோரும் அவ்வறிக்கையை தலையில் அடித்து அதை நசுக்கிக்கொண்டிருக்கும்போது அய்யங்காருக்கு நல்ல பிள்ளையாக எண்ணி இவர் அதைக்கட்டிமுத்தமிட்டு வரவேற்று உப தலையங்கம் எழுதினார்

இவர் எவ்வளவு வரவேற்றும் எவ்வளவு எழுதியும் அது தோன்றிய அன்றே செத்து விட்டது. அல்லாமலும் காங்கிரஸ் மகா நாடுகள் நடத்தியாவது பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளையாகலாமா என்று பார்த்தார். அந்தப்படியே மிக்க முயற்சியும் தக்க செலவும் செய்து சேலம் மகா நாட்டை நடத்தினார். அந்த மகாநாட்டையும் பார்ப்பனர்கள் அடியோடு பகிஷ்கரித்து அது வகுப்பு மகாநாடென்று மண்டையில் அடித்தார்கள். பிறகு தென்னாற்காடு மகாநாட்டைப் பிடித்தார். அதையும் பார்ப்பனர்கள் பகிஷ்கரித்து அதன் வரவேற்புக் கமிட்டியையே கலைக்க போலீஸ் பந்தோபஸ்தெல்லாம் கொண்டு வந்தார்கள். கடைசியாக ராஜியாயிற்று எப்படி ராஜியாயிற்று என்று சொல்லவேண்டுமானால், இன்னின்ன மாதிரி எழுதிப் படிக்கின்றேனென்றோ அல்லது எழுதிகொடுத்தபடி படிக்கின்றேன் என்றோ ஒப்புக்கொண்டிருந்தாலொழிய பார்ப்பனர்கள் சுலபத்தில் இந்த ராஜிக்கு வந்திருக்கமாட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் ஸ்ரீ அய்யங்கார், ஸ்ரீ ராமசாமி முதலியாருக்கு கார்ப்பரேஷன் தலைவர் வேலைகொடுப்பதற்காக இந்த நிபந்தனை தான் பனகால் ராஜாவை கேட்டார். ஆதலால் இந்த நிபந்தனை எதிர்பார்க்கக் கூடியதுதான். இப்படியெல்லாம் இருந்தும் பார்ப்பனர்கள் முழுதும் நம்மால் மகாநாட்டுக்கும் சரியாய் வராமல் குற்றஞ் சொல்லக் காத்திருந்தார்கள். கடைசியாக மற்ற கிளைகளையெல்லாம் அடியோடு விட்டு விட்டு பார்ப்பன அடி மாத்தையே பிடித்திருப்பதையும், அதைத்தவிர தமக்கு வேறு கதியே இல்லையென்றும், பரிசுத்தமாய்க் காட்டிக்கொண்ட பிறகு தான் கிடைத்தவரையில் லாபமென்று அபயம் கொடுத்து தென்னாற்காடு உபந்நியாசத்தைப் பற்றி தலையங்கங்கள் எழுதி புகழ ஆரம்பித்தார்கள். இவரும் ஆசையோடு அதை ஏற்று திருப்பித்திருப்பி தமது பத்திரிகையிலும் தமது தலையங்கத்திற்குப் பக்கத்தில் பிரசுரித்தார். பிறகு அவர்களோடு இரண்டறக்கலந்தார். பிறகு தான் அவர்கள் உபநயனம் செய்து விட்டார்கள். ஆகவே இவ்வளவுதான் அவர்கள் செய்யக் கூடும்.

இனி மற்றவர்கள் தான் அவருக்கு நாமகரணம் செய்யவேண்டும். ஆதலால் வரதராஜுலு அய்யங்கார் என்ற நாமத்தை சாற்றுகின்றோம். இவ்வளவு பெருமைகள் ஒத்துழையா இயக்கம் ஆரம்பித்த காலம் தொட்டு ஸ்ரீ வரதராஜுலுக்கு கிடைத்திருக்காதென்றே சொல்லலாம். இதுபோலவே பெசண்டம்மையாருக்கும் அப்போதே ஒரு பார்பனரல்லாத தலைவர் தேவையாயிருந்தது. ஸ்ரீ வரதராஜுலு இரண்டுக்கும் விண்ணப்பம் போட்டதில் இரண்டிடத்திலும் பிரைஸ் விழுந்து விட்டதால் இப்போது எதை ஒப்புக்கொள்வது என்ற மயக்கம் வந்து விட்டது. அம்மையார் சட்டத்திற்கு உட்பட்டு சத்தம் போடவேண்டும் என்கின்றார். அய்யங்கார் சட்டத்திற்கு மீறிச்சத்தம் போடவேண்டுமென்கின்றார். இரண்டுபேரும் எதிர்பார்க்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ எதிர் பிரசாரத்திற்கு இவர் தயாராயிருந்தாலும் எதைப் பின்பற்றுவதென்பது தெரியாமல் ஸ்ரீ வரதராஜுலு விழிக்கின்றார். இரண்டுபேரையும் விட மனம் வரவில்லைபோல் தெரிகின்றது. ஸ்ரீ வரதராஜுலுவின் சொந்த நிலைமை இன்னதென்பதை தென்னாற்காடு மகாநாடே அவருக்கு நன்றாய்க் காட்டிவிட்டது. அதாவது இவர் தலைமைவகித்த மகாநாட்டுக்கு உள்ளூர் பார்ப்பனர்கள் யாவரும் வரவில்லையென்றும், வெளித் தாலூகாக்களிலிருந்து யாருமே வரவில்லையென்றும் 'சுதேசமித்திரன்' தெரிவிக்கிறது. மற்றபடி இந்தத் தலைவரைச் சுற்றி இருந்த பெரும் பான்மையான கோஷ்டிகளும் இதை உறுதிப்படுத்துகிறது. எது எப்படியானாலும் நல்ல சமயத்தில் கிடைத்த ஆகாரத்தைப் பிடித்துக்கொண்டு இனி கரையேறவேண்டிய வேலையே அவருக்குச் சரியாய்ப் போய்விட்டது. என்னவெனில் பகிஷ்காரப் பிரசாரந்தான். தவிர பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிகைகளும் கூட இவரைப் போலவும் இவரது பத்திரிகையைப் போலவும் அவ்வளவு அதிகமாய் பகிஷ்காரப் பிரசாரம் செய்வதில்லை. ஏனென்றால் புதிதாக ஒருவர் ஒரு மதத்தில் சேருவாரானால் அம்மதத்தில் பிறந்து வளர்ந்தவர்களைப்பார்க்கிலும் அதிகமான வேஷம்போடுவது சகஜம். எதுபோலவென்றால், 'புதிய சைவனுக்கு பூச்சும், ருத்திராட்சமும் அதிகமாயிருக்கும் என்பதுபோல். அப்படிச் செய்தால்தான் மற்றவர்களும் நம்புவார்கள். ஆதலால் ஸ்ரீமான் வரதராஜுலுவும் அவரது பத்திரிகையும் பகிஷ்காரப் பிரசாரம் சரியாகவோ, தப்பாகவோ முழக்குவதில் நமக்கு அதிசயம் ஒன்றும் இல்லை. இதை நம்பிக் கெட்டுப்போக எத்தனைபேர் காத்திருக்கிறார்கள் என்பதுதான் கேள்வி.

பார்ப்பனருக்கு நல்ல பிள்ளையாவதற்கு ஸ்ரீ வரதராஜுலுவுடன் போட்டி போட்டு வரும் மற்றொரு பார்ப்பனரல்லாத தலைவர் ஒருவர் இருக்கின்றார். அவர் ஸ்ரீ வரதராஜுலு பார்ப்பனர் பக்கம் போய் விட்டாரானால் அரைநிமிஷம் கூட தனித்திருக்க சகிக்கமாட்டாதவர். எனவே அவர் இனி பகிஷ்காரம் என்னும் அரசியலின் பெயரால் வெளியில்வருவாரோ, அல்லது புராணம், மதம் என்னும் அழுக்கு மூட்டைகளுடன் வெளியாவாரோ தெரியவில்லை. எப்படியானாலும் இவர் அய்யங்காராக வராவிட்டாலும், அய்யாராகவாவது வெளியாகித்தான் தீருவர். ஆதலால் அதையும் வரவேற்கக் காத்திருக்கிறோம்.

சந்தா நேயர்களுக்கு,

சந்தாதாரர்கள் தங்கள் சந்தா காலாவதியடைவதற்கு முன் அடுத்த வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பவேண்டாமென்று எழுதாதவரை அடுத்த வருஷத்திற்கும் பத்திரிகை அனுப்பும்படி கேட்டுக்கொண்டதாகவே வைத்துக்கொண்டு பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். ஆதலால் சந்தா நேயர்களின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பியதாக ஏற்பட்ட வி. பி. யை கௌரவிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹு கார்த்திகை 26-உ

ராயல் கமிஷன் பஹிஷ்காரத்தின் யோக்கியதை.

ராயல் கமிஷன் பஹிஷ்காரத்திற்கு இந்தியா முழுவதற்கும் இப்போது இரண்டு தலைவர்கள்தான் முக்கியமானவர்கள்.

அவர்களில் காங்கிரஸ் தலைவர் என்கின்ற முறையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஒருவர். மற்றப்படி சட்ட ஒழுங்குக்கு கட்டுப்பட்ட கக்ஷிக்காரர்கள் தலைவர் என்று ஸ்ரீமதி பெசண்டம்மையார் இரண்டாமவர் ஆவர்.

மற்றவர்கள் எல்லோரும் இவர்கள் இருவர்களில் கட்டுப்பட்டவர்கள். எனவே இந்த இருவருக்குள்ளாகவும் பலமான அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் புரட்டுக்கார பத்திரிகைகள் இதை ஜனங்கள் அறியாதபடி சந்திலும் பொந்திலும் போட்டு மறைத்துவைத்து வருகின்றன. ஆனாலும் சமீபத்தில் வெளியாகித் தான் தீரும்.

என்னவெனில் பஹிஷ்காரப் பேச்சு பேசும் தலைவர்கள் அநேகமாய் புரட்டர்கள் என்றும் தங்களுக்கு மானம் போய்விட்டதாக வேஷம் போடுகிறார்கள் என்றும் உண்மையிலேயே பார்லிமெண்டார் இந்தியரை கமிஷனில் நியமிக்காததானது இவர்களது சுயமரியாதைக்கு பங்கமாயிருப்பதாக கருதுவார்களானால் அதே பார்லிமெண்டாரால் நியமிக்கப்பட்ட மற்ற பதவிகளில் இருக்கலாமா என்றும் அதாவது சட்டசபை, ராஜாங்க சபை மற்றும் அது சம்மந்தமான பதவி உத்தியோகஙகளில் இருக்கலாமா என்றும் ஒரு கேள்வி கேட்டிருந்தோம். அதன்பின் சில ஆசாமிகள் சமயம் வந்தால் அதையும் தான் பஹிஷ்கரிப்போம் என்று சத்தம் போட்டார்கள். இதை அறிந்த பெசண்டம்மையார், பஹிஷ்காரம் பஹிஷ்காரம் என்று வாயில் சொல்லிக்கொண்டு மாத்திரம்தான் இருக்க வேண்டுமே ஒழிய ஒரு வேலையையும் பஹிஷ்கரிக்கக் கூடாது என்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்கள். இதில் ஸ்ரீமான் அய்யங்கார் கையெழுத்து மிருக்கிறது.

நாட்டின் நிலைமையைப் பார்த்த ஸ்ரீ அய்யங்கார் இப்போது திடீரென்று கரணம் போட்டு பெசண்டம்மையின் அந்தக் கொள்கைக்கு நான் கட்டுப்பட்டவனல்ல. ஒரு சமயம் எல்லா வேலைகளையும் பஹிஷ்கரிக்க வேண்டி வந்தாலும் வரும் என்று வீரர் போல் மற்றொரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

இதற்கு மத்தியில் மற்றொரு "வீரர்" ஸ்ரீ பண்டித மாளவியா வரிகொடா இயக்கம் ஆரம்பிக்க வேண்டும் என்கின்றார். மூன்றும் மூன்று விதமாய் இருக்கின்றது. ஆனால் மூவரும் பார்ப்பனர்களே. பசுவை நம்பினாலும் பார்ப்பானை நம்பாதே என்று ஒரு பழமொழி உண்டு. இது கண்டிப்பாய் மாளவியா விஷயத்தில் உபயோகிக்கப்பட வேண்டியதுதான்.

ஏனெனில் பஞ்சாப் அட்டூழியத்திற்காக கொஞ்சம்கூட சுயமரியாதையைப் பற்றிக் கவனிக்காத மகான், ரௌலட் பில்லுக்காக சட்டசபை ஸ்தானத்தை ராஜீநாமா கொடுத்துவிட்டு மறுபடியும் திரும்பி வாங்கிக்கொண்ட வீரர், ஏதோ ஒரு உப்புப்புளிப்பில்லாத சப்பைக் காரியமான பஹிஷ்காரமென்ற போலிக்கு வரி கொடுக்காத இயக்கம் ஆரம்பிக்கின்றேன் என்றால் அதை யார் நம்புவார்கள். இதில் ஏதாவது புரட்டு இருக்குமா இருக்காதா என்று பார்த்தால் வெளியாகாமல் போகாது. அதுதான் மகமதியர் தலையிலும் பார்ப்பனரல்லாதார் தலையிலும் கையைவைக்கும் புரட்டு. என்னவென்றால் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒழித்துவிட்டு பார்ப்பன ஆதிக்கமே நிலைத்திருக்கச் செய்வதாகும்.

இது இப்படி மூன்றும் மூன்று விதமாய் இருக்க மற்றொரு விஷயமென்னவென்றால், எல்லோரும் ஒன்று சேர்ந்து விட்டார்கள் என்று பொய்ச் சங்கூதுவது. யார் யார் ஒன்று சேர்ந்தார்கள், எதெதற்கு ஒன்று சேர்ந்தார்கள் என்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். 8 கோடி பேர் கொண்ட சமூகமாகிய மகமதியர்கள் 100க்கு கால்போகூட பகிஷ்காரத்துக்கு சேரவில்லை. மகமதிய சமூகத்தின் எந்த ஸ்தாபனமும் சேரவில்லை.

தவிர, லாகூர் பிரபல மகமதியர்கள் பலர் அதாவது, சர். சஃபீகர் அலிகான், சர். அப்துல்காசிம், சர். அபதுல்லைஹ, ஜனுப் ரஜான் பக்ஷ், ஜனுப் முகம்மது சர். இக்பால் முதலியோர்கள் கையெழுத்திட்டு பகிஷ்காரத்தில் சேரக்கூடாது என்று கண்டித்து தங்கள் சமூகத்திற்கு அறிவுறுத்தியிருப்பதுடன் வகுப்பு கலவரத்தினால் அடையும் சுயமரியாதைக் குறைவைவிட ராயல் கமிஷனால் சுயமரியாதைக்கு அதிகக் குறைவு கிடையாது என்று சொல்லி ஜனுப் ஜின்னாவையும் கண்டித்திருக்கின்றார்கள்.

பங்காளத்தில் மகமதியர்கள் பெரும்பான்மையோர் பகிஷ்காரத்தில் கலாக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள்.

அலகாபாத்திலும் ராயல் கமிஷனை பகிஷ்கரித்தால் முஸ்லீம்களுக்கு அதிக பாதகம் ஏற்படும் என்று எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள்.

சென்னையிலும் முஸ்லீம்கள் ஏறக்குறைய யாவரும் எதிரிடையாகவே இருக்கின்றார்கள். மொத்தத்தில் முஸ்லீம் பத்திரிகைகள் எல்லாம் பகிஷ்காரத்திற்கு விரோதமாயிருக்கின்றன. முக்கிய பத்திரிகையாகிய 'சைபுல் இஸ்லாம்' பகிஷ்காரத்தின் புரட்டைபுட்டுப் புட்டுக்காட்டுகின்றது.

கிருஸ்தவர்களிலும் நூற்றுக்கு அரைக்கால் வாசிப்பேர் கூட சேர்ந்ததாக தெரியவில்லை. அவர்களது சமூக இயக்கம் எதுவும் சேர்ந்ததாக தெரியவில்லை. சுற்றிச்சுற்றிப் பார்த்தால் பார்ப்பன பொக்கிஷத்தில் எப்போதும் தயாராய் இருக்கும் ஸ்ரீமான்களான குழந்தை, ஜோசப் ஆகிய இருவர்கள் தான், அதிலும் ஸ்ரீமான் குழந்தையின் அழுகுரல்கூட கொஞ்ச நாளாய் காண முடியவில்லை. இந்துக்கள் என்பவர்களிலும் இந்து மகாசபை என்பது பகிஷ்காரத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

மற்றும் 8 கோடி சமூகமாகிய தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்பவர்களில், இந்த 8 கோடிக்கும் ஒரு ஆசாமியாவது சேர்ந்ததாக தெரியவில்லை. அவர்களது சமூக இயக்கம் எதுவும் சேர்ந்ததாக தெரியவில்லை. அய்யங்கார் சுவாதீனத்தில் இருக்கும் ஸ்ரீமான் ஜெயவேலு அவர்கள் பெயர் ஏதாவது ஒரு சமயம் அடிபடலாமோ என்னமோ அவ்வளவுதான். மற்றபடி இம்மாகாணத்தில் மீதியுள்ள இரண்டரைக்கோடி ஜனங்களான பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் எத்தனை பெயர்கள் சேர்ந்திருக்கிறார்கள்? அவர்களது சமூக இயக்கமும் என்ன சொல்லிற்று. ஸ்ரீமான்கள் வரதராஜுலு, குப்புசாமி முதலியார், அண்ணாமலை பிள்ளை, தேவ நாய்க்கர் முதலிய சிலர்கள் சேர்ந்தாலே எல்லோரும் சேர்ந்ததாக ஆகிவிடுமா? என்று கேட்கின்றோம். அவரவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை பிரசாரம் பண்ணுவதைப்பற்றி யாருக்கும் ஆசேபனை இல்லை. மனதறிந்து வேண்டுமென்றே பொய் பேச வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டு, "உலகமே ஒன்று சேர்ந்து விட்டது. உத்தியோக ஆசைபிடித்தவர்களும், சர்க்கார் தாசரும் தவிர மற்ற யோக்கியர்களும், சத்திய கீர்த்திகளும், நாணயக்காரரும், தியா

பஹிஷ்காரமும் ஜஸ்டிஸ் கக்ஷியும்.

பஹிஷ்காரக் கூட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சியாரும் சேர்ந்துகொண்டால் தேவலாம் போல அக்கட்சி பிரமுகர்களுக்கு தோன்றுவதாய்த் தெரிகின்றது. ஏனெனில் பாமர ஜனங்களிடம் தங்களுக்குச் செல்வாக்கில்லை என்று நினைப்பதுடன் அரசாங்கத்தாரும் தங்களைக் கண்டால்பயப்படுவதில்லையென்றும் நினைப்பதாய்க் காணப்படுகிறது. அவர்கள் அப்படி நினைத்திருப்பது தப்பு என்பது நமது கெட்டியான அபிப்பிராயம். பாமர மக்கள் எப்போதும் பாமர மக்களாகவே இருக்க முடியாது. இப்பொழுது சற்று கண் விழித்துக் கொண்டுவருகின்றார்கள். பாமர மக்களிடம் செல்வாக்குப்பெற்று ஏதாவது நன்மை செய்யவேண்டுமானால் பாமர மக்கள் மகிழும்படியான மாதிரியிலேயே போய்க்கொண்டிருப்பதினால் ஒரு பலனும் ஏற்படாது. அவர்கள் உண்மையை உணர்ந்து நன்மையைக் கடைப்பிடிக்கும்படி செய்யவேண்டும். அதற்காக காத்திருந்தாலும் குற்றமில்லை. இரண்டொரு தடவை தோல்வி ஏற்பட்டாலும் குற்றமில்லை. இல்லாவிட்டால் முக்கியமான சமயத்தில் ஆபத்துவந்துவிடும். பிறகு சுலபமாய் திருத்த முடியாமலும் போய்விடும். ஆதலால் தக்க அஸ்திவாரத்தோடும் நிலையான கொள்கைகளுடனும் வேலைசெய்ய வேண்டியதுதான் பொறுப்பாகுமே தவிர கூட்டத்தில் கோவிந்தாபோடுவது பொறுப்பாகாது என்று நினைக்கிறோம்.

தவிர, சர்க்கார் பயப்படமாட்டார்கள் என்று எண்ணுவதும் தப்பு என்று நினைக்கின்றோம். சர்க்காரை பயப்படுத்துவதாய் நினைப்பதைப் போல முட்டாள் தனமான காரியம் வேறில்லை. வெறும் உத்தியோகம் மாத்திரம் நமது கவலையானால் சர்க்காரை மிரட்டுவது பயன்படும். அது நமது முக்கிய நோக்கமல்ல. ஒருக்கால் அப்படியே வைத்துக் கொண்டாலும் நாமாக ஒரு காரியம் செய்து அதன் மூலம் சர்க்காரை மிரட்டலாம். அத்தயோக்கியதை வரும் வரை காத்திருக்கலாம். அப்படிக்கில்லாமல் பார்ப்பனர்களோடு சேர்ந்து நாமும் கூப்பாடு போடுவதின் மூலம் சர்க்காரை மிரட்டினால், ஒரு சமயம் சர்க்காரும் பயப்படுவதானால் அதன் பலன் முன்னின்று சத்தம் போட்ட பார்ப்பனர்களுக்குத்தான் ஏற்படுமே தவிர மற்றவர்களுக்கு ஒன்றும் ஏற்படப்போவதில்லை. பார்ப்பனர்கள் அவ்வளவு பயித்தியகாரரல்ல. மிஞ்சி ஏதாவது கிடைத்தால் அவர்கள் தின்றது போக மீதி எச்சில்தான் கிடைக்கும். ஒரு சமயம் நமக்கு ஏதாவது பெரியபலன் கிடைப்பதாயிருந்தால் அப்போது வேறு வழியை அனுஷ்டிக்க பார்ப்பனர்களுக்குத் தெரியும். தவிரவும் ஒரு பெரிய சமூகத்தின் நிரந்தரமான முன்னேற்றத்திற்கு பாடுபடும் இயக்கம் இம்மாதிரி அடிக்கடி மாறும் கொள்கைகளை பார்ப்பன அரசியல் காருக்கும வயிற்றுச் சோற்று தேசபக்தர்களுக்கும் பயந்துகொண்டு மாற்றி வந்தார்களா? பார்ப்பனரல்லாதார் என்கின்ற இவ்வளவு பெரிய சமூகத்தின் பேரால் ஏற்பட்ட இயக்கம் தனக்கென ஒரு மனத்துணிவும்நிலையும் இல்லாமல் கூச்சலுக்கும் கும்பலுக்கும் பயந்து கொண்டிருக்கின்றது என்று பிறர்சொல்லும்படி நடந்தார்களா? சர்க்காரையாவது உதரித்தள்ளிவிட வேண்டும் யோக்கியமான நிலையான கொள்கைகளை கட்டிக்கொண்டு சாகவேண்டும். அப்பொழுதுதான் நமதுபின் சந்ததிக்காவது பலனுண்டு. இம்மாதிரி மனக்கிலேசங்கள் வரும்போது உண்மைத் தலைவர்களான டாக்டர் நாயர் பெருமானையும் சர். தியாகராயரையும் நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்கள் ஏதாவது அடிக்கடி மாறினார்களா? பாமர மக்களுக்காவது பயந்தார்களா என்பது ஞாபகப்படுத்தும் என்று நினைக்கின்றோம்' முடிவாக நாம் சொல்லுவது என்னவென்றால் பார்ப்பனரல்லாத சமூக இயக்கத்தலைவர்கள் தங்களை காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களைப்போல் தாங்கள் தங்கள் பெண்டு பிள்ளை குடும்பங்களுக்கு மாத்திரம் தலைவர்கள் என்று எண்ணாமல், பார்ப்பனர்களாலும் அரசாங்கத்தாராலும் எவ்வளவோ கொடுமைகள் செய்யப்பட்டு வாயில்லாப் பூச்சிகளாய் கிடக்கின்ற பாமர மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் தலைவர்கள் பிரதிநிதிகள் என்பதை நினைத்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

திகளும், பொப்பாருளிகளும், சுயநலமற்றவர்களும், பிரபுக்களும், தொழிலாளிகளும், மற்றும் எல்லோரும் சேர்ந்து விட்டார்கள்" என்று சொல்வதில் கண்ணிய மிருக்கிறதா? என்று தான் கேட்கின்றோம். தப்பட்டை அடித்து கூட்டம் கூட்டி அதில் கூப்பாடு போட முடியும். தலைகால், பகுத்தறிவு, அறிவு, பொறுப்பு இல்லாமல் சர்க்காரை வைவதாக வேஷம் போடக்கூடும். திருட்டுத்தனமாய் சர்க்காரை மன்னிப்பு கேட்டுக் கொள்ளவும் கூடும். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக பத்திரிகையில்எழுதவும் கூடும். காரியம் என்ன நடக்கும் என்றுதான் கேட்கின்றோம்' அதிகமான பிரயத்தனமெடுத்துக்கொண்டால் பாமர மக்களை ஏமாற்ற முடியும். அதைத்தவிர ஒரு அணுவளவாவது சத்தியத்திற்கோ, நாட்டிற்கோ, மக்களுக்கோ, நன்மை உண்டாகுமா என்றுதான் கேட்கின்றோம். இனியும் இந்த கூட்டத்திற்குத் தானா நாட்டில் மதிப்பு இருப்பதாக ஏற்படவேண்டும்?

பெசண்டம்மை, ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், ஜோசப்பு, வரதராஜுலு, சத்திய மூர்த்தி, அண்ணாமலைமுதலியார், குப்புசாமிமுதலியார், ஆகிய இவர்களுடன் இந்தியபிரதிநிதித்துவம் தீர்ந்துவிட்டதாம். மற்றவர்கள் சர்க்கார் தாசராம். உத்தியோகப்பேய் பிடித்தவர்களாம். இப்படிப்பட்ட சிலர் எப்போதும் இருந்துதான் தீருவார்களாம். தலைவரை நம்புவதா வாலரை நம்புவதா? இந்த நிலையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரே மற்றொரு புறம் பகிஷ்காரத்தில் "ஒற்றுமை இல்லையே, ஒற்றுமை இல்லையே" என்று கதறுகிறார்.

பார்ப்பனர் சொல்லுகிறபடி பணம் கொடுக்காவிட்டால் அதற்கு பெயர் காங்கிரஸ் துவேஷமாம்.

சென்னை கார்ப்பரேஷன்கார் காங்கிரஸ் பொருட்காட்சிக்கு ரூபாய் கொடுக்கக்கூடாதென்று ஜஸ்டிஸ் கட்சியார் ஆட்சேபித்ததற்காக அவர்களை காங்கிரஸ் துவேஷிகள் என்று பார்ப்பனப் பத்திரிகைகள் விஷமப் பிரசாரம் செய்கின்றன. காங்கிரஸ் பொருள் காட்சி யென்ற பெயர் வைத்துக்கொண்டு, காங்கிரஸ் பெயரால் வெள்ளைக்காரர்கள் பொருள்களை காட்சி சாலை வைப்பதாக வெள்ளைக்கார கம்பெனியிடம் ரகசியமாய் ஒப்பந்தம் பேசி லஞ்சம் வாங்கிக் கொண்டு இவர்கள் நடத்தும் பொருட் காட்சிக்கு பணம் கொடுக்காவிட்டால் அதற்கு பெயர் காங்கிரஸ் துவேஷம் என்றால் அதற்கு நாம் பயப்படுவதா என்கின்றோம்.

பட்டாஸ் வெடி விற்றுத்தருவதாகவும் கர்ப்பூரம் விற்றுத்தருவதாகவும் சைனாக்காரரிடம் ஒப்பந்தம் பேசி கூலி வாங்கிக்கொண்டு பண்டிகையும் பூசையும் பார்ப்பனர் ஏற்படுத்தி இருந்தால், பட்டாசு வாங்காதீர்கள் கர்ப்பூரம் கொளுத்தி புகையாக்காதீர்கள். என்று நாம் சொன்னால் அது மத துவேஷமும் சாமி துவேஷமும் ஆகுமா என்று கேட்கின்றோம். இந்தப் பார்ப்பனர்கள் இப்படியே நம்மை மிரட்டி மிரட்டி கை கண்டு விட்டாலும் நம்மில் சில கேனைங்களும் வயிற்று சோற்று ஆசாமிகளும் அவர்களுடன் சேர்ந்து திரிவதாலும் பார்ப்பனர் சொல்வதெல்லாம் செலாமணி யாகி வருகிறது இன்னும் அப்படி நடக்கப்பார்த்துக்கொண்டிருக்கப் போகின்றீர்களா? சுயமரியாதைக்காக உயிர் விடப்போகிறீர்களா என்று கேட்கின்றோம்.

அநுதாபம் செலுத்துகிறோம்.

நமது தலைவர்களில் ஒருவரான மதுரை ஜனாப் கா. ம. அலாவுதீன் ராவுத்தர் அவர்களின் மாண்பு சான்றமனைவியார் மண்ணுலகை நீத்ததாகக் கேள்விப்பட்டு அளவிலாத் துயர் அடைகின்றோம். ஆண்டவன் அவருக்கு சாந்தியளிப்பாராக. அவர் தம் குடும்பத்தாருக்கு நமது பூரண அநுதாபம் செலுத்துகின்றோம்.

விண்ணுற்றார்.

செங்கல்பட்டு ஜில்லா சைதாப்பேட்டை தாலுக்கா போர்டு பிரசிடெண்டும், பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்துக்கு பாடுபட்டு வந்தவருமான மகா-ள-ஸ்ரீ கே. டி. பார்த்தசாரதி ரெட்டியார் அவர்கள் 27-11-27 தாம் போய்க்கொண்டிருந்த மோட்டார்கார் கவிழ்ந்து விட்டதால் அதனால் அதிக காயம் பட்டு மதராஸ் சென்ட்ரல ஆஸ்பத்திரியில் 3 நாள் இருந்து 30—11...27 ல் மாணமானார் எனக்கேட்டு வருந்துகிறோம்.

பார்ப்பனரல்லாதார் கக்ஷி சட்டசபை மெம்பர்களுக்கு

ஓர் எச்சரிக்கை.

புதிய சட்டசபை கூடி சுமார் ஒருவருஷ மாகின்றது. இந்த ஒரு வருஷ காலத்தில் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு சட்டசபையின்மூலம் நிகழ்ந்த நன்மைகள் என்னவென்று பார்ப்போமானால் ஒன்றும் இல்லையென்று சொல்ல வேண்டியதுடன் பல கெடுதிகள் நடந்திருப்பதாகவும் சொல்லாமலிருக்க முடியாது.

புது சட்டசபை கூடிய உடன் முதன் முதல் நடந்த சங்கதி பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தில் இருந்த தாலூக்கா ஜில்லா போர்டுகளை பார்ப்பன ஆதிக்கத்திற்கு கொண்டுவர முயற்சிக்கப் பட்டது. அதிலும் பார்ப்பனர்களே சிறிது வெற்றிபெற்றார்கள்,

அடுத்தபடியாக 'ஜஸ்டிஸ்' மந்திரிகள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த சர்வகலாசாலை யுனிவர்சிட்டி சட்டத்தை திருத்தி அந்த இலாக்கா முழுவதும் பார்ப்பனமயமாக்க ஸ்ரீ சத்தியமூர்த்தியால் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு சட்டசபையில் இருக்கிறது.

மூன்றாவதாக, பார்ப்பனரல்லாதாரை ஒழிக்க பெரிதும் போராடி பாடுபட்டு வருவதாகிய வருணாசிரம தர்மத்திற்கு சட்டசபை ஆதரவளித்து வருவதற்கு அறிகுறியாகப் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற பாகுபாடுகளுக்கு ஆதாரம் கற்பிக்கப்பட்டது. இன்னும் இதுபோன்ற மற்றும் பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவைகள் அவ்வளவும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமானதும் பார்ப்பனரல்லாதார்களுக்கு பிரதிகூலமும் கொடுமையும் இழிவுமானது என்பதில் சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார் யாருக்கும் சந்தேகமிருக்காது.

இது நிற்க பார்ப்பனரல்லாதார்களுக்கு அனுகூலமாய் ஸ்ரீமதி முத்துலக்ஷிமி அம்மாளால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது, அதாவது கோவில்களின் பேரால் சில பெண்களுக்கு பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடும் வழக்கத்தை நிறுத்த ஒரு சட்டம் கொண்டு வரும்படி சர்க்காரை கேட்டுக்கொள்ளுகின்றது என்கின்ற தீர்மானம். இது நிறைவேறி இருந்தாலும் காரியத்தில் ஒரு பலனையும் கொடுக்கத் தக்கதல்லவென்றே சொல்லுவோம். சர்க்காரை கேட்டுக்கொள்ளும் காரியம் என்ன பலனடையும் என்பது யாவருக்கும் தெரிந்ததுதான். அதுவும் பார்ப்பனர் சட்ட மெம்பராய் இருக்கும் காலத்தில் என்ன காரியம் நடைபெறக் கூடும் என்பதும் நன்றாய் தெரிந்த விஷயம் தான். இத்தீர்மானம் கூடாது என்பதற்கு பார்ப்பன சூழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. இதைத் தவிர வேறு எவ்வித முக்கிய தீர்மானமும் கொண்டுவரப் பட்டதாகவும் தெரியவில்லை. 4, 5 தடவை சட்டசபை கூடியாய்விட்டது. இதற்குள் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட நன்மை பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்படவில்லை. பார்ப்பனர்கள் சுமார் 15 பேர்தான் சட்டசபையில் உண்டு. பார்ப்பனரல்லாதார் புற்றீசல் போல் பலபேர் இருக்கின்றார்கள். இவர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்காகவே சட்டசபைக்கு போவதாக பறை சாற்றி பெரிய கிளர்ச்சி செய்து பார்ப்பனரல்லாதாரின் ஓட்டுகளைப்பெற்றுப் போனவர்கள் இதுவரை என்ன செய்தார்கள். எத்தனை தீர்மானங்கள் கொண்டு போனார்கள் என்று கேட்கின்றோம். மந்திரி வேலைக்குபிரயத்தினப்பட்டதும், முடியாமல் போன பிறகு மந்திரிகளுடன் சண்டை போட்டதும், மந்திரிகளை மிரட்டி நியமனங்கள் பெற்றதும் அல்லாமல் வேறு என்ன காரியம் செய்ய முடிந்தது என்று பாமர மக்கள் நினைக்கும்படியாகத்தானே இருக்கின்றது. அதே காரியங்களைத்தானே பார்ப்பனர்களும் செய்து வருகின்றார்கள். பார்ப்பன சூழ்ச்சிகளை எதிர்த்து வருவதை ஒரு வெற்றியாக சொல்லிக் கொள்ளலாம், ஆனாலும் இதுவேதானா நமது லக்ஷியம் என்று கேட்கின்றோம்

எத்தனை மகாநாடுகளில் நமது நலத்தைக் குறித்து எவ்வளவு தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன? அத்தீர்மானங்கள் அமுலில் வருவதற்கு சட்ட சம்மந்தமான ஆதரவுகள் வேண்டியவைகளுக்கு சட்டசபை மெம்பர்கள் ஆதரவு பெற முயற்சித்தார்களா? ஸ்தல ஸ்தாபனங்களில் நடக்கும் அக்கிரமங்களை ஒழிக்க ஏதாவது முயற்சித்தார்களா? பார்ப்பனரல்லாதார்களுக்கு சரியான பிரதிநிதித்துவமில்லாத இலாக்காக்களில் பிரதிநிதித்துவம் கிடைக்க முயற்சித்தார்களா என்று கேட்கின்றோம். ஒரு சமூகத்திற்கே பிரதிநிதிகளாகப் போய் தங்கள் காரியங்களை மாத்திரம் பார்த்துக் கொண்டார்கள் என்று சொல்லும்படி நடந்துகொள்வது போக்கியப் பொறுப்பாகுமா? பார்ப்பன மெம்பர்கள் வெகு சொற்பமாய் இருந்தாலும் அவர்களது சமூக முன்னேற்றத்திற்கும், நமது சமூகத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து இழிவு படுத்தவும் எவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள்? அந்த உணர்ச்சி ஏன் பார்ப்பனரல்லாதாருக்கும் இருக்கக் கூடாது என்று கேட்கின்றோம். "காங்கிரஸ்" "தேசியம்" என்பவைகள் எப்படி பார்ப்பனர்கள் உத்தியோகம் சம்பாதிக்கும் ஸ்தாபனங்களாக இருக்கின்றதோ, பார்ப்பன ஆதிக்கத்துக்கு உபயோகப் படுத்திக்கொள்ளும் ஸ்தாபனங்களாக இருக்கின்றதோ, அதுபோலவே பார்ப்பனரிடம் இருக்கும் உத்தியோகங்களை பார்ப்பனரல்லாதார்களில் யாரோ சிலர் கைப்பற்றக் கூடியதாக மாத்திரம் இருக்கின்றது என்று நமது எதிரிகள் கருதும்படியாகவே நடந்து கொண்டு வந்திருக்கிறார்களேயல்லாமல் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் பாடுபடும் கருத்தும் வரவர மறைந்து வருகிறது. எவ்வளவோ ஊக்கமும் எழுச்சியும் உள்ள இந்தக காலத்தில் கூட ஒரு காரியமும் செய்ய முடியவில்லையானால் இனி எப்போதுதான் சாதிக்க முடியும். ஆதலால் பார்ப்பனரல்லாத சட்ட சபை மெம்பர்கள் ஒரு கூட்டம் கூட்டி, மீதி உள்ள காலத்திற்குள் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக என்ன என்ன மசோதா கொண்டுபோக வேண்டியது என்று ஒரு முடிவுக்குவந்து, அவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இதுவரை செய்தவேலைகள் கண்டிப்பாய் திருப்தி அற்றதென்றும், அடுத்த தேர்தலில் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக் கொள்வது மாத்திரம் ஓட்டு பெறக்கூடிய யோக்கியதாபத்திரமாகாதென்றும், செய்த வேலையை காட்டவேண்டிய நிலைமை முதலியவைகள் கண்டிப்பாய் நேரிடுமென்றும் இப்போதே எச்சரிக்கை செய்கின்றோம்.

ஸ்ரீநிவாசய்யங்காரும் மிரட்டலும்.

ராயல் கமிஷனில் மகமதிய சமூகம், அதாவது எந்த எந்த மாகாணத்தில் அச்சமூகம் அதிகமாயிருக்கின்றதோ அங்கெல்லாம், அதாவது பஞ்சாப், அலஹாபாத், கல்கத்தா முதலிய இடங்களில் உள்ள பிரபலஸ்தர்களும் மகமதிய பிரதிநிதிகளும் பஹிஷ்காரக் கூட்டத்தில் மகமதியர் சேரக் கூடாது என்று தீர்மானித்து விட்டதை அறிந்த ஸ்ரீநிவாசய்யங்கார் அம்மகமதியர்களை மிரட்ட ஆரம்பித்திருக்கின்றார். அதாவது பஹிஷ்கார இயக்கத்தில் மகமதியர்கள் சேராவிட்டால் சர்க்காருடன் தாங்கள் சேர்ந்துகொண்டு மகமதியர்களை துன்புறுத்த நேரிடும் என்று சொல்லுகின்றார். இது ஸ்ரீநிவாசய்யங்கார் சொல்லுவதல்ல, அந்த ஜாதி சொல்வது என்றுதான் கொள்ள வேண்டும். அக்கூட்டம் இதுவரை அப்படியேதான் செய்துவந்திருக்கின்றது. இந்து அரசாங்கத்தை ஒழித்து மகமதிய அரசாங்கத்தை கொண்டு வந்ததும் இந்த கொள்கைதான். மகமதிய அரசாங்கத்தை ஒழித்து வெள்ளைக்கார அரசாங்கத்தைக் கொண்டுவந்ததும் இந்தக் கொள்கைதான். இப்போது அந்த வெள்ளைக்கார அரசாங்கத்தையும் மிரட்டி தங்கள் ஆதிக்கத்தை பலப்படுத்திக்கொண்டு வருவதும் இந்த கொள்கைதான். ஆகவே சுயமரியாதை உள்ள மகமதியர்கள் இதற்குச் சரியான பதில் கொடுப்பார்களே அல்லாமல் பயந்துகொண்டு ஸ்ரீ அய்யங்காருக்கு வால் பிடித்துக் கொண்டு திரியமாட்டார்கள் என்றே நினைக்கின்றோம்.

விடுதலையடைந்த கைதிகளுக்கு ஒழுங்கான காலக்ஷேபம்.

நாளது டிசம்பர் 14-உ மாலை 5, 30 மணிக்கு திருநெல்வேலியில் ஜில்லா கலெக்டர் அவர்கள் பங்களாவில், ஜில்லா கலெக்டர் கனம் எ. எம். எ, சி. ஜே. கலெட்டி துரையவர்கள் தலைமையில், சென்னை நகரபரிபாலன சபைத்தலைவர் திவான்பகதூர் நாராயணசாமி செட்டியார் அவர்கள் "விடுதலையடைந்த கைதிகள் ஒழுங்கான காலக்ஷேபம் செய்ய உதவிசெய்ய ஏற்பட்டிருக்கும் சங்கத்தின் நோக்கங்களைப்பற்றி ஒரு அரிய சொற்பொழிவு செய்வார் என்று திருநெல்வேலி ஜில்லா கிளைச்சங்க காரியதரிசி தெரிவிக்கிறார்,

(8-ம் பக்கத் தொடர்ச்சி).

முதலியவைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதை ஒழிக்கவேண்டும்.

திரு சந்தோஷம் அவர்களின் சொற்பொழிவு.

நான் பள்ளிக்கூட உபாத்தியாயராக இருப்பதால் பற்பல ஜாதிப்பிள்ளைகளும் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். என் பள்ளிக்கூடத்தில் காண்பிக்கப்படும் வித்தியாசந்தான் உலகமெங்கும் பரவுகிறது. நம்மை முன்னுக்கு வரவொட்டாமல் பிராமணர்கள் பல விதத்திலும் தடுத்து வருகின்றார்கள். நம்மவர்களில் 'திருவள்ளுவர்' போன்ற கவிகள் தோன்றினால் அவர்கள் பெயரை வெளிப்படுத்தாது அவர்கள் மீது பலவித அகௌரவமான கதைகளையும் எழுதிவைத்து விடுவார்கள். நம் நூற்களில் திருவள்ளுவர் பெரிய கவி என்று கூறப்பட்டிருந்தால் அவர்கள் அவரைப் போற்றுவதற்கு பதிலாக, அவன் ஒரு பிராமணனுக்குப் பிறந்திருக்கிறான் எனவும், அதனால்தான் அவ்வளவு அறிவாளியாக இருக்கிறான் என்றும் கதை கட்டிவிடுவார்கள். இன்னும் ஒவ்வொருவரும் அவரவர் ஜாதித்தொழிலைத்தான் செய்து உயர்வடைய வேண்டுமென்று கூறுகிறார்கள். இதெல்லாம் பிராமணர்களின் சூழ்ச்சியே. புரோகிதன் புரோகித தொழிலை செய்ய விரும்புகிறானா என்று தான் கேட்கிறேன். இதெல்லாம் பேடிகள் சொல்லும் சொல். ஆண்மைத்தனம் அறிவு சுயமரியாதையுள்ளவர்கள் சொல்லும் வார்த்தையா இது? கடவுள் பெயரையும் சடங்குகளையும் சொல்லி நம்மை ஏமாற்றிப் பணம் பறிப்பதனால் தான் நாம் சுயமரியாதையில்லாதவர்களாயிருக்கிறோம். பிராமணர்களின் சூட்சியையும் வஞ்சனையையும் நம்மக்களுக்கு எடுத்துக்கூறினால் இது கலியுகமென்றும் 'இப்படித்தான் வேதம்பொய்' சடங்குகள் மூடக்கொள்கைகள், என்று சொல்லத் தொடங்கிவிடுவார்கள் என்றுகூறி விடுகிறார்கள். இராமாயணம், பாரதம் முதலியவைகளைப்பார்த்தாலும் அக்காலத்திலும் ஜாதிச் சண்டைகளும், சுயமரியாதைப்போராட்டங்களும் இருந்திருக்கின்றன. இனி வருணஜெபம் செய்தால்தான் மழை பெய்யும், திதி செய்தால்தான் பிதுர்கள் மோக்ஷலோக மடைவார்கள், என்று சொல்லி பணம் பறிப்பதை நம்மக்களுக்குச் சொல்லி அதைத்தடுக்க விரும்புவோமானால் அவர்கள் 'காலம் கெட்டுப்போய் விட்டது' என்கிறார்கள். மக்களுக்குள் சமத்துவத்தையும் நன்னெறிகளையும் போதிக்கவேண்டியிருக்க இப்பிராமணர்கள் தங்களைப் பெருமைபடுத்திக்கொள்வதும் மற்றவர்களைத் தாழ்த்திக் கூறுவதும் அவர்களின் சூட்சியும் சுயநலத்தையும் தவிர வேறல்ல. நம்முடைய புராணங்களில் இம்மாதிரி செய்கைகளும் வித்தியாசங்களும் மலிந்து கிடக்கின்றன.

பிராமணர்களுக்கு நன்றியறிவே கிடையாது. என்னிடம்படித்த பிள்ளைகள் நூற்றுக்கணக்காக இருந்திருக்கிறார்கள் இப்போது பிராமணரல்லாதவர்கள் தான் என்னைப் பார்க்க வருகிறார்கள். பிராமணப் பிள்ளைகள் ஒருவரும் வருவதில்லை. பிராமணரல்லாத மாணவர்களுக்கு ஒரு சிறிது உபகாரங்கூட செய்ததில்லை. பிராமணர்களுக்கு எவ்வளவோ நான் உதவிசெய்திருக்கிறேன். எனது அனுபவத்தில் அவர்களுக்கு நன்றியறிதல் கிடையாது என்று சொல்வேன். பிற நாடுகளில் ஆகாயக்கப்பல் முதலியபல அற்புதவேலைகளைச்செய்திருக்கின்றனர். ஆனால் நம்முடைய தேசத்திலோ 4 வேதம் 6 சாஸ்திரம் 18 புராணம் என்றும் இதற்குள்தான் அறிவு இருக்கிறதென்றும் அதற்கப்பால் இல்லையென்றும்எழுதிவைத்திருக்கிறார்கள். அதையும் நாம் படிக்கக்கூடாது என்கிறார்கள். அப்படியிருக்கும்போது நாம் எந்த அற்புதத்தைக் கண்டு பிடிப்பது? இன்னும் சகுனம் என்று ஒன்று இருக்கிறது. பூனை குறுக்கே போனால் எப்பேர்ப்பட்ட தைரியசாலியும் கூட பின்வாங்க நேரிடுகிறது. இத்தகைய வேதங்கள் இருக்கையில் நமக்குத் தைரியம் ஏது? மற்ற நாட்டினர்களைப் போல் அறிவாளர்களாகவும், தைரியசாலிகளாகவும் நாம் இருக்க முற்படவேண்டுமானால் நமது சுயமரியாதைப் போரை நடத்தி நம்முடைய மூடக்கொள்கைகளையெல்லாம் அறவே ஒழிக்க வேண்டும்.

ஸ்ரீ சாரங்கபாணி நாயுடு

பேசியதாவது:—நாம் பிராமணர்களின் மீது துவேஷம் பொறாமைகொண்டு இப்பிரசாரம் செய்துவருகின்றோமென்று சொல்லப்படுகிறது. அவ்விதத்துவேஷம் நமக்கு இல்லை. ஆனால் நாம் சுயமரியாதை பெற்று உண்மையான மனிதர்களாகவேண்டுமென்பதற்காகத்தான் ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர் போன்ற தலைவர்கள் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி பிரசாரம் செய்து வருகின்றனர். மக்களுக்குள் உயர்வு தாழ்வு இல்லையென்றும், சடங்குகள், திதி முதலியவைகளின் பேரால பிராமணர்களுக்குப் பணம் கொடுத்து அவர்கள் காலில் விழக்கூடாது என்றுந்தான உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் திருப்பதிகோவிலுக்கு வருஷத்தில் காணிக்கையாக 17 லட்சம் ரூபாய் வருகிறது. இவ்வளவு ரூபாயும் நம்மக்கள்தான் கொண்டு போய் கொட்டுகின்றார்கள். இத்தத்தொகை எப்படிச் செலவழிக்கப் படுகிறதென்பதற்குக் கணக்கே கிடையாது. அப்படி ஏதாவது கணக்கிருந்தாலும் அதில் அரிசி, பாசிப்பயறு, சர்க்கரை, நெய், பாதாமி, பச்சக் கல்பூரம், உப்பு, புளி, மிளகு, வத்தல் என்று தான் எழுதப் பட்டிருக்கிறது. அதையும் பாப்பனர்தான் தின்று கொழுத்துவிடுகிறார்கள். நம்மவர்களில் எத்தனைபேர் வயிற்றுக்கில்லாமல் தவிக்கின்றனர். நாம் எலும்பும் தோலுமாக இருக்கின்றோம். இன்னும் கடவுள் என்று சொல்லப்படும் சிலைகளுக்குக் குடம் குடமாக பாலைக் கொண்டுபோய்க் கொட்டுவது வீண் என்பதை நீங்கள் உணர வேண்டும். பாலை இப்படிக் கொட்டுவதிலா கடவுளுக்குப் பிரியம என்று எண்ணுகிறீர்கள். எத்தனை ஏழைகள் எலும்பும் தோலுமாகக் கோவிலைச் சுற்றி உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்தால் அது புண்ணிய மாகாதா? ஸ்ரீமான் காந்தியும் கூட ஆதிதிராவிடர்கள் அனுமதிக்கப் படாத ஆலயங்களில் கடவுள் இல்லையென்று கூறியிருக்கின்றார். ஆகையால் கனவான்களே நாம் பல விதத்திலும் பிராமணர்களால் ஏமாறறப் படுகிறோம். அதனால் நாம் தரித்திரர்களாகித் தவிக்கின்றோம். மதத்தின் பேராலும் சடங்குகளின் பேராலும் ஏமாற்றப் படுவதைத் தடுக்க வேண்டும். நாம் நம்முடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இச்சுயமரியாதை இயக்கம் இன்றியமையாதது. இவ்வூரிலுள்ள மாணவர்களுங்கூட இதில் மிகுந்த சிரத்தை காட்டி வருகிறார்கள். ஆகையால் இச்சுயமரியாதை இயக்கத்தைப் பலப்படுத்தி அதன் மூலம் நமது அடிமைத் தனத்தை நீக்கி உண்மையான மனிதர்களாக இருக்க முயலவேண்டும்.

மனுதர்மசாஸ்திரத்துக்கு நெருப்பு வைத்தல்.

பின்னர் அக்கூட்டத்திலுள்ள சிலர் அந்த மனுதர்ம சாஸ்திரப்பிரதியில் மண்ணெண்ணை விட்டுக் கொளுத்தினார்கள் (பலத்த கரகோஷம்) பிறகு தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 8 மணிக்கு இனிது கலைந்தது.

சமபந்தி போஜனம்.

எல்லோரும் சமமாக உட்கார்ந்து போஜனம் செய்யும் பொருட்டு திராவிட சங்கக் காரியதரிசி ஸ்ரீ. வி. ஆறுமுக முதலியார் அவர்கள் தமது சொந்தச் செலவில்தலைவர்களுக்கும் மற்றும் பல பிரமுகர்களுக்கும் ஒரு விருந்தளித்தார் சுமார் 50 பேர்கள் ஒன்றாக உட்கார்ந்து சமபந்தி போஜனம் செய்தார்கள்.

பார்ப்பனரல்லாதார் மகாநாட்டை ராமேஸ்வரத்தில் நடத்த வேண்டுகோள்.

நாளது மாதம் 4ந்தேதி நமது சுயமரியாதையின் சுடராகிய 'திராவிடனில்' பிராமணரல்லாதார் முறையீடு என்ற தலையங்கத்துடன் இராமநாதபுரம் பார்ப்பனரல்லாதார் மகாநாடு நடைபெறுவதற்கு வேலைசெய்ய முன் வாருங்களென்று அருப்புக்கோட்டை நண்பர் ஸ்ரீமான் சிவ. கு. சிவசுப்பிரமணியம் அவர்கள் முன்வந்திருப்பது இச்சில்லாவின் பாக்கியமே.

ஆனால் ஷை நண்பர் சிவ. கு. சி. அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதென்னவென்றால், ஷை மகாநாட்டை நமது மக்களை தாழ்ந்த ஸ்திதிக்குள்ளாக்கும் புரோகிதப் பார்ப்பனர்கள் நிறைந்த க்ஷேத்திரமாகிய இராமேஸ்வரத்தில் நடத்தினால் நமது சுயமரியாதையின் சுடரானது, காய்ந்த தெர்ப்பைப் புல்லும் கிழிந்த பஞ்சாங்கமும் மஞ்சள் அரிசியும் கைபிடித்து நமது மக்களை இழிவுபடுத்தும் பார்ப்பனர்களின் அட்டகாசத்தை சாம்பலாக்குமென்று எனது சிற்றறிவுக்குத் தோன்றுவதால் அந்தப்படி இராமேஸ்வரத்தில் ஷை மகாநாட்டை நடத்தும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். மு. சே. பிச்சைரூக், பாம்பன்.

ஒரு ஆச்சாரியரின் அடாதசெய்கை

அக்காலத்தில் கல்வி அறிவில் மிக்க தேர்ந்தவர்களாயும், உலக விஷயங்களில் இச்சையற்று மாசற்ற நடையை உடையவர்களாயும், தனது சீடர்களுக்கு உபதேசம் செய்து அவர்களை நல்வழிப் படுத்துவதிலேயே கவலை உடையவர்களாயும் உள்ள உத்தமர்களை ஆச்சாரியர்களாக வைத்திருந்தார்கள். இக்காலத்திலுள்ள ஆச்சாரியர்களில் பெரும்பாலோர் பல விதத்திலும் குறைசொல்லக் கூடும்விதமாக இருக்கின்றனர். பணம் தட்டிப் பறித்துக்கொண்டு போவதற்காகவே பெரும்பாலோர் சீடர்கள் வசிக்கும் இடங்களுக்கு செல்லுகிறார்களே தவிர அவர்களுக்கு வேறு கவலை கிடையாது. தனக்கும் கொஞ்சம் கல்வி அறிவு இருக்கின்றது என்பதை காட்டுவதற்காக தாங்கள் தங்கியிருக்கும் இடங்களில் இரண்டொரு காலக்ஷேபங்கள் செய்து ஏமாற்றுவதும் உண்டு. பணம் பெற்றுக்கொண்டு போவதுடன் நிற்காமல் அவர்களில் சிலருடைய செய்கை அறிவுடையோர் மிக்க வெறுக்கத் தக்க நிலைமையில் நடந்து வருகின்றன. அவ்விதம் தற்சமயம் ஒரு வைணவப் பார்ப்பன மடாதிபதி தேச சஞ்சாரம் செய்துகொண்டு திரிகின்றார். அவர் அநேகமாக செல்லும் இடங்களில் எல்லாம் இரவில் பலரும் அறியத் தான் தங்கியிருக்கும் வீட்டிற்கே தாசிகளை பயமில்லாமல் வரவழைக்கிறார். யாராவது, தாசி இங்கு எதற்காக வரவேண்டுமென்று கேட்டால், இரண்டொரு வயிற்றுச் சோற்றுப் பக்தர்களை தயார் செய்து வைத்துக்கொண்டு அவர்களை விட்டு, தாசிகள் சுவாமிகளிடம் சமாரச்சனை செய்துகொள்ளுவதற்காக வந்து அமர்ந்துகொண்டிருக்கிறார்களென்று சொல்லச் செய்கிறார். இப்பேர்ப்பட்ட ஆச்சாரியரிடத்தில் நமது இளம் பெண்கள் பக்தியுடன் சென்று சமாரச்சனை செய்துகொண்டு 'திரௌபதி வஸ்திராபரணம்' கதையையும் கேட்கின்றார்கள். இவர் பெண் பிள்ளைகளிடத்தில் பேசும்பொழுது ஒரு மாதிரி சிரித்துக்கொண்டும குறும்புத்தனமாகவும் பேசுகிறார் இந்த பார்ப்பனருடைய கர்வமும் இறுமாப்பையும் நமக்களின் மடமையையும் நினைக்கும பொழுது கோபமும் துக்கமும் வராமலிருக்குமா! கன்னிமேயோவிற்கு இவரைப்பற்றித் தெரியாமல் போய்விட்டது போலும் 'தேவிதாஸன்'

கோவை நகரசபை அறிக்கை,

நவம்பர் 18-ல் கூடிய கோயமுத்தூர் முனிசிபல் கவுன்சில் கூட்டம், 1920-ம் வருஷத்திய மதராஸ் டவுன் பிளானிங் ஆக்டின் 10-ம் செக்ஷன் 3-வது பிரிவுப்படி கையாளப்படுவதற்காக 1, 2, & 4-ம் நம்பர் திட்டங்களை மாற்றங்கள் செய்யாமல் இயற்றவும் அங்கீகரிக்கவும் முடிவாகத் தீர்மானித்திருக்கிறது.

திட்டங்களில் அடங்கிய இடத்தின் பிளானை முனிசிபல் ஆபிஸில் ஆபீஸ் நேரத்தில் பார்வையிடலாம்.

சுயமரியாதைக்கு ஜே! நாடார்களுக்கு வெற்றி.

மாயவரம் தாலுக்கா குற்றாலத்தில் சோளீஸ்வர ஸ்வாமிக்கு கார்த்திகை சோமவார அபிஷேக ஆராதனை ஸ்ரீமான் மாரிமுத்து நாடார் அவர்களால் நெடுநாளாய் செய்து வந்ததை ஒட்டி, இவ்வருஷம் கோவில் பஞ்சாயத்தார் திரு. நடேசம் பிள்ளை அவர்களும் இரண்டு குருக்கள்மார்களும் திரு மாரிமுத்து நாடார் வீட்டிற்குச் சென்று புஷ்பமாலையை திரு நாடார் கழுத்தில் இட்டு திரு பிள்ளையவர்கள் "இவ்வருஷம் தங்கள் அபிஷேக ஆராதனை மிக விமரிசையாக செய்யவேண்டும்" என்று அன்பு பாராட்டி நாடார் இடத்தில் சொல்லும் தருவாயில் நாடார் சங்கவாலிபர்கள் எல்லோரும் ஒன்று கூடி பிள்ளை அவர்களிடம "தாங்கள் ஆலயத்திற்குள் வந்து தெரிசிக்கக் கூடாதென்று நினைக்கும் கடவுள், நாங்கள் அபிஷேக ஆராதனை செய்தால் ரொம்பவும் கோபித்துக கொள்வார்" என்று சொல்ல, பெருந்தகையாகிய பஞ்சாயத்து திரு நடேசபிள்ளையவர்கள் வாலிபர்களை நோக்கி "ஆலயத்திற்குள் யாவரும் பொதுவாய் தெரிசிக்குமிடத்தில் தாங்களும் வந்து தெரிசிக்க உரிமையுண்டு" என சொல்லி அவ்விதமே அன்று தான் சொன்னவாக்கு தவறாமல் தானும் இருந்து யாவரும் பொதுவாய் தெரிசிக்கும் இடங்களிலெல்லாம் எங்களையும் சமமாய் இருந்து தெரிசிக்க அனுமதித்து, பிறகு விபூதி பிரசாதம் முதலியன வழங்கப்பெற்றது எல்லோரும் போற்றக்கூடியது. இத்தகைய காரியமல்லவோ மண்ணுலகும் விண்ணுலகும் பெருமை அளிக்கும். சமரசமாய் தெரிசிக்கவந்த முக்கியஸ்தர்கள்—ஸ்ரீமான்கள் மாரிமுத்து நாடார், சீனநாடார், நமசிநாடார், கு. முத்துகுமார நாடார், கிட்டுநாடார், சின்னையாநாடார், கருப்பையா நாடார், சோணமுத்து நாடார், ஜெகநாத நாடார், ப. ரெத்தினநாடார் ஆகியவர்கள். அன்னியர்களில் ஸ்ரீமதிகள் மூவலூர் ராமாமிர்தம்மாள், நாகரத்தினத்தம்மாள், ஸ்ரீமான்கள் சிவவடிவேல் பிள்ளை, சுந்தரம் நாயுடு, கௌரீசன் பிள்ளை சோமசுந்தரம் பிள்ளை அவர்களும் மற்றும் உள்ள பிராமணர்களும் சைவர்களும எல்லோரும் சமரசமாக இறைவனை வணங்கினது இறைவன் அருளே.

நாடார்சங்க காரியதரிசி, ஜெகநாத நாடார்.

விஜயபுரம் சமரச சமாஜம் எட்டாவதாண்டு நிறைவுவிழா.

சமரச சமாஜத்தின் எட்டாவது ஆண்டு நிறைவுவிழா 14—12—27ல் இவ்வூர் ஸ்ரீ ரேணுகாதேவியம்மன் சந்நிதித்தெருவில் மகா-ள-ள-ஸ்ரீ லெட்சுமி நாராயண செட்டியார் அவர்கள் கிருகத்தில் நடைபெறும் சென்னை தமிழ் "சுயராஜ்யா" மாஜி ஆசிரியர், நெல்லை ஸ்ரீமான் பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை M. A., B. L., அவர்கள் அக்கிராசனம் வகிக்க இசைந்துள்ளார்கள். அவ்வமயம் தாங்களும் தங்களுடைய இஷ்டர்களும் விஜயம் செய்து விழா வைபவங்களை நடத்திவைத்து கௌரவிக்குமாறு வேண்டுகிறோம். சமாஜத்தார்.

பார்ப்பனீய மொழிந்த கிரியைகள்.

(1) கும்பகோணத்தைச் சார்ந்தசாக்கோட்டை என்னும் ஊரில் சன்மார்க்க சிலரும் தனவந்தருமாகிய ஸ்ரீமான் என். முல்லைவன நாயக்கர் அவர்கள் மாமியாரும், பட்டுக்கோட்டை ஸ்ரீமான் சுப்பாமணிய நாயக்கர் பெரிய தாயாருமான ஸ்ரீமதி ஷண்முகத்தம்மாள் காலஞ்சென்றதைமுன்னிட்டுகருமாதி காரியங்களை பிராமண புரோகிதர்களை பகிஷ்காரம் செய்து ஆழ்வாரைக் கொண்டு நடத்தி உறவின் முறையார் பரதேசி ஏழை முதலானவர்களுக்கு அறுசுவையோடு அன்னமளிக்கப்பட்டது.

(2) ஷியூர் பிரபல மிட்டாய் கடை வியாபாரி ஸ்ரீமான் ராமனுஜ சேட் அவர்களின் மாமனார் பால் கோவிந்தலால் காலஞ்சென்றதை முன்னிட்டு செய்த சகல கிரியைகளும் பிராமணரல்லாத புரோகிதர்களைக்கொண்டே செய்யப்பெற்றன

(3) ஷியூர் ஸ்ரீமான் ஆ. நாராயணசாமி நாயக்கா அவர்களின் தகப்பனார் ஸ்ரீமான் ஆறுமுக நாயக்கர் அவர்களின் வருஷாந்திகமும் ஷியார் பெரிய தகப்பனார் சாமு நாயக்கர் அவர்களின் வருஷாந்திகமும் குறிப்பிட்ட தினங்களில் பிராமணரல்லாதார்களைக் கொண்டு விமரிசையாக நடைபெற்றன என்று திரு. கணபதி நாயக்கர் எழுதுகிறார்.

பார்ப்பனீய மொழிந்த திதி.

நாளது நவம்பர் 5௳ செங்கல்பட்டு ஜில்லா சைதாப்பேட்டை தாலுக்கா பரங்கி மலை கிராமத்தில் பட்டு முதலியார் என்கிற பொன்னுசாமி முதலியார் தமது தமயனார் முத்து முதலியார் என்பவருக்கு வருஷாந்திர திதி பார்ப்பனரல்லாதாரைக்கொண்டு நடத்தியதும் தவிர ஏழை மக்கட்கு சுமார் 100 பேருக்கு சாப்பாடும் போட்டு வேஷ்டியும் வாங்கி கொடுத்தார் என்று திரு. அன்னுமுதலியார் எழுதுகிறார்.

புரோகித மொழிந்த திதி,

டிசம்பர் 5 தேதி பூவிருந்தவல்லியில் திருச்சி திருவாளர் டி. சம்பந்தம் பிள்ளை அவர்கள் தமது தாயாரின் திதியன்று பார்ப்பனப் புரோகிதரை வரவழைக்காமல அவ்வூர் வைத்தீஸ்பரர் கோவிலுக்குச் சென்று நெய் விளக்கேற்றி தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு வைத்து தாமாகவே கற்பூர ஆராதனை செய்து கடவுளை தரிசித்துவிட்டு வீட்டுக்குச் சென்று தமது பந்து மித்திரர்களுடன் அன்னம் புசித்தார் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

சென்னிமலை மகா கும்பாபிஷேகம்.

சென்னிமலையின் கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வள்ளி தெய்வயானை யம்பாளுக்கு நிகழும் பிரபவ ௵ கார்த்திகை ௴ 29 ௳ புதன்கிழமை அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறும் என்று சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான டிரஸ்டி ஸ்ரீ செங்கோட்டு வேலப்ப கவுண்டர் தெரிவிக்கிறார்.

திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் ஸ்ரீமான் நாயக்கர் அவர்கள் தலைமையில் நிறைவேறிய தீர்மானங்கள்.

1 மாஜி நீதிபதியும், அறநிலைப்பாதுகாப் புக்கழகத் தலைவரும், மக்கள் பொதுநலத் திற்குழைதத பெரியாருமாகிய சர். டி. சதாசிவ அய்யரவர்கள் காலஞ்சென்றமைக் குறித்து இம்மகாநாடு அனுதாபத்தைத் தெரிவிக்கிறது.

2 (a) இந்துக்கள் என்று சொல்லப்படுகிறவர்களுக்குள் ஒரு வகுப்பாரை "சூத்திரன்" என்று சொல்வது மிகவும் கொடுமையாயும், அக்கிரமமாயும் இருக்கிறபடியால் அவ்வகையான வார்த்தையையாரும் எந்தச் சமயத்திலும் உபயோகப்படுத்தக் கூடாதென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

(b) அரசியல் சட்ட புத்தகங்களிலும் வேறு பல ஆதாரங்களிலும் "சூத்திரர்" என்ற வார்த்தை இருக்கக் கூடாதென்பதோடு சூத்திரருக்கு வேறு நீதி, பார்ப்பனருக்கு வேறு நீதி என்பதாக ஒரு வகுப்புக்கு ஒரு நீதி என்றுள்ள சட்டங்களையெல்லாம் மாற்றவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

(c) சென்னை அரசாங்க இலாகா முதன் மந்திரி சமீபத்தில் சட்டசபையில் காட்டிய ஒரு ஆதாரத்தில் "சூத்திரன்" என்கிற பதத்தை உபயோகித்திருப்பதைக் குறித்து இம்மகாநாடு வருந்துகிறதுடன் அதனை உடனே மாற்றவேண்டுமென்று கேட்கிறது.

3 புகைவண்டி நிலையங்களில் இந்து மக்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற உண்டிச் சாலைகளில் பார்ப்பனர்..பார்ப்பனரல்லாதார் என்று பாகுபாடு செய்திருப்பதானது பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதைக்கு மிக்கதொரு அவமானத்தை விளைவிப்பதால் அவ்வகையான வேற்றுமையை ஒழிக்கும்படி புகைவண்டி யதிகாரிகளை கேட்கிறது.

ரயில்வேகாரர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கிற உண்டிச்சாலைகளில் பார்ப்பனர்கள் மாத்திரமே சமையல் செய்கிறவர்களாயிருந்து வருகிற வழக்கத்தை மாற்றி விடுமாறு ரயில்வே அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறது.

4 முனிசிபல் எல்லைக்குள்ளிருக்கிற ஒவ்வொரு உண்டி...சிற்றுண்டிச் சாலைகளுக்கும் அந்தந்த முனிசிபல் சேர்மெனவர்களால் கொடுக்கப்படுகிற லைசென்ஸ் உத்திரவில் பார்ப்பனர்...பார்ப்பனரல்லாதார் என்று பேதப்படுத்தி இடங்களை வேறு வேறாகப்பிரித்து இருக்கக்கூடாதென்று நிபந்தனை ஏற்படுத்துவதுடன் முந்தி கொடுக்கப்பட்டுள்ள உத்திரவுகளிலும் மேலே கண்ட படி திருத்திக்கொடுக்கவேண்டுமாய் ஒவ்வொரு முனிசிபல் சேர்மெனவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

5 வருணாசிரமம் என்று சொல்வது மனிதசமூகத்திற்கே பொருத்தமற்றதும் குறிப்பாகத் தமிழ் நாட்டு மக்களை பிரித்துவைத்துக்கொடுமைப் படுத்துவதற்கு உபயோகப்படுவதாயிருக்கிறபடியால் எந்த அர்த்தத்திலும் நாம் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும், வர்ணாசிரமத்தை ஆதாரமாகக் கொண்ட மனுதர்ம சாஸ்திரம் முதலிய ஆதாரங்களை அடியோடு ஒழித்துவிடவேண்டுமாய் இம்மகாநாடு முடிவு செய்கிறது.

6 மகாத்மா காந்தி தென்னாட்டு சுற்றுப் பிரயாணத்தில் தமிழ் மக்களுக்கு வர்ணாசிரமத்தைப் பற்றி சொற்பொழிவு செய்ததையும், விரிவுரை செய்ததையும் ஒப்புக்கொள்ளாததோடு, "சூத்திரன்" என்ற வார்த்தையை உபயோகித்ததையுங்கூடமாய்க்கண்டிக்கிறது.

7 இந்து சமூகத்திற்குச் சம்பந்தப்பட்டதென்று சொல்லப்படுகிற கோயில், குளம், சத்திரம் முதலிய எல்லா விடங்களிலும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லப்படுகிற எல்லாமக்களுக்காவது சம உரிமை கொடுக்கப்படவேண்டுமென்று இம்மகாநாடு முடிவுசெய்கிறது.

8 கோயில்களில் கடவுளை வழிபடுகிறதற்கு இடையில் தரகர்கள் வேண்டியதில்லையென்றும், ஒவ்வொருவருக்கும், நேரகவே கடவுளை வந்தனை வழிபாடு செய்து பூசனை புரிவதற்கு உரிமையுண்டென்றும், அதனை இது முதலே ஒவ்வொருவரும் நடவடிக்கைக்குக்கொண்டுவரவேண்டுமென்றும் இம்மகாநாடு முடிவு செய்கிறது.

9 எந்த இலாகாவின் அதிகாரிகளும் தமக்குக்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு நியமன சம்பந்தமாய் சிபார்சு செய்தல் கூடாதென்று தன்னுடைய கவர்ன்மெண்டு உத்தரவு பிறந்த பிறகும் நீதி இலாகாவின் தலைவர் சர். சி. பி. ராமசாமி அய்யர் சென்னை மாகாண உயர்தர நீதி மன்ற வெள்ளைய ஜட்ஜ் ஒருவருக்கு தனக்கு வேண்டிய ஒரு பார்ப்பனரை முன்சீப் ஜாப்தாவில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கடிதமனுப்பியதை இம்மகாநாடு கண்டிப்பதோடு கூட சென்னை சட்டசபை பார்ப்பனரல்லாத அங்கத்தினர்களை அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஏகமனதாய் நடத்தும்படி இம்மகாநாடு கேட்டுக்கோள்ளுகிறது.

10 இந்துக்குடும்பங்களில் கணவர் இறந்த பிறகு மறுமணம் செய்து கொள்ள விருப்பமில்லாத பெண்மக்களுக்கு தங்கள் கணவரால் பயன் படுத்தி வந்த சொத்துக்களின் உரிமைகொடுக்கப்படபேண்டுமென்று முடிவு செய்கிறது.

11 இந்து சமூகம் என்று சொல்லப்படும் குடும்பச் சொத்துகளில் பெண்மக்களுக்கும் ஆண்மக்களுக்கு ஒத்த சொத்துரிமை கொடுக்கப்படவேண்டுமென்று முடிவு செய்கிறது.

12 நாட்டில் சாதி மத வேற்றுமைகளிருந்து வரும் வரை ஒவ்வொரு சாதி மதத்தினருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

13 பார்ப்பனரல்லாதாரின் ஆதிக்கத்தில் இருக்கிற இலாக்காக்களில் உள்ள சகல உத்தியோகங்களிலும் 100 க்கு 90 வீதம் பார்ப்பனரல்லாதாரையே நியமுகம் செய்யும்படி இம்மகாநாடு அவ்விலாக்காக்களின் தலைவர்களைக்கேட்டுக்கொள்கிறது.

14 கல்வியிலாக்காக்களில் உபாத்தியாயர்களும், உத்தியோகஸ்தர்களும் பெரும்பாலும் பார்ப்பனர்களாயிருப்பதால், அதாவது பார்ப்பனர்களின் கொள்கைப் படிக்கே பார்ப்பனரல்லாத மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பெருந்தடையாயிருக்கிறது. அவ்விதம் தடைபடாமலிருப்பதற்கு பார்ப்பனரல்லாதவர்களை 100 க்கு 90-க்குக் குறையாமலிருக்கும் படி உத்யோகஸ்தர்களையும், உபாத்தியாயர்களையும் நியமனம் செய்ய வேண்டுமென்றும், டீச்சர்ஸ் டிரெயினிங் ஸ்கூல்களில், 100க்கு 90 வீதம் பார்ப்பனரல்லாதாரையே அவசியம் சேர்த்துக் கொள்ளவேணுமாயும் அந்தந்த இலாகா

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியாக்கிற்று. இரண்டாவது விஷயம் தேவர்களுக்கெல்லாம் அரசனாயிருப்பவன் யோக்கியதையையும்ரிஷிபத்தினியின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று. இந்த இரண்டு விஷயமும் புருஷர்களால் ஒப்புக்கொள்ளப் படவில்லை என்பதையாவது காட்டிற்று. மூன்றாவது விஷயமோ புருஷனும் ஒப்புக்கொண்டான், மாமியும் ஒப்புக்கொண்டாள், சகோதரர்களும் ஒப்புக்கொண்டார்கள், உலகமும் ஒப்புக் கொண்டது என்பதைக் காட்டிற்று. நாலாவது விஷயம், அவதாரங்கள் என்பதின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று.

மிஞ்சியது இராக்ஷதர்கள் என்றும் இராக்ஷச ஸ்திரீகள் என்றும் ஆரியர்கள் எப்பேர்ப்பட்டவர்களை சொல்லுகின்றார்கள் சொல்லி வந்திருக்கின்றார்கள்என்பதையும் ஒருதிராவிடப் பெண்ணின் கற்பின் நிழலுக்குள் ஆரியர்கள் எப்படி வந்து கலந்துகொள்ளுகின்றார்கள் என்பதையும்வெளியாக்கிற்று. இந்த பழமொழி, ஒன்று உலகத்தை ஏமாற்றச் செய்திருக்கவேண்டும் அல்லது இது அவர்களின் பழக்க வழக்கமாயிருக்க வேண்டும். ஆகவே ஐந்துக்கு இரண்டுகூட அவர்கள் சொற்களில் உண்மையில்லை என்பதும், ஏதாவது உண்மையிருந்தால் அதுவும் நம்முடைய விஷயங்களில்தான் என்பதும் இந்த விஷயத்தினால் வெளிப்படுத்துகின்றேன்.

இப்பொழுது எப்படி அவர்கள் அக்கிரமங்களை மறைத்துக்கொண்டும், பெருமையாய் பிரசாரம் செய்து கொண்டும், நம்முடைய யோக்கியமான காரியங்களைக் குற்றம் சொல்லிக்கொண்டும், அதற்கு நம்மவர்களையே கூலிக் கமர்த்திக்கொண்டும் வேலைசெய்து வருகிறார்களோ இதுபோல்தான் இந்த பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்கள் முன்காலத்திலும்செய்துவந்திருக்கின்றார்கள்என்பதோடு, நம்முடைய பாமர ஜனங்கள் இவர்களை அப்போதும் இப்போதும் நம்பி ஏமாந்து வருகிறார்கள் என்பதும்'ஐந்துக்குஇரண்டு பழுதில்லை' என்னும் வியாசத்தால் வெளியாக்கப்பட்டது.

அதிகாரிகளை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

15 இந்த ஜில்லாவில் ஒவ்வொரு தாலூகாவிலும் ஒவ்வொரு பெரிய ஊரிலும் சுயமரியாதைச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

16 பார்ப்பனரல்லாத மக்களுக்கு நேரான முறையில் பகிரங்கமாய் சுயமரியாதை உணர்ச்சியை வளர்த்து வரும் 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' 'குடி அரசு' 'குமரன்' முதலிய பத்திரிகைகளை கட்டாயமாய் ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டுமென்று இம்மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

17 அரசாங்க வைத்தியசாலைகளில் பார்ப்பனர்களுக்குத் தனி வார்டுகள் ஒதுக்கி வைப்பதை பலமாய்க் கண்டிக்கிறது.

18 வைக்கம் வீரரான உயர் திரு ஈ.வெ ராமசாமி நாயக்கரவர்கள் பார்ப்பனரல்லாத சமூகத்தார் தங்களின் சுயமரியாதையைக் காக்க கண்ணைத் திறந்து விட்டு எல்லா வழிகளிலும் அவர்களின் சமூதாய நிலையை உயர்த்த பெரும் பாடுபட்டு வருவதைப் பாராட்டி நன்றி செலுத்துகின்றது.

19 சென்னை கார்பொரேஷனில் சமீபத்தில் நடந்தேறிய தலில். பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் ஒருவரும் தலைவராக வரக்கூடாதென்று செய்த சூழ்ச்சிகள் அனைத்தும் பார்ப்பனரல்லாத மக்களுக்கு நன்றாய் விளக்கி விட்ட படியால் பார்ப்பனரல்லாதார் ஒவ்வொருவரும் தங்களுடைய ஓட்டுரிமைகளை எந்த ஸ்தாபனங்களிலும் பார்ப்பனரல்லாதார்களுக்கே கொடுத்துத் தேர்ந்தெடுக்கும்படி இம்மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

20 கடவுள் பெயராலும், மதத்தின் பெயராலும் பெண்களுக்குக் கோயில்களில் பொட்டுக்கட்டி, பொதுமகளிராச் செய்வது இந்த சமூகத்திற்கே பெரிய அவமானமும், அவமானமும் உண்டுபண்ணுவதால் அவ்வமையான வழக்கத்தை நிறுத்தவேண்டுமென்று இம்மகாநாடு முடிவு செய்கிறது. இது சம்பந்தமாய் பண்டிதை திருமதி முத்துலட்சுமி அம்மாளவர்கள் செய்து வரும் முயற்சியை இம்மகாநாடு பாராட்டுகின்றது.

இம்முயற்சிக்கு கேடு கருதிவரும் திரு சத்தியமூர்த்தி கூட்டத்தார் அறியாமையினாலும் தங்கலங்கருதியும் செய்து வரும் எதிர்ப் பேச்சுகளை இம்மகாநாடு மிகவும் உரமாய்க் கண்டிக்கிறது.

21 கிராமங்களில் அதிகமான பள்ளிக்கூடங்களும், சித்த மருந்துவச்சாலைகளும் ஏற்படுத்த வேண்டுமென்றும், ஆதிதிராவிடக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் சம்பளம் ரத்து செய்யப்படவேண்டுமென்றும் அரசினரை இம்மகாநாடு கேட்டுக்கொள்கின்றது.

22 சென்னை அரசினரால் தமிழ் அறிவியல் நூற்கள் எழுதிப் பாடமாக்க ஏற்பாடு நடைபெறுகின்றதில், அறிவியற் சொற்களெல்லாம் இதுகாறும் வடமொழி உருவாக அமைக்கப்பட்டு வந்திருப்பதை இம்மகாநாடு கண்டிக்கிறதோடு அறிவியற் சொற்களையெல்லாம் தூய தனித்தமிழ் மொழியிலேயே அமைக்கவேண்டுமென்றும், தமிழில் அமைக்கக்கூடாத இடங்களில் மட்டும் பிற மொழிகளில் அமைக்கலாமென்றும் சென்னை கல்வி இலாகா மந்திரியவர்களுக்கு இம்மகாநாடு தெரிவிக்கிறது

23 பார்ப்பனரல்லாத கூட்டத்தாருள் சடங்குகளில் நம்பிக்கை இருக்கிறவர்கள் பிறவியில் உயர்வு—தாழ்வு என்கிற வேற்றுமையில்லாத பெரியவர்களைக் கொண்டுதமது சடங்குகளை தமிழ்மொழியில் நடத்திக் கொள்ள வேண்டுமென்று இம்மகாநாடு முடிவு செய்கிறது.

24 நாட்டின சுயமரியாதையையும், பொருளாதாரத்தையும் கருதி ஒவ்வொருவரும் கதரை ஆதரிக்கவேண்டுமென்று இம்மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

25 பார்ப்பனரல்லாதார் பொருள் கைத்துறைகளிலும் பார்ப்பனரல்லாதாரையே அடையுமாறு ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரையும் செய்யும்படி இம்மகாநாடு வேண்டுகிறது

26 சுயமரியாதைக்காக தமிழ் நாட்டில் செய்யப்படும் சத்தியாக்கிரகத்திற்கு இம்மகாநாடு முழு ஆதரவு கொடுக்கத்தயாராகவிருக்கிறதாகத் தெரிகிறது.

27 கல்பாத்தி பார்ப்பனர்கள் வசிக்கும் பார்ப்பனச் சேரியில் வெகுகாலமாய் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நடக்கக்கூடாதென்று பார்ப்பனர்கள் செய்து வந்த கொடுமை நீங்கி எல்லாமக்களும் அவ்வீதி வழி நடக்கத்தகுந்த வெற்றி கிடைத்தமைக்கு இம்மகாநாடு சந்தோஷத்தை அறிவிக்கிறதுடன் அதுவே நமது சுயமரியாதை இயக்கத்திற்கு ஓர் வெற்றிக்குறியென்றும் கருதுகின்றது.

28 சென்னை பச்சையப்பன் கலாசாலை டிரஸ்டிகள் ஆதிதிராவிடர்களை இந்துக்கள் என்று ஒப்புக்கொண்டதோடு அவர்களையும் பள்ளியிற் சேர்த்துக் கொண்டமைக்கு இம்மகாநாடு மகிழ்கின்றது.

அதற்கு மாறாக நின்ற திரு வெங்கடேச சாஸ்திரலு என்ற பார்ப்பனரைக் கண்டிக்கிறதோடு அக்கூட்டத்தாரை இனி டிரஸ்டிகளாக நியமிக்கக் கூடாதென்றும் பொது ஜனங்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

மேலும், சமூக ஒற்றுமையையும், நியாயத்தையும் கருதி, பச்சையப்பன் கலாசாலையில் கிருஸ்துவ மாணவர்களையும், மகமதிய மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

29 இம்மகா நாடு சென்னை மணலி விடுதி சொந்தக்காரர்களை பார்ப்பனரல்லாதாருக்கு அதிகமான இடங்கள் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

30 திருவையாறு வடமொழிக் கலாசாலைக்காக தஞ்சை ஜில்லாபோர்டார் செலவு செய்து வரும் தொகையில் ஒரு பகுதியை மீதிவைத்து ஆதிதிராவிடர்களின் பொதுக் கல்வி அபிவிருத்திக்காக செலவிடவேண்டுமென்று இம் மகாநாடு ஜில்லா போர்டாரைக் கேட்டுக்கொளகிறது.

31 ராயல் கமிஷன் என்பதை பகிஷ்காரம் செய்யவேண்டுமென்கிற அரசியல் கூட்டத்தாரில் நமது பார்ப்பனரல்லாதார் சேர்ந்துகொள்ளக்கூடாதென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகின்றது.

சுயமரியாதையே சுதந்திர வாழ்வு.

சென்ற 27-11-27 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு பாலக்காடு பெரிய கடை கர்ணகை அம்மன் கோவிலிலிருந்து கல்பாத்தி முதலிய அக்கிரார வீதிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு பிரவேசனச் சுதந்திரமும் உரிமையும் உண்டுபண்ணின ஆரிய சமாஜ போதகர் திருவாளர் பிர்ம்மசாரி வேதபந்து அவர்களை மேள வாத்தியத்துடன் ஊர்வலமாக படிஞ்ஞாற்றின் புறம் பிரதமக் கல்விசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பிறகு இவ்வூர் பொது மக்களின் ஆதரவில் ஸ்ரீமான் வேதபந்து அவர்களுக்கு நன்றியறிதல் செலுத்த ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று. அவ்வமயம் இவ்வூர் பிரபல வக்கீலும், பிர்மஞான சங்கத்தைச் சார்ந்தவருமாகிய ஸ்ரீமான் A. N. ராமய்யர் அவர்கள் தலைமை வகித்தார். பிறகு ஸ்ரீமான்கள் கைவல்ய சாமிகள், பி. எஸ். பாரதியார், மலையாள பண்டிதர் குஞ்ஞு, கோபால கிருஷ்ண சோதிடர் முதலியவர்கள், இந்நாட்டில் குடி கொண்டிருக்கும் தீண்டாமையைப்பற்றியும் ஸ்ரீமான் வேதபந்துவின் சிறந்த தொண்டைப்பற்றியும் பேசினார்கள். திரு. பாரதியார் இக்கூட்டம் கல்பாத்தி முதலிய கிராம வீதிகளில் தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கு பிரவேச சுதந்திரம் உண்டு பண்ணின ஸ்ரீமான் வேதபந்து அவர்களுக்கு நன்றி அறிதலைச் செலுத்திக்கொள்ளுகின்றது என்ற ஓர் பிரேரபணையைக்கொண்டு வந்தார். அது எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. பின் மாஜீ உயர் மன்ற நீதிபதியும், சென்னை தேவஸ்தான இலாக்காத் தலைவரும் ஆகிய காலஞ் சென்ற சர். டி. சதாசிவய்யரின் மரணத்தை குறித்த அனுதாபத்தை அவரது குடும்பத்திற்கு தெரியப்படுத்தும் பொருட்டு ஓர் பிரேரேபணை எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறிற்று. அக்கிராசனரின் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

ஓர் மகிழ்ச்சி.

ஸ்ரீமான் ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஸ்ரீமான் சுப்பராயலு நாயுடு அவர்களுடன் மலேயா நாட்டுக்கு 'குடி அரசு' பத்திரிகையின் கொள்கைகளைப் பரப்பும் விஷயமாய் சென்றிருக்கும் விஷயம் முன்னமேயே அறிந்திருக்கலாம்.

அங்கு அவர்களை அந்நாட்டு வாசிகள் மிக்க அன்புடன் வரவேற்று வேண்டிய ஆதரவளித்து வருகின்றார்கள் என்கின்ற செய்தியைக் கேட்க நமது வாசகர்கள அதிக மகிழ்ச்சியடைவார்கள்.

தவிர கூலாலம்பூரில் ஸ்ரீமான்களான துரைசாமி பிள்ளை, N. V. விஸ்வலிங்கம், பொன்னையா, சந்திரசேகரம், தம்பிராஜு, சுப்பையா இன்னும் மற்றவர்களும் பத்திரிகை விஷயமாயும் முயற்சி எடுத்து வேண்டிய ஆதரவளித்து வருவது மிகுதியும் நமது நன்றிக்குரியதாகும். விவரமான ஜாபிதா பின்னால் பிரசுரிக்கப் படும்.

32 இன்று நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் அமுலுக்கு வர, சர்க்கார் சட்ட சம்பந்தமாக ஆக வேண்டியகாரியங்களுக்கு நமது சட்டசபைப் பிரதிநிதிகள் வேண்டிய முயற்சி யெடுத்துக்கொண்டு அவைகளை நிறைவேற்றி வைக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றது.

எங்கும்

பார்ப்பனப் புரட்டு.

மலாய் நாட்டுச் செய்தி.

ஆடு நனைகிறதென்று ஓனாய் அழுகிறது.

மலாய் நாட்டில் இரண்டொரு வாரங்களுக்கு முன் உண்மைச் சுயமரியாதைக் காரர்கள் 'தமிழ் நேசனின்' அட்டூழியங்களைக் கண்டித்துத் துண்டுப் பத்திரிகை மூலமாக வெளியிட்டிருப்பதை மலாய் நாட்டுத் தமிழ் மக்கள் நன்குணர்ந்திருக்கலாம். அதற்கு இந்தியாவில் சுயமரியாதைத் தலைவர்கள் ஒருக்கால் ஆதரவளித்து விட்டால் இப் போலி நேசனின் வயிற்றுப் பிழைப்புக்கும் நேசனது குலத்தோரின் வயிற்றுப் பிழைப்புக்கும் எங்கு கெடுதி வந்துவிடுகிறதோ வென்று, ஆடு நனைவதைக்கண்டு ஓனாய் ஓலமிடுவதைப் போல் 23—11—27ல் நேசனில் வெளியிட்டிருக்கும் "மலாய் நாட்டில் காசுமரம் காய்க்கிறது" என்கிற வியாசத்திலும் "சாதித்ததென்ன" என்கிற வியாசத்திலும் எழுதியிருக்கிறது.

அதன் சாராம்சம் என்னவென்றால், மலாய் நாட்டில் ஓரற்புதமான காசுமரம் காய்க்கிறதென்றும், அது தற்சமயம் நன்றாய் பழுத்து குலுங்குகிறதென்றும், இதற்காக இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் நல்ல கெட்டிக்காரர்களாக மட்டும் வந்தால் காசுகளைப் பை பையாகக் கொண்டு போகலாமென்றும், இது மெய்ப்பிக்க வேண்டி வருடத்திற்கு 80000 புட்டி எரிச்சல் தண்ணீரை மலாய் நாட்டிலுள்ள ஏழை கூலிக்காரர்களிடம்விற்று காசு மூட்டை கட்டுகிறவர்களையும், பத்திரிகை என்ற பட்டங்களையும் ஆகாயத்தில் பறக்க விட்டுக்கொண்டிருக்கும் காற்றாடிபத்திராதிபர்களையும், கள்ளுக் கடையிலே சத்திரம் கட்டினோரையும் கண்டுக் கேட்டுத் தெளியலாம் என்கிறார். போதாததற்கு ஒன்றைக் காட்டி ஒன்றைப் பறிக்கும் எதுவுள்ள நாடென்றும் சொல்கிறார்.

முதலாவது மலாய் நாடு காசு காய்க்கிற மரமென்று இன்னாட்டில் வந்து அட்டையைப் போல் பற்றிக் கொண்டு மக்களின் முன்னேற்றத்திற்கு இடையூறான மதுவைக்குடிக்க வேண்டும் "இதுவே ஆகாரமும் பானமும் ஆகிறது" என்றும், "உயர்தரமான ஸ்டௌட், உயர்தரமான போத்தலிலடைத்தது" என்றும்ஜனங்களின்கண்ணையும் மனதையும் கவரும்படியாக தமது பத்திரிகையின் முக்கியமான இடங்களில் பிரசுரித்து அதற்காக கூலிப் பணமும் பெற்று கொஞ்சமும் மனம் நாணாமல் தன்னினத்தாரை மற்றோரினத்தாருக்கு பல வழிகளிலும் உட்படுத்தி சந்தோஷிக்கக் காட்டியும் கூட்டியும் செய்யும் காரியங்களைச் செய்பவர்கள் அன்ய நாட்டிலிருந்து வந்து இரண்டு நாளில்போகிறவர்களா? அல்லது இந்தப் போலி நேசனா வென்பதை வாசகர்கள் அறியாமலிருக்க முடியாது.

இரண்டாவதாக 80000 புட்டி எரிச்சல் தண்ணீரை இந்திய கூலிகள் தலையில் போட்டு காசு வாங்குகிறார்கள் என்கிறார். எத்தனை ஆயிரம் புட்டி மதுக்களை இந்திய ஏழைகள் பிழைப்புகளுக்கு அறிவித்து அன்னிய நாட்டு வியாபாரிகளுக்கு ஆதாயத்தை உண்டுபண்ணித் தருவதற்கு தன்னையும் தன் பத்திரிகையையும் ஆட்படுத்திபிழைப்பவர்கள் யார் யென்பதை வாசகர்கள் அறியாது விடார்கள்.

மூன்றாவதாக பத்திரிகை என்ற பட்டங்களை ஆகாயத்திற் பறக்க விட்டுக்கொண்டு வருகிற காற்றாடி பத்திராதிபர் என்கிறார். 'தமிழ் நேசன்' முதலில் மலாய் நாட்டிற்கு வரும்போது 'தமிழகம்' என்னும் தமிழர்கள் பத்திரிகையை உத்தரிப்பதாக வந்து, தமிழகம்என்னும் பத்திரிகை தமிழ் மக்களுக்கிடையில் தனது பெயரே இல்லாது போகும் வரை நேசன் உதவி செய்து விட்டு, இப்பொழுதும் தமிழ் மக்களின் திரவிய சகாயத்தால் மற்றொரு வழியாகிய 'தமிழ் நேசன்' என்னும் பெயரால் இம்மாலாய் நாட்டை உத்தரித்து விடுவதாக நீலிக்கண்ணீர் வடித்தெழுதுவதைத் தவிர இவர் உண்மை தேசாபிமானியாக விருப்பாரேயானால், பார்ப்பனன் ஒவ்வொரு தமிழ் மக்களது காசுகளை பிள்ளைப்பேறுக்கென்றும், வீடு கூட்ட என்றும், மொட்டை யடிக்க வென்றும், காது குத்தவென்றும், பள்ளியில் பயில வென்றும், காயலாவுக்கு சாந்தி என்றும், ஜபத்திற்கென்றும், கலியாணம் செய்யவென்றும் ஷை மணமக்கள் சுகித்துப் புணர்வதற்கென்றும், ஷஷ்டியப்பூர்த்திக்கென்றும் சாவுக்கென்றும், கருமாதிக்கென்றும், தற்பணத்திற்கென்றும் பல மாதிரியாக மலாய் நாட்டு தமிழ் மக்களைப்பற்றிப் பிடுங்கித் தின்னும் பார்ப்பனக் கழுகுகளைக் குறித்து ஒன்றுமே பேசாது விட்டுவிடுவாரா? இத்தகைய கொடும் செயல்களைக் கண்டித்தெழுதியும் ஊரூராகச் சென்று இக்கொள்கைகளைப் பரப்பித் தமிழ் மக்களின் முன்னேற்றத்தையே நாடி உழைப்பவர்களை மட்டில் பேசுவதென்றால் எங்கு தங்களுடையவும் தங்களினத்தாருடையவும் தொழில்களுக்கு ஆபத்து நேரிடுகிறதோ என்று ஓலமிடுகிறதைத்தவிர வேறு இதை என்னென்று நினைப்பது. தவிர, இதே மலாய் நாட்டுக்கு இதற்குமுன் எத்தனையோ பார்ப்பனர்களும் பார்ப்பனத்திகளும் வந்து பணம் மூட்டையாய் கட்டிக்கொண்டு போனதற்கு 'தமிழ் நேசன்' ஒரு வரியாவது எழுதவில்லை. ஆடு நனைகிறதென்று ஓனாயழுகிற தென்பதை ஒத்து நடக்கிற விஷயங்களை தமிழ் மக்கள் அறியமாட்டார்களெனப் பார்ப்பன நேசன் எழுதத்துணிந்தனன் போலும்.

'சுதேச மித்திரன்' என்னும் போலிப் பெயர் புனைந்த பார்ப்பன மித்திரன் ஏஜண்டு வந்து பணம் கொள்ளை அடித்ததும் 'சிந்தாமணி' என்னும் போலிப் பெயர் புனைந்த பார்ப்பன மணி பத்திராதிபர் என்கின்ற பெயரால் ஸ்ரீமதி பாலாம்பாள் என்கின்ற பார்ப்பனப் பெண் வந்து பல வழிகளிலும் பணம் மூட்டை கட்டிக்கொண்டு போனதும், 'தேசபக்தன்' என்னும் பார்ப்பன பக்தன் பத்திரிகை ஏஜண்டாக ஒரு பார்ப்பனன் வந்து பணம் கொள்ளை அடித்துக்கொண்டு போனதும், 'குருகுலம்' என்னும் போலிப் பெயர் கொண்ட பார்ப்பன குலம் ஆசாரியர் என்று ஒரு திருட்டு பார்ப்பனன் வந்து பணம் கொள்ளை அடித்துக்கொண்டு போனதும் இந்த தமிழ் நேசன் என்னும் போலிப் பெயர் புனைந்த பார்ப்பன நேசன் கண்ணுக்குத் தெரியாமல் போகும்படியான அவ்வளவு குருடும், ஊமையுமாக நேரிட்ட காரணம் என்ன? இன்னும் எத்தனை பார்ப்பனர்கள் அங்குபோய் பார்ப்பனரல்லாதார் பணத்தைக் கொள்ளை கொள்வதையும் ஏன் கவனிக்கவில்லை. அன்றியும் இத்தனை பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதார் பணத்தையே கொள்ளை அடித்து பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே கேடு சூழ்வதையும் யார் அறியார்கள். ஆதலால் பார்ப்பனர்களுடைய கொடுமையும் அயோக்கியத்தனமும் புரட்டும் பார்ப்பன பிரசாரமும் இந்தியாவில் மாத்திரமல்லாமல்வயிற்றுப் பிழைப்புக்காகப் போனவிடங்களில் கூட இருந்து வருகிறது என்பதற்கு மலாய் நாட்டு 'தமிழ் நேசன்' செய்கையே போதிய சான்றாகும். இனியாவது சுயமரியாதையுள்ள உண்மையான தமிழ் மக்கள் 'தமிழ் நேசனின்' உண்மை விஷயத்தை அறியக்கூடுமா? என்று கேட்கிறோம்.

மலேயா வாசி.

உயர் திரு நாயக்கர் வருகை,

லால்குடி தாலூகா சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவிலும் பூவாளூர் தமிழர் கூட்டுறவுக்கழகத்தின் ஆதரவிலும் நாளது பிரபவ கார்த்திகை 25ம் நாள் (10—12—27) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பூவாளூர் ஐயனார் கோவில் முன்னிலையில் ஓர் பெருங் கூட்டம் கூடும்,

அதுபொழுது 'குடி அரசு' பத்திராசிரியரும் வைக்கம் வீரரும், ஈரோடு ஈ, வெ, ராமசாமி நாயக்கர் அவர்கள் 'நமது சுயமரியாதை' என்பதைப்பற்றி அருமையாகப் பேசுவார்கள். அதுகாலை திருச்சி ஜில்லா சுயமரியாதைச் சங்கத்தினர் பலரும் நமது ஊருக்கு விஜயம் செய்கின்றார்கள். தமிழ் மக்கள் அனைவரும் இந்த நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விடாமல் குறித்த காலத்தில் தவறாமல் வந்திருந்து பெரும்பயனடைய வேண்டுகின்றோம்.

வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்கள்.

கட்டி வெள்ளி நகைகள்

இனாம்! 1928-வருஷ காலண்டர் இனாம்!

துப்புரவான வேலைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு, செயின், அரைஞாக்கொடி, கெங்காதரக் கொடி, பீலி வகையறுக்களும், இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகைறுக்களும், அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையறுக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 கெ. லேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விலைகளை குறைத்து இருக்கிறோம். வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்

விலாசம்,

தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்

சருப் & ஜவுளி வியாபாரம்

குகை, சேலம். (S. India)

தந்தி விலாசம்

"சராப்" சேலம்

ஸ்ரீ சரஸ்வதி கான சபா, கோயமுத்தூர்.

சங்கீதக் கச்சேரி.

1927-ஞு டிசம்பர் மீ 14-உ புதன் கிழமை இரவு 9 மணிக்கு

வெறைட்டி ஹாலில் சங்கீத கச்சேரி நடைபெறும்.

கனவான்களே!

நமது நகரில் சங்கீத அபிவிருத்தியின் பொருட்டு ஓர் சபை ஏற்படுத்த வேண்டுமென்ற அவா பலருக்கும் நெடுநாளாய் இருந்து வந்ததை நிவர்த்திக்கும் பொருட்டே இச்சபையானது புதிதாய் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

சபையின் ஆரம்ப விழாவை இச்சபையின் அபிமானிகளான தென்னாட்டிற் சிறந்த கீழ்க்குறிப்பிட்ட பஞ்ச வித்வ ரத்தினங்களும் ஒன்று சேர்ந்து நடத்த முன்வந்துள்ளார்கள். நமது நகரில் இவ்வைவரும் ஒருங்கே சேர்ந்து நடத்தும் கச்சேரி இதுவே முதல் தடவையாகும்.

ஆகையால் கனவான்களனைவரும் விஜயஞ் செய்து சபையை ஆதரிக்க வேண்டுகிறோம்.

காஞ்சீபுரம்	... திருவாளர்	நாயினா பிள்ளை என்கிற C. சுப்பிரமணிய பிள்ளை	அவர்கள்	... பாட்டு
திருச்சி	... ,,	T. கோவிந்தசாமி பிள்ளை	,,	... பிடில்
புதுக்கோட்டை	... ,,	தெட்சணாமூர்த்தி பிள்ளை	,,	... கஞ்சரா
பழனி	... ,,	முத்தையா பிள்ளை	,,	... மிர்தங்கம்
மன்னார்குடி	... ,,	பக்கிரிசாமி பிள்ளை	,,	... கொனக்கோல்

டிக்கட்டுகளின் விபரம்:—ரூ **5. 3. 2. 1.** ஸ்திரீகளுக்கு ரூ. **3. 2. 1.**

ஸ்திரீகளுக்கு பிரத்தியேகமான இடம்கொடுக்கப்படும்.

10—12—27 முதல் அடியிற் குறிப்பிட்ட இடங்களில் டிக்கட்டுகள் விற்கப்படும்

1 அவனாசி ரோட் ... தாசே கவுண்டர் கம்பெனி
2 ஒப்பணகார வீதி: ... மாடான் பாங்கு, லிமிடெட், கட்டிடம்
3 ரங்கே கவுண்டர் வீதி: ... சி. வெ. வேலாசாமி செட்டியார் & சன்ஸ் ஜவுளிக்கடை

☞ கச்சேரி தினத்தன்று வெறைட்டி ஹாலில் காலை 10 மணி முதல் டிக்கட்டுகள் விற்கப்படும்.

ரர்வ்பகதூர்
C. S. ரத்தினசபாபதி முதலியார் M. L. C.
பிரஸிடெண்டு

R. K. ஷண்முகம் செட்டியார்
B. A., B. L., M. L. A.
வைஸ் பிரசிடேண்ட்

V. அருணாசலம் செட்டியார்
C. V. V. சுப்பைய செட்டியார்
R. A. சிவாநந்த முதலியார்
காரியதரிசிகள்

ஒரு பாப்பானின் மோசச்செயல்.

சேலம் ஜில்லா நாமக்கல் தாலூக்கா பொத்தனூர் புதுப்பாளையம் என்னும் கிராமத்தில் வசித்துவரும் ஒரு பார்ப்பனன் வீரணம் பாளையம் கிராமத்தில், வெள்ளாள ஜாதி விதவைப் பெண் ஒருத்தியிடம் புஞ்சைநிலம் ஒன்று 600 ஆறுநூறு ரூபாய்க்கு விலைபேசி சப் ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் ரூபாய் 600 ரொக்கமாய் கட்டுவதாக விபரங்கண்டு பத்திரத்தில் எழுதி 1927-ஞு நவம்பர் மாதம் 22 தேதி செவ்வாய்க்கிழமை தினம் பரமத்தி சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பத்திரம் ரிஜிஸ்டர் ஆகும் சமயத்தில் ரூபாய் கட்டும்படி சப்ரிஜிஸ்ட்ரார் அவர்கள் கேட்டதில் அப்பார்ப்பனன் தன் மகன் வெளியில் ரூ ாய் வைத்திருப்பதாயும் அதைத்தான் போய் வாங்கிவருவதாயும சொல்லி சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீசை விட்டு வெளியே வந்து தான் வேறு பக்கமாக குறுக்குப் பாதையில் தன் ஊருக்கு ஓடி விட்டான். பின்பு நிலத்துக்குடைய விதவை ஓடோடித் தேடியும் காணாமல் சப்ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில்வந்து குய்யோ முறையோ என்று கத்திக்கொண்டதின் மேல் அவர் பத்திரத்தை பதிவு செய்து அந்த பத்திரத்தின் மேல் இந்த கிரையத்திற்கு ரூபாய் செல்லுபடியாக வில்லை என்று எழுதி அதையும் பதிவுசெய்து கொண்டாரென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி).

கும் சொல்லுங்கள்! மனிதனை மனிதன் தாழ்த்தி அடிமைப் படுத்தித் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்காகக் கடவுள் பேரால் எவன் சாஸ்திரம் காண்பிக்கிறானோ அவன கடவுள் சபையில் கழுதையாவான். முதல் முதல் வாலிபர்களான நீங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான சாஸ்திரங்களையும் அவசியமில்லாத சாஸ்திரங்களையும் கொடுமையான சாஸ்திரங்களையும் கடவுள் கொடுத்திருப்பாரா என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள். செலவழிந்த பணம் போக மீதியிருக்கும் பணமும் போவதற்குமுன் வீண் சடங்குகளையும் கர்மங்களையும் விட்டு விடுங்கள். சடங்குகள் செய்து செய்து கெட்டுப்போன குடும்பங்கள் இப்பொழுது எங்கிருப்பதையும் பாருங்கள். பாப்பானைப்போல் படியுங்கள். பயில்வான்களைப் போல தேகத்தை வைத்துக்கொள்ளுங்கள்! உலகபோகத் திருநாளுக்கு நீங்களும் விருந்தாளியாவீர்கள்.

சூத்திரன் என்று உன்னைச் சொல்லிக் கொள்ளாதே.

சூத்திரன் என்றால் வேசி மகன் என்று பொருள்.

"தொழிலாளி" கௌரவ ஆசிரியரின் ராஜிநாமா.

போத்தனூரில் ஜனாப் வேக்ஷர்வர் அவர்களால் நடத்தப்படும் "தொழிலாளி" என்னும் தமிழ் வாரப்பத்திரிகைக்கு இதுகாறும் கௌரவ ஆசிரியராயிருந்த பட்டுக்கோட்டை ஸ்ரீமான் பி. எஸ். தண்டபாணி செட்டியார் தமக்கும் பிரதம ஆசிரியருக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்கருதி கௌரவ ஆசிரிய பதவியினின்றும் விலகிக்கொண்டதாக எழுதுகிறார்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

வார்கள் ஆதலால் அந்தணர் என்னும் பெயர் அவர்க்கே தகும்" என்ற குறளினால் அறியலாம்.

இதுகாறுங் கூறியவாற்றால் உலகிற்கு நன்மை செய்கிறவர்களே உண்மைத் துறவியாவார்களென்பதும், காவித்துணியும், கண்டிகையும், மொட்டைத்தலையும், பொய்வேடமும் உடையவராய் ஏராளமான செல்வப் பொருள்களையும் வைத்துக்கொண்டு, பரிவாரங்களுடன் பல்லக்கேறிச்சுற்றித் திரியும் கூட்டத்தார் துறவிகளல்லர் என்பதும்திருவள்ளுவர்கொள்கை யென அறிந்து கொள்ளலாம். ஆகவே திருவள்ளுவர் கூறிய இலக்கணங்களையுடைய துறவிகளைப் பெற்ற நாடே சீரும் சிறப்பு மடைந்து வாழ்வதாகும். அத்தகைய பேற்றை நமது நாடும் அடையுமாறு யாவரும் இறைவனை வழுத்துவோமாக.

இந்தியாவின் பூர்வீக மறை ஆராய்ச்சிக்குரிய சிறந்த நூல்கள்.

மதசீர்திருத்தக்காரர்களும் தமிழபிமானிகளும் அவசியம் பார்க்க வேண்டிய புத்தகங்கள்.

இந்திரர் தேச சரிதை— ஆரியர் நமது தேசத்தில் வந்து தேசத்தையும், மதத்தையும், மக்களையும், பாழ்படுத்தியதை விவரித்துள்ளது	0—8—0
விசேஷ சங்கைத்தெளிவு 100 அவசியமும் அருமையுமான சங்கைகளை விளக்கியுள்ளது	0—8—0
திருவள்ளுவர் உண்மை சரிதமும் அவரது மதமும்	0—2—0
திராவிடர் பண்டிகைகளின் விளக்கம்	0—2—0
திராவிடர் விவாகங்களின் விளக்கம்	0—2—6
திராம தேவதையான அம்பிகையம்மனின் சரிதை	0—1—6
ஸ்ரீ கஜமுகனின் உண்மை சரித்திரம்	0—1—6
ஸ்ரீ முருகனின் உண்மை சரித்திரம்	0—1—6
அரிச்சந்திரனின் உண்மை சரித்திரம்	0—1—6
புத்த தருமோபதேச அநுஷ்டான நியமம்	0—1—0
வஜ்ஜிரசூசி என்னும் ஜாதி கண்டனம்	0—1—0
நந்தன் சரித்திர விளக்க வினு விடை	0—2—0
யதார்த்த வேஷ பிராமணர் வேதாந்த விபரம்	0—4—0
பூர்வ ஜாதிகளின் உற்பவ பீடிகை	0—4—0
நிகழ்காலத்திரங்கலும் பெருங்குறவஞ்சியும்	0—2—6
விபூதி விளக்க வொளியும் கபோலீசர் விபரமும்	0—0—6
பூர்வத்தமிழொளியாம் ஸ்ரீ புத்தரது ஆதி வேதம். தமிழில் இதைவிட சிறந்தநூல் வேறு கிடையாது கலிகோ பைண்டுசெய்த பெரிய புத்தகம்	3—0—0
புத்தமார்க்க வினு விடை 1 & 2	0—5—0
அசோக சரித்திரம்	0—4—0
வருணபேத விளக்கம்	0—4—0
ஸ்ரீ அம்பிகையம்மன் அருளிய திரிவாசகம்	0—6—0

ஸ்ரீ ஸித்தார்த்தா புத்தக சாலை
சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்
கோலார் கோல்ட் பீல்ட்.

Sri Siddhartha Book Depot
Champion Reefs P. O.
Kolar Gold Field S. I.

பார்ப்பனீய மொழிந்த கலியாணச் சடங்குகள்.

(1) சென்ற 8—9—27-ல் எனது மைத்துனர் குமாரத்திக்கும் நாகை அந்தணர் பேட்டையில் ஸ்ரீமான் அருணாசலம் பிள்ளையவர்கள் குமாரர் திருஞான சம்மந்தமூர்த்தி பிள்ளையவர்களுக்கும்,

(2) 7—11—27-ல் தஞ்சை மானம்புச்சாவடி நெ. 1914 சிவன் கோவில் புதுத்தெருவில் எனது கிருகத்தில் எனது சிரேஷ்ட குமாரன் சிரஞ்சீவி டி. ஜி. நடராஜ பிள்ளைக்கும் எனது பௌத்திரியாகிய சௌபாக்கியவதி சிவஞானவதி அம்மாளுக்கும் பாணிக்கிரகண முகூர்த்தம் விமரிசையாக நம்மவர்களைக் கொண்டு திருமண முடிந்தது.

அச்சமயம் சபையில் சுயமரியாதைப்பிரியர்களும் சகர்களுமான போலிப்பார்ப்பனர்களைப் பற்றி நமது தமிழ் மக்கள் நன்குணரும்படி உபந்யாசம் செய்யப்பட்டது.

இங்ஙனம்,
T. V. கோவிந்தசாமி பிள்ளை.

மிருத்யுஞ் ஜெய ஸம்ரக்ஷணீய வைத்தியசாலை, மாயவரம்.

இவ்வைத்தியசாலையில் மலையாளத்திலுள்ள சிறந்த மூலிகைகளைக் கொண்டு மேலான ஆயுர்வேத முறைபடிக்கு தயாரித்த மருந்துகளும். தயில தாரை, தக்ர தாரை, பழிச்சல், நவரக்கிழி, நஸ்யம், வஸ்தி, ஸ்நேகபானம், சிரோவஸ்தி, வமனம், ரேசனம் முதலிய ஆயுர்வேத முறைப்படிக்கு எல்லா சிகிச்சைகளும் செய்ய படிப்பும் அநுபோகமும் உள்ள ஓர் வைத்தியரும் எப்பொழுதும் தயாராயிருக்கிறார் ஆப்பிரேஷனைத்தவிர மற்றெல்லா வியாதிகளுக்கும் நேரிலும் கடிதமூலமாகவும் நீர விசாரித்து அறிந்து தக்க மருந்து கொண்டு சிகிச்சை செய்யப்படும். அதிக விபரம் அறிய ஆவலுள்ளவர்கள் கடிதம் மூலம் அறிந்து கொள்ளவும்.

முக்கியமான சில மருந்துகளின் விபரம்.

அமிர்த சஞ்சீவி ரசாயனம்.

இது சகல வியாதிகளுக்கும் அமிர்தம் போன்ற தக்க கைகண்ட மருந்து. விசேஷமாய் காஸம்,, க்ஷயம், பிரமேகம் (நீர் ரோகம்) குன்மம், சூலை, குஷ்டம், ரணம், மேகநீர், சொரி, கிரந்தி, வெட்டை இவைகளுக்கும், ரெத்தம் குறைந்து இந்திரியம் நீர்த்துப்போய் இரவில் தூக்கமின்றி தவிப்பவர்கட்கும் இன்றியமையாதது.

விலை சேர் 1-க்கு ரூ. 4—0—0.

காமகல்பக ரசாயனம்.

இது நித்யம் இரவில் சாப்பிட்டு பால் சாப்பிட்டால் சுக நித்திரையும் சம்போக சாமர்த்தியமும் உண்டாவதுடன் மனதிற்கு சந்தோஷத்தையும் திரேகத்திற்கு பலத்தையும் கொடுக்கும். தவிர அஜீர்ணம் கிரகணி குன்மம், சூலை, பித்தவாயு, நீர் ரோகம், வெட்டை, காஸம், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கும் உத்தமமான மருந்து.

விலை சேர் 1-க்கு ரூ. 7—8—0.

இன்னும் உயர்ந்த தைல வகைகளும் தயாரில் இருக்கின்றன. எழுதி தெரிந்து கொள்ளவும்.

Dr. T. S. நாயர்,
M. S. வைத்தியசாலை, மாயவரம்.

உறையூர் சரிகை அங்கவஸ்திரங்கள்.

—:o:—

சரிகைக்கு காரண்டி, உடை நயம்.

அசல் 100 நெம்பர் நூலில் சொந்த கைத்தறி நெசவு தினப்படி உபயோகத்திற்கு ஏற்றதாயும், நாகரீகமாகவும் உள்ள பட்டுக்கரை சரிகை முந்தி 2¾ அகலம் 5முழம் அங்கவஸ்திரங்கள், 1 நெ 1-க்கு ரூபாய் 2—2—0. 2 நெ. 2—6—0 3 நெ. 2—10—0. 4 நெ. 3—0—0. 5 நெ. 3—8—0. 6 நெ. சரிகை சீர் 1—14—0. 7 நெ. சாதா கம்பி 1—12—0. 200 நெ டி. அகலம் முழம் உள்ளது பட்டுக்கரை சரிகை முந்தி அங்கவஸ்திரம் 1க்கு ரூ 3—8—0 முதல் ரூ 6 வரையில் உண்டு. சரிகை கரை சரிகை முந்தி உள்ளது ரூ 6 முதல் 20, 25 வரையிலும் உண்டு மற்றும் பேட்டாக்களும் 3 அகலம் ஜோடிகளும் உண்டு. ஆர்டர் செய்யும்போது கருப்பு, சிகப்பு கரை அல்லது முந்திகளில் சீர் இன்னது இருக்க வேண்டும் என்பதாக எழுதிக் கோருகிறோம்.

N. B:- மலாய் நாட்டில் கமிஷனுக்கு ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதக் கோருகிறோம். வி. பி. தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.

விலாசம்:- மானேஜர்,
ஸ்ரீ சௌடாம்பிகா ஜவுளி வர்த்தகசாலை,
உறையூர் P. O. திருச்சி.

நமது 'குடி அரசு" பத்திரிகையின் விருதுநகர் ஏஜண்டு.

விருதுநகர் புக்டெப்போ ஸ்ரீமான் பி. பழனிக்குமார பிள்ளை அவர்களை நமது ஏஜெண்டாஏற்படுத்தியிருப்பதால் சந்தாதார்கள் சந்தா பாக்கிகளையும், புதிய சந்தாவையும் அவரிடமே கொடுத்து நமது ஆபீஸ் அச்சு ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர், 'குடி அரசு'.

தீராத குஷ்ட ரோகங்களை தீர்க்கும் வல்லமையுடையது பழனி ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகளின் முதல் நெம்பர் தாம்பிரபற்பமேயாகும். ஏராளமான குஷ்ட ரோகிகள் இப்பழனியிலும் வெளியூர்களிலும் சௌக்கியமடைந்து புகழ்ந்து கொண்டாடி வருகிறார்கள். நண்பர்கள் நேரில் விசாரித்தால் உண்மை தெரியவரும். நன்றாய் கவனித்து உண்மையைத் தெரிந்து வாங்கி உபயோகியுங்கள். நமக்கு அண்டப்புளுகு புளுகத்தெரியாது.

☞ அசட்டையால் வரும் ஆபத்தை நீக்கி, யோசிக்கும் திறமையால் குணம் பெறலாம்.

பாலாம்பிகை
டிரேட்மார்க்

அறிக்கை:— என் குருநாதர் ஹரித்துவாரம் மங்களபுரி பாவாஜி பெரிய யோகி மகான். நாலைந்து தலைமுறையாகக் கையாண்டுவந்த இம்முறையை நான் இருபது வருஷ தொண்டு செய்து தெரிந்து கொண்டு சாதுக்கள் அடடாவை விட்டு பழனிக்கு வந்து அநேக கொடிய ரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணம் செய்ததற்குள்ள நற்சாட்சிகள் பலவுள. பக்தர், பிரபுக்கள் வேண்டுகோளுக் கிணங்கி குறைந்த விலைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன. பலவித குஷ்ட ரோகங்களுக்கும் இன்னும் அநேகம் ரோகங்களுக்கும் ஏற்பட்ட அனுபானத்துடன் கொடுத்துக் கைகண்டது. பல சீதோஷ்ண ஸ்திதிக்கும் ஆண், பெண் இருபாலரும் எந்த வயதாயிருந்தாலும் சாப்பிடச் சரியாய் அமைக்கப்பட்டது. அபார சக்தி வாய்ந்தது. வாந்தி முதலிய எவ்விதக் கெடுதலும் செய்யாதது.

முதல் நெம்பர் தாம்பர பற்பம்.

தீரும் வியாதிகள்:— கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல், பெருவயிறு, மகோதரம், நீர் கவசை, குன்மம், அண்டவாய்வு, ஆனைக்கால், சூலை, திமிர், மதமதப்பு, உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம், அழுகி துர்நாற்ற முடையவர்கள், ஆணிப்புண்கள், குழிப்புண், கிரானி, கண்டமாலை, பவுத்திரம் இன்னும அநேக கொடிய ரோகங்களை வெகு சீக்கிரத்தில் 5, 10, 21, வேளைகளில் குணப்படுத்தும்.

விலை விபரம்	முதல் நெம்பர் தாம்பர பற்பம் அனுபான சூரணத்துடன் **21**-நாள் விலை ரூ.	**30**	தபால் சார்ஜ் பிரத்தியேகம்.
	,, ,, ,, ,, **10**-நாள் ,, ,,	**15**	
	2 நெம். ,, ,, ,, **40**-நாள் ,, ,,	**40**	

நற்சாட்சியைக் கவனியுங்கள்;— (1) பழனியில் தாம்பிர பற்பம் என்னும் பொழுது அதன் ஆசிரியரும், உற்பத்தி கர்த்தாவும்—வட இந்தியா இமயகிரிச் சாரல் பெரிய யோகி மகான், மங்களபுரி பாவாஜியின் சீடர் பழனியில் சதானந்த மெடிக்கல் ஹால் வைத்திருக்கும் ஸ்ரீமான் சற்குரு மகாதேவ சுவாமிகள் என்ற ஞாபகம் ஜனங்களுக்கு இருக்கவேணுமாக வற்புறுத்தி சிபார்சு செய்வேன். எங்கள் குடும்பங்களிலேயும் எங்கள் பந்துக்கள் குடும்பங்களிலேயும், எங்கள் சிநேகிதர்களின் குடும்பங்களிலேயும் தீராத ரோகங்களை எல்லாம் தீர்த்து வந்தவர் இவரைத் தவிர வேறு ஒருவரையும் காணோம். சுவாமிகள் அயல் நாட்டிலுள்ள வியாதியஸ்தர்களின் மேல் வைத்துள்ள அன்பு மிகவும் பாராட்டத்தக்கதே. நண்பர்கள் சுவாமிகளின் மருந்தைக் கையாள சகல வியாதிகளும் நீங்கி சுகமடைவார்களென்று நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன். (எம். வேலுச்சாமி நாடாள்வார். மிராசுதார், தாமரைக்குளம் பழனி 8-11-25.)

(2) எனக்குள்ள பெருங் கடினமான குஷ்டரோகத்தைத் தீர்த்தவர் சுவாமிகளே [மாரியப்பக் கவுண்டர் விவசாயி பழனி 14-7-25]

(3) எனக்கு 6- வருஷ காலமாய் உள்ள காபல குஷ்டம் சுவாமிகளின் முதல் நெம்பர் தாம்பிர பற்பத்தால் பூரண குணமடைந்தேன். பி. வி. சேஷப்பர், பழனி தேவஸ்தானம் மணியம். 14-1-25.

(4) ம-ா-ா-ஸ்ரீ மகாகனம் பொருந்திய ஸ்ரீமத் சற்குரு மகாதேவஸ்வாமி அவர்களுக்கு பினங்கு பிறையில் (Prye) சி. வி தோமாஸ் எழுதிக்கொண்டது.—

ஐயா, எனக்கு நீங்கள் அனுப்பிய முதல் நெம்பர் தாம்பிர பற்பத்தை நான் ஐந்து நாள் சாப்பிட்டேன், கருமேக நீர் சம்மந்தமான சகல ரோகங்களும் நீங்கி சுகமாகி விட்டது. இனியும் பாக்கி மருந்து கைவசமிருக்கிறது. கஷ்டப்படுகிறவர்களை சௌக்கியப்படுத்தி ரட்சிக்கும் பொருட்டு கடவுள் உங்களை அவதாரரூபமாக இப்பேர்ப்பட்ட ரோகங்களை சௌக்கியப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தியிருக்கிறார் என நான் உறுதியாய் நம்புகிறேன். இப்படிக்கு சி. வி. தோமாஸ் அனந்தபுரம், பிறை, பினங்கு 16-2-27

(5) பழனி டவுன் சேர்மென் அவர்கள் சொல்வதைக் கவனியுங்கள்:—என் வீட்டிற்கு சமீபமாயுள்ள ஒருபெண்ணுக்கு குமரகண்ட வலிப்பு கண்டு இங்கிலீஷ் டாக்டர்களாலும், நாட்டு வைத்தியர்களாலும் கைவிடப்பட்டு சுவாமிகளின் முதல் நிர். தாம்பிர பற்பத்தால் வெகு சீக்கிரத்தில் சௌக்கியப்படுத்திவிட்டார். சுவாமிகள் வியாதியஸ்தர்களின் விஷயத்தில் பாராட்டும் தயாள குணமும், இரக்கச் சிந்தையும் மிகவும் பாராட்டத்தக்கது. இவர் தயாரிக்கும் பற்பவகைகளும், செந்தூரங்களும், லேகிய வகைகளும், தைல முறைகளும் மிகவும் மேன்மையானதும் அருமையான முறைகளால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சுவாமிகள் டவுனிலுள்ள அநேக கொடிய ரோகங்களையும், அயலூர்களிலுள்ள பிணியாளர்களையும் வெகு ஜல்தியில் சொஸ்தம் செய்கிறார். மேலும் வியாதியஸ்தர்களால் அநேக நற்சாட்சிகளும் பெற்றிருக்கிறார். ஷை சுவாமிகளிடம் அயலூர்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும், மருந்து சாப்பிடலாமென்ற விஷயத்தையும் இவருடையபெருமையை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வதில் எனக்கு பிரியம் அதிகம்.

M. P. மங்கல கவுண்டர். காணியாளர், மிராஸ்தார், முனிசிபல் சேர்மென் & பழனி தேவஸ்தானம் ஆனரரி டிரஸ்டி.

விவரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள். ஆர்டர் செய்யுங்கள். மற்ற ஏராளமான நற்சாட்சிகளை நமது கேட்லாக்கில் பார்க்கவும்.

மலாய் நாட்டில் உள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ 5 அனுப்பவும்

தங்கபற்பம், வெள்ளி பற்பம் முதலிய விளம்பரத்தை அடுத்தவாரப் பதிப்பில் பார்க்கவும்

ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்.

சதானந்தா மெடிக்கல் ஹால் பழனி· மதுரை ஜில்லா, தென்னிந்தியா·

தந்தி விலாசம்:— "சற்குரு" பழனி. Tel-address. "Sarguru" Palni.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.